தமிழீழ ஆவணக் காப்பகம்

# எரிமலை

ஜூன் 1998



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அன்புடன் எரிமலை ஆசிரியர் குழுவுக்கு,

தாங்கள் அனுப்பிவைத்த ஜனவரி, பெப்ரவரி திங்கள் 'எரிமலை' இதழ்கள் கிடைக்கப் பெற்றேன். மிக்கநன்றி.

ஏட்டில் இருப்பவை
சிங்கள ஆட்சியின் கொடுமைகள்– அவை
நெஞ்சை நெருடும் கருத்துக்கள்
இவ்விதழ்கள் சிங்கள அரசுக்குச் சாட்டை!
செந்தமிழர் சிந்தனைக்கு வேட்டை!

நான் எழுதிய "வரலாற்றில் தமிழ் ஈழம்", "தமிழ் ஈழப் போர்ப்பாணி" எனும் நூல்கள் எரிமலை இதழுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன. மீண்டும் அவைகள் அஞ்சல்வழி வருகின்றன.

அவற்றில் உள்ள கவிதைகளும், கருத்துக்களும் எரிமலை இதழில் மிளிரட்டும்.

என் பாட்டுத்திறத்தாலே
தமிழர்படை திரளட்டும்!
தமிழீழம் வெல்லட்டும்!
துணிந்து நில்! துணிந்து செய்!
தமிழ் வெல்க!

உணர்ச்சிக் கவிஞர்
சிங்காரவேலன்
காவேரி சாலை
திருச்சி– தமிழ்நாடு

★★★

தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவிற்கு,


வணக்கம்

"நீதியின் நிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள். பரலோக ராஜ்ஜியம் அவர்களுடைய. என் நிமித்தம் (இயேசு.....) உங்களை நிந்தித்து துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வீர்களேயானால், நீங்கள் பாக்கியவான்களாய் இருப்பீர்கள், சந்தோஷப்பட்டுக் களி கூறுங்கள். பரலோகத்தில் உங்கள் பயன் மிகுதியாய் இருக்கும்"

இது விவிலியம் விளம்பிய பொன்னுரை.

"நான்கு பக்கமும் வேடர் சூழ்ந்திட நடுவில் சிக்கிய மான்போல்"

தாங்கள் தாய்மண் மீட்சிக்குச் சந்திக்கும் பகையை எண்ணுங்கால் நெஞ்சம் விம்முகிறது. அடுத்த கணம் பூரிப்படைகிறது. என்று தமிழன் தன் கொத்தடிமைத் தனத்திலிருந்து மீளுவான்? தாங்கள் தமிழ் நிலத்திற்கு வழி காட்டுகிறீர்கள்.




# அக்கறைப் பூக்கள்

தொடர்ந்து நமது வெளியீடுகள் கிடைக்கிறது. படிப்பதும், பரப்புவதுமே எமது பணி.

தமிழ்த் தகவல் வெளியிட்ட "சர்வதேச இனப் படுகொலைக் குற்றம் இலங்கையின் தமிழ் மக்களின் நிலை" என்ற நூல் எங்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யவும்.

என்றும் தோழமையுடன்
த. மருவி
பெங்களூர்
இந்தியா

★★★

மதிப்பிற்குரிய ஆசிரியர் அய்யா அவர்களுக்கு,

வணக்கம். தங்களின் இவவிடுதலைக்கு போர் முரசாக உள்ள 'எரிமலை' இதழை படிக்கப்பெற்றேன். தோழர் ஒருவரின் மூலமாக எனக்கு அந்த வாய்ப்பு கிடைத்தது. செய்திகள் தமிழீழ விடுதலையின் தேவையையும், உண்மை நிலையை உணரவும் வாய்ப்பாக அமைந்தது கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்தேன்.

நான் 'தமிழர் பண்பாட்டுக் கழகத்தின்' பொருளாளராக இருக்கின்றேன். இப்பண்பாட்டுக் கழகத்தை துவக்கி வைத்தவர் அய்யா நெடுமாறன் அவர்கள் ஆவார். 6.6.97 அன்று நடைபெற்ற ஈழத்தமிழர் ஆதரவு 'பந்த்' முழுமையாகவும், வெற்றிகரமாகவும் நடைபெற்ற ஊர்களில் சத்தியமங்கலம் முதன்மையான ஊராகத் திகழ்கின்றது. இதற்கு காரணம் தமிழர் பண்பாட்டுக் கழகத்தை சார்ந்த உறுப்பினர்களே ஆகும்.

இப்பண்பாட்டுக் கழகத்தின் உறுப்பினர்கள் அனைவரும் 'எரிமலை' இதழை வாசிப்பதற்கு வாய்ப்பில்லை. ஏனெனில் புத்தகத்தைக் கொடுத்த தோழர் வெளியூர்க்காரர். அவர் அவ்வளவாக எங்களுக்கு தொடர்பில்லை. தற்செயலாகத்தான் 'எரிமலை' இதழைப் பார்க்கவும், வாசிக்கவும் முடிந்தது. எனவே எங்கள் உறுப்பினர்களின் இன உணர்வை கூர்மைபடுத்தவும், ஈழத்தில் நடைபெறும் உண்மைச் செய்திகளை உணரவும் எங்களுக்கு 'எரிமலை' இதழ் கிடைக்கப்பெற்றால் மிகவும் பயன்உள்ளதாகவும், கருத்துப் பிரச்சாரம் செய்யும் உதவியாக இருக்கும். எங்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு எங்களுக்கும் உடனடியாக, தயவு கூர்ந்து, சிரமம் பார்க்காமல், காலம் தாழ்த்தாமல் இதழ் அனுப்பி வைப்பீர்கள் என நாங்கள் உறுதியாக நம்புகிறோம். இதற்கு பணம் ஏதாவது கட்ட வேண்டுமா, அல்லது எவ்வளவு கட்டவேண்டும் என்ற விபரத்தினையாவது தெரியப் படுத்துங்கள்.

தற்பொழுது புதிதாக வந்திருக்கும் ஒலி–ஒளி நாடாக்கள், புகைப் படங்கள் இருந்தாலும் அனுப்பி வைக்கவும். தொகை எவ்வளவாக இருந்தாலும் அனுப்பிவைக்கின்றோம்.

நன்றி.

வெல்லட்டும் வெல்லட்டும்
விடுதலைப் புலிகள் வெல்லட்டும்
மலரட்டும் மலரட்டும்
தமிழீழம் மலரட்டும்

தோழமையுடன்
எஸ். என். ஆறுமுகம்
சத்தியமங்கலம்
தமிழ்நாடு

★★★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# உள்ளே...



உலக இராணுவ வரலாற்றில் தலைவர் பிரபாகரன் புதிய அத்தியாயம்
– பக்கம் 04



இரண்டாம் ஆண்டில் ஜெயசிக்குறுய்
– பக்கம் 10




சிறீலங்காவின் சர்வதேச தொடர்பில் இரட்டைத்தன்மை
– பக்கம் 14



'எடிபல' நடவடிக்கையின் செலவீட்டுக் கணக்கு ஆரம்பம்
– பக்கம்22



இன்னொரு அமெரிக்கப் பயங்கரவாதச் செயல்
– பக்கம்38



இந்தியாவின் அணுகுண்டு சோதனைகள்
– பக்கம்43

★ ஜெயசிக்குறுய் இட்டுக் கட்டிய கதைகள் – பக்கம்07
★ ஒருவருடச் சமர் – பக்கம்08
★ ஒரு நொடிப் பொழுது – பக்கம்12
★ சிறீலங்கா காற்றைக்கூட விற்கமுனையலாம் – பக்கம்24
★ சிறீலங்காவில் அச்சுறுத்தப்படும் கேவலப்படுத்தப்படும் பத்திரிகைச் சுதந்திரம் – பக்கம்26
★ சிறீலங்கா கல்வியமைச்சின் பாடத்திட்டத்தில் மறைக்கப்பட்ட வரலாறு – பக்கம்28

★ சிறீலங்காவில் மீண்டும் ஜே.வி.பி – பக்கம்30
★ தூது – களத்திலிருந்து..... – பக்கம்32
★ நெருப்புக்காலத்தில் ஒரு துளிர் – பக்கம்35
★ உறுதி – சிறுகதை – பக்கம்40
★ இந்தியாவின் அணுகுண்டு வெடிப்பு சிறீலங்காவுக்கு கொடுத்த நெருக்கடி – பக்கம்45
★ தமிழர் பிரச்சினை டெல்லியின் கதவுகளைத் தட்டுகிறது – பக்கம்47



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



எமது இயக்கம் விடுதலைப் போரை முன்னெடுத்துவரும் அதேவேளை கல்வித்துறையின் மேம்பாட்டிற்காக ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது. அதற்கான அமைப்புக்களையும் கட்டியெழுப்பி வருகிறது.

எமது தேசிய வாழ்வையும், வளத்தையும் மேம்படுத்தும் இலக்கில் எமது கல்வித்துறை சீரமைக்கப்பட வேண்டும். காலனித்துவ சுரண்டலின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், சிங்களப் பேரினவாதத்தின் கருத்தாதிக்கத்தைத் திணிக்கவும் உருவாக்கப்பட்ட கல்வி அமைப்பு மாற்றப்பட வேண்டும். எமது தேசியப் போராட்டம், எமது பண்பாட்டு வாழ்வு, எமது தேசியப் பொருண்மிய வளம், எமது தேசிய இனத்தின் வரலாறு ஆகியவற்றின் உண்மை நிலையும் பெறுமானமும் உணரப்படும் வகையில் பாடத்திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். இன்றைய அறிவியல் தொழில்நுட்பத் துறைகளின் வளர்ச்சியையும் அதன் ஆக்க பிரயோகங்களையும் கற்றறியும் வாய்ப்பும் எமது இளம் பரம்பரைக்கு கிட்டுவதற்கு வழிசெய்ய வேண்டும். ஒட்டுமொத்தத்தில் எமது தேசிய நலன் பேணப்படும் வகையில் கல்விச் சீர்திருத்தம் இடம்பெறவேண்டும்.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

★

பதினைந்தாம் ஆண்டு
ஜூன் 1998

★

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
*C/O T.C.C-France,*
*341, Rue des Pyrenees,*
*75020 Paris.*
*Tel: 01 - 43 58 11 42*

# துயர்துடைப்பு நாட்கள் எங்கள் தார்மீகப் பணி

எமது தலைமுறையின் இன்றைய நாளாந்த வாழ்வு நேற்றையதிலும் மாறுபட்டது; நாளையிலும் கடுமையானது. எமது விடுதலைக்கான தீர்மானத்தின் மறுபுறம் துன்பங்களும் துயரங்களும் எம் மக்களின் தோள்களில் பெரும் சுமைகளாய்க் குடியிருக்கின்றன.

எதிரி தன் இனவாத அரசமைப்பையும், ஆளுமையையும் பாதுகாப்பதற்காக எம் மக்கள் மீது கொடிய திட்டமிடப்பட்ட போரைத் தொடுத்துள்ளான். உணவும் - மருந்துகளும் சிங்கள அரசு போருக்கான ஆயுதங்களாக சட்டவிரோதமான முறையில் பயன்படுத்தப்படுகின்றது. திட்டமிட்ட தன் போர் உபாயத்தின்படி எம் மக்களை தம் வாழ்விடங்களிலிருந்து எதிரி இடம்பெயர வைத்து அவர்களின் அவர்கள் துன்ப துயரங்களூடாக சரணடையுமாறு அச்சுறுத்துகின்றான். இன்று எம் மழலைகள் பட்டினியுடன் பகலப் பொழுதை கழிப்பதையும், போதிய மருத்துவ வசதியின்றி இறப்பதையும் உலகமே கண்டும் காணாததுபோல் அறிந்துள்ளது.

இதற்கு எதிராகப் போராடுவது எம் விடுதலைப் போரின் மற்றொரு தேவையாகும். இதனைத்தான் தூர நோக்குடன் ஆராய்ந்திருந்த எமது தேசியத் தலைவர் 13 வருடங்களின் முன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை தோற்றுவித்தார். இன்று ஈழத் தமிழர்களின் ஆதார சக்தியாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் எமது தாயக பரப்பெங்கும் எழுந்து நிற்கின்றது. சர்வதேச நிவாரண நிறுவனங்களின் உதவி மறுக்கப்பட்ட எம் தேசத்தின் மூலைமுடுக்கெல்லாம் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வேர்விட்டுள்ளது.

பல நூறு வேலைத்திட்டங்களுடன் இடம்பெயர்ந்த மக்களின் பாதுகாவலனாக திகழும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தான் எதிர்நோக்கும் நிதிப் பற்றாக்குறையால் தன் பணியின் முழுமையை அடைய முடியாது தள்ளாடுகின்றது.

இன்று புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் தம் இன்றைய வாழ்வின் ஒரு கடமையாக தமது விடுதலைக்கான போரிற்கு உதவுவதை அல்லது பங்களிப்பதை வரித்துக் கொண்டுள்ளனர். இது ஒரு மானிட கடமை என்பதையும் புரிந்து கொண்டுள்ளனர். இவ் உயரிய பணியின் ஒருபகுதி புனர்வாழ்வுப் பணிகளுக்கும் வழங்கப்படவேண்டும்.

சிங்கள அரசு போருக்கான ஆயுதமாக உணவையும், மருத்துவ வசதிகளையும் சட்டவிரோதமான முறையில் பாவிப்பின், அதற்கு எதிராக பாவிக்கப்படும் மக்களுக்கு அல்லது அதன் சுமைகளைச் சுமக்கும் எம் மக்களுக்கு உணவு - மருத்துவ வசதிகளை வழங்குவது எமது தார்மீக கடமையாகும். இதனைத் தடுத்து நிறுத்த சந்திரிகா - கதிர்காமர் கூட்டணி எத்தனை முயற்சிகள் எடுத்தாலும் எம் உறவுகள் பட்டினிச் சாவுடன் வாழ்வைக் கழிக்கையில் நாம் கண்களை மூடி கதிர்காமர் காட்டும் செப்படிவித்தைக்கு தலைபணிய மாட்டோம் என்பதை உறுதியாக உரமாக உரைக்க இது ஒரு சந்தர்ப்பமாகும்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் துடர்துடைப்பு நாட்கள் இன்று உலகம் பூராகவும் பரந்து வியாபித்து மக்கள் மயப்படுத்தப்பட்டுள்ள தார்மீக பணியாகும். இதனை மேலும் மயப்படுத்தி விடுதலைக்கு எதிரான மற்றுமொரு தடைக்கல்லை நாம் எம் பாதையிலிருந்து தூக்கி எறிவோம்.




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# உலக இராணுவ வரலாற்றில்
# தலைவர் பிரபாகரன்
# புதிய அத்தியாயம்!

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் ஏற்கனவே உலகிலுள்ள கெரில்லாத் தலைவர்களில் செயற்பாட்டுத் திறன் மிக்க தலைவர் என மதிப்பிடப்பட்டிருந்தவர். உலகின் தலை சிறந்த கெரில்லாத் தலைவர்களாகப் பாராட்டப்பட்ட மாஓசேதுங், சேகுவேரோ போன்ற தலைவர்களுடன் ஒப்பிட்டுப் பேசப்பட்டவர். விடுதலைப்புலிகளைப் பரமவைரிகளாக கருதிய ஜே. என். டிக்சிட் போன்றவர்கள் கூட தலைவர் பிரபாகரனின் ஆற்றலையும், ஆளுமையையும் புறத்தள்ளிவிட இயலவில்லை.

"முதலாவதாக பிரபாகரனின் ஆளுமையையும், குணாமசத்தையும் குறிப்பிடவேண்டும். அவர் கட்டுப்பாடுடைய ஒழுக்க சீலர், எளிமையானவர், ஈழத்தமிழ் மக்களின் விடுதலையில் ஆழமான பற்றுக் கொண்டவர். அவர்மீது எத்தகைய குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்ட போதிலும் அந்த மனிதனிடம் ஒரு உள்ளீடான இலட்சிய நெருப்பும், கொள்கை உறுதியும் உண்டு என்பதை மறுக்கமுடியாது. போர்த்திட்டங்களை வகுப்பதிலும் போர் உத்திகளை அறிமுகம் செய்வதிலும் அவரிடம் இயற்கையாகவே இராணுவத்திறனாற்றல் இருக்கிறது. அவர் அரசியல் சுழியோட்டங்களையும் உன்னிப்பாக அவதானிப்பவர். அரசியல் நிகழ்வுகளை செம்மையாக மதிப்பீடு செய்து, அதற்கேற்ப காய் நகர்த்தும் மதிநுட்பம் உடையவர்" என டிக்சிட் தெரிவிக்கின்றார்.



தலைவர் பிரபாகரன் குறித்த இம்மதிப்பீடுகளும் பாராட்டுதல்களும் ஏதோ சில பல்கலைக்கழகங்களால் சுயதேவைகளுக்காக வழங்கப்படும் சட்டங்கள் போன்று கிடைத்தவையல்ல. அவரின் போராட்ட வரலாற்றையும், தலைமைத்துவ ஆற்றலையும், அவருடனான அனுபவத்தையும் அவதானித்ததன் அடிப்படையில் கூறப்பட்டவையாகும். அதாவது, கடினமானதும், நீண்டதுமான அவரது போராட்ட வரலாறே இவருக்கு இவ்வாறான பாராட்டுதல்களையும், புகழையும் பெற்றுக் கொடுத்துள்ளது.

விடுதலைப்புலிகள் இயக்கம் தனது இரு தசாப்த காலத்திற்கு மேற்பட்ட வரலாற்றில் பல ஏமாற்றங்களையும், இறக்கங்களையும் கண்டுள்ளது. ஆனால், விடுதலைப்புலிகள் இயக்கம் எப்பொழுதுமே நிலை தடுமாறியதில்லை. தனது இலட்சியம், குறிக்கோளில் இருந்து விலகியதில்லை. இதற்கு தலைவர் பிரபாகரனின் உறுதியான நிலைப்பாடும் இலட்சியத்தில் கொண்டிருந்த அக்கறையும் பற்றுதலுமே காரணமாகும்.

தலைவர் பிரபாகரன் நெருக்கடிகளைக் கண்டு கலங்குபவரும் அல்லர். ஆபத்துக்களைக் கண்டு அஞ்சுபவரும் அல்லர் எதையும் எதிர்கொள்ளும் ஆற்றல் உண்டு என்பதை நிரூபித்திருப்பவர். அவ்வாறு இல்லாதுவிடில் பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தமிழீழ இலட்சியத்திற்காக தனித்து நின்று போராடும் ஒரு தலைமையாக அவர் உருவாகியிருக்க முடியாது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## இந்தியாவின் அணுகுண்டு வெடிப்பு

# சிறீலங்காவிற்கு கொடுத்த நெருக்கடி!

"இந்தியா மேற்கொண்டுள்ள நிலத்தடி அணுவெடிப்புச் சோதனை நடவடிக்கையானது மோதல்கள் நிறைந்த இப் பிராந்தியத்தில் ஸ்திரத் தன்மையை மேலும் குழப்பிவிடும் செயல்"

**சிறீலங்கா அரசு கூறியதாக பி.பி.ஸி (11.05.98)**

"இந்தியா அணுசக்தி வல்லரசாக மாறுவது குறித்து நமக்கு ஆட்சேபனை இல்லை. அணுவாயுத பரிசோதனை குறித்து நாடு இதற்கு முன்னர் கடைப் பிடித்த நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்துகிறது"

**சிறீலங்கா வெளிவிவ கார அமைச்சு (15.05.98)**

இந்தியாவின் அணு குண்டு பரிசோதனைகள் சிறீலங்கா அரசிற்கு குறிப்பாக அதன் வெளியுறவு விவகாரத்தில் அசௌகரியங்களை ஏற்படுத்தியுள்ளது என்பதையே ஒன்றிற்கொன்று மாறுபாடான மேற்சொன்ன கருத்துக்கள் பிரதிபலிக்கின்றன. அதாவது, சிறீலங்கா அரசு வெளியிட்டுள்ள கருத்துக்கள் சிறீலங்கா அரசின் அணு ஆயுதப் பரவல் தொடர்பான நிலைப்பாடு என்ன என்ற கேள்வியை எழுப்புவதாக வுள்ளது.

ஏனெனில், இந்தியாவின் அணுவாயுத பரிசோதனை இப்பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மையைப் பாதிக்கும் என முதலில் வெளியிட்டுள்ள கருத்துக்கான – இந்தியா அணுவாயுத வல்லரசாக மாறுவதில் எமக்கு ஆட்சேபம் எதுவுமில்லை எனக்கூறுவதன் மூலம் சிறீலங்காவே மறுதலிக்க முற்படுகின்றது.

இதுவே சிறீலங்காவின் அணுவாயுத பரவல் தொடர்பான நிலைப்பாடு என்ன என்ற கேள்வியை சிறிலங்காவை நோக்கி அமெரிக்காவைக் கேட்க வைத்துள்ளது. அதாவது, அணுவாயுத பரவல் ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்ட சிறீலங்கா எவ்வாறு இந்தியாவின் அணுவாயுத வல்லரசாக உருவாவதை ஆதரிக்க முடியும் எனக் கேட்கவைத்துள்ளது.

**தென்ஆசியாவின் புவிசார் அரசியலுக்கு மாறாக சிறிலங்கா வகுக்க முற்பட்ட வெளியுறவுக் கொள்கை இந்தியாவின் அணுவெடிப்புச் சோதனையினால் பெரும் இக்கட்டிற்குள் வந்துள்ளது. இந்தியாவுடன் முரண்பட்டுக் கொள்ளக்கூடாது என்ற ரீதியில் 'இந்தியா அணுவல்லரசாக மாறுவது குறித்து எமக்கு ஆட்சேபனை இல்லை' என்ற சிறிலங்காவின் அறிவிப்பு அணுவாயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் அது இட்ட கையெழுத்திற்கு மாறானதாகவும் – அமெரிக்காவிற்கு சீற்றத்தை உண்டாக்குவதாகவும் மாறியுள்ளது.**

முதலில் சிறீலங்கா அரசு வெளியிட்ட அபிப்பிராயங்கள் நிச்சயமாக இந்தியாவைப் பொறுத்து திருப்தி அளிக்க முடியாத ஒன்றாகவே இருந்திருக்க வேண்டும். அமெரிக்கா மற்றும் மேற்குலகநாடுகளைப் போன்று கண்டிக்கமுடியாத நிலையிலும் சிறீலங்கா தனது அதிருப்தியை வெளிக்காட்டியதாகவே இது இந்தியாவால் கருதப்பட்டிருக்கும்.

ஆனால், இதனை இந்தியா சிறீலங்காவிற்கு வெளிப்படுத்தியது என்பது குறித்து தகவல்கள் இல்லையாயினும் சிறீலங்கா இதில் இந்தியாவிற்குள்ள நெருடல்களைப் புரிந்து கொண்டது என்பதையே பின்னர் அது உத்தியோகபூர்வமாக வெளியிட்ட அறிக்கை காட்டியது. அதாவது "இந்தியா அணுவல்லரசாவது குறித்து எமக்கு ஆட்சேபனை இல்லை" என்பதாகும். சிறீலங்காவின் இவ் அறிவிப்பானது இந்தியா தமது நிலைப்பாட்டை தவறாகக் கொண்டு முகம் கோணிவிடக்கூடாது என்பதன் அடிப்படையிலானதே ஆகும்.

ஆனால், சிறீலங்காவின் நிலைப்பாட்டில் ஏற்பட்ட மாற்றமானது ஒருவகையில் அமெரிக்காவிற்கு ஏமாற்றத்தையும், ஒரு வகையில் சீற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அதன் வெளிப்பாடே அணுவாயுத அதிகாரப் பரவலாக்கல் ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டுள்ள சிறீலங்கா அரசு எவ்வாறு அணுவாயுத வல்லரசாகப்புதிதாக உருவாக முனையும் செயற்பாட்டை ஆதரிக்கும் என்ற அமெரிக்காவின் வினாவாகும்.

சிறீலங்கா அரசு தனது அறிக்கையில், தமது அணுவாயுதம் தொடர்பான கொள்கைகளில் மாற்றம் எதுவுமில்லை என அறிவித்திருப்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பினும்கூட இந்தியா அணுவாயுத வல்லரசாக உருவாவதை சிறீலங்கா கண்டிக்காதது அணுவாயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட சிறீலங்காவின் நிலைப்பாட்டிற்கு மாறானது என்பதே அமெரிக்காவின் நிலைப்பாடாகும்.

அமெரிக்காவின் இந்நிலைப்பாட்டிற்கு காரணம் இல்லாமல் இல்லை. ஏனெனில், இந்தியாவின் அணுவாயுத உற்பத்தியைத் தடுத்துவிட வேண்டும் என்பதில் அமெரிக்கா நீண்டகாலம் முயற்சித்து வந்துள்ளது. இதேசமயம் இந்தியா அணுவாயுத உற்பத்தியில் ஈடுபட்டதால், அதன்மீது பொருளாதாரத் தடைகள் உட்பட கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரித்தும் வந்துள்ளது.

ஆனால், இந்தியாவோ அமெரிக்காவின் வற்புறுத்தலுக்குப் பணியாதது மட்டுமல்ல அணுஆயுதப்பரவல் தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவும் மறுத்துள்ளது. இந்த நிலையில் தற்பொழுது அணுவாயுதத்தையும் உற்பத்திசெய்துள்ளது. இந்நிகழ்வானது, தனியாக அணுவாயுத பரவல் தடை ஒப்பந்தத்திற்கு மாறானது மட்டுமல்ல தனிப்பட்ட ரீதியில் அமெரிக்காவின் முயற்சிக்கு ஏற்பட்ட தோல்வியுமாகும். இந்த நிலையில்தான் சிறீலங்கா இந்தியாவின் அணுவாயுத உற்பத்தியை ஆதரித்துள்ளமை அமெரிக்காவிற்கு ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளதெனலாம்.

ஆனால், உண்மையில் இவ் விவகாரத்தில் சிறீலங்காவை அமெரிக்கா ஒரு பெரும் சிக்கலுக்குள் சிக்க வைக்க முற்படுகின்றது என்பதே உண்மையாகும். சிறீலங்காவைப் பொறுத்து அதன் வெளியுறவுக் கொள்கையானது அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கை போன்று உலக ஆதிக்கத்திற்கான கொள்கையல்ல. சிங்கள பௌத்த பேரினவாதத்தை இலங்கையில் நிலைநிறுத்திக் கொள்வதற்கானது மட்டுமே. அத்தோடு, எவ்வாறான நிதியை உதவியாகவும், கடனாகவும் பெற்றுக்கொள்ளமுடியுமோ அதனைப் பெற்றுக் கொள்வதற்குமானதே ஆகும். இதற்கேற்பவே ஐ.நா.சபையிலும் சரி, வேறு இடங்களிலும் சரி சிறீலங்கா நடந்து கொண்டுள்ளது.

ஆகையினால், தனது உள்நாட்டுத் தேவையின் நிமிர்த்தம் அதன் வெளியுறவுக் கொள்கைகள் மாற்றம் காண்கின்றன என்பதே உண்மையாகும். இந்தவகையில் அண்மைக்காலத்தில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டை உலகம் குறிப்பாக அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகள் மேற்கொள்ள எவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற ரீதியிலேயே வெளியுறவுக் கொள்கையும் அமைக்கப்பட்டன. இதை விடுத்து அணுவாயுத பரவல் ஒப்பந்தத்தில் முண்டியடித்துக் கொண்டு சிறீலங்கா கையொப்பம் இடவேண்டிய நிர்ப்பந்தம் அதற்கு இருக்கவில்லை.

இத் தடை ஒப்பந்தத்தில் கையொப்பம் இடுவதன் மூலம் இவ் ஒப்பந்தத்தை முன்னெடுத்துச் செல்லும் அமெரிக்கா முயற்சிகளைத் தீவிரமாக ஆதரிப்பதாகக் காட்டிக் கொள்வது – அதன் மூலம் புலிகளுக்கு எதிரான போரில் அமெரிக்க ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வது என்பதே சிறீலங்காவின் குறியாகும். அதாவது, புலிகளுக்கு எதிரான இராஜதந்திர நடவடிக்கையை தவிர இத்தடை ஒப்பந்தத்தில் கையொப்பம் இட சிறீலங்காவிற்கு தேவை எதுவும் இல்லை.

**சிறீலங்கா எடுக்கும் நிலைப்பாடு தனியாக பாகிஸ்தானையோ அன்றி சிறீலங்காவிலுள்ள முஸ்லிம்களையோ திருப்திப்படுத்துவதாக இருந்தால் மட்டும் போதும் என்பது மட்டுமல்ல, இந்தியாவையும் திருப்திப்படுத்தக் கூடியதாகவே அமையவேண்டும்**

அதிலும் இப்பிராந்திய நாடுகளில் முன்னணி நாடுகள் இரண்டுமே இத்தடை ஒப்பந்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கையில் சிறீலங்கா இதில் கையொப்பம் இட்டுள்ளது. தனது அரசு அணுவாயுதங்களைத் தயாரிப்பதற்கோ அன்றி வெளியில் பெற்றுக்கொள்ளவோ இயலாது என்ற நிலையில் சிறீலங்கா கையொப்பம் இட்டது. இந்த நிலையில் பார்க்கையில் இப் பிராந்தியத்தில் என்றோ ஒருநாள் அணு ஆயுதம் உற்பத்தியாகும். அது குறித்து அப்பொழுது தமது நிலைப்பாடு என்னவாக இருக்கவேண்டும் என்பது குறித்து சிந்திக்காத நிலையில் எதிர்கால நோக்கு எதுவுமற்று சிறீலங்கா அரசு கையொப்பம் இட்டது என்பதே சரியானதாகும்.

சிறீலங்காவைப் பொறுத்து அன்றைய தேவை அமெரிக்காவையும் அணு ஆயுதமுடைய மேற்குலகையும் திருப்திப்படுத்துவது மட்டுமாகவே இருந்தது. இன்றைய தேவை இந்தியாவைத் திருப்திப்படுத்துவது என்பதாக இருக்கின்றது. ஆனால், ஒப்பந்தங்களில் இட்ட கையொப்பங்களின்படி சிறீலங்கா அணுவாயுத பரவல் தடைக்கு கடப்பாடு உடையது.

அத்தோடு, இன்றுகூட இந்தியா அணுவாயுத வல்லரசாக மாறுவதில் ஆட்சேபனை இல்லை என்ற சிறீலங்கா அரசின் நிலைப்பாடானது எதிர்காலத்தில் பாகிஸ்தானும் அணுவாயுத நாடாக மாறும்போதும் இவ்வாறானதாகவே இருக்கும் என்பதும் முக்கியமானதாகும்.

ஏனெனில் அவ்விடயத்தில் சிறீலங்கா எடுக்கும் நிலைப்பாடு தனியாக பாகிஸ்தானையோ அன்றி சிறீலங்காவிலுள்ள முஸ்லிம்களையோ திருப்திப்படுத்துவதாக இருந்தால் மட்டும் போதும் என்பது மட்டுமல்ல, இந்தியாவையும் திருப்திப்படுத்தக் கூடியதாகவே அமையவேண்டும். இல்லாதுவிடில், இன்றைய– இந்தியா அணுவாயுத விடயத்தில் கைக்கொண்ட அணுகுமுறைகூடத் தோற்றுப்போய்விடும் என்பதாகும்.

இந்த வகையில் தனது தீர்க்கதரிசனமற்ற வெளியுறவுக்கொள்கையினால் சிறீலங்கா அரசு புதியதொரு சிக்கலுக்குள் மாட்டிக்கொண்டுள்ளது என்றே கூறலாம். இது இப்பிராந்தியத்தின் புவிசார் அரசியலை தெளிவாக விளங்கிக்கொள்ளாமல் சிறீலங்கா அரசு வகுத்துக் கொண்ட வெளியுறவுக் கொள்கையினால் உருவாகியுள்ள நெருக்கடியே ஆகும்.

– ஜெயராஜ்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தலைவர் பிரபாகரன் இதுவரையில் இரு இராணுவங்களுக்கு எதிராகப்போராடியுள்ளார். இதில், சிறீ லங்கா இராணுவம் விடுதலைப் புலிகளின் கெரில்லா பாணியிலான ஆயுதப் போராட்டத்தை முறியடிப்பதற்கென்றே உருவாக்கப்பட்டது. இதற்கென முன்னணி கெரில்லா எதிர்ப்பு நடவடிக்கை நாடுகள் மற்றும் அமைப்புக்களின் ஆலோசனைகள், பயிற்சிகள் என்பனவற்றைப் பெற்றுக்கொண்ட இராணுவமாக உருப்பெற்றதாகும். இவ் இராணுவம் பயன்படுத்தும் ஆயுத தளபாடங்களில் இருந்து அவர்களின் சீருடைகள் வரை அதற்கேற்றவாறு அமையப்பெறுகின்றன.

அடுத்தது, உலகின் நான்காவது பெரிய இராணுவமான இந்திய இராணுவமாகும். மிகப்பெரும் ஆளணி மற்றும் ஆயுத தளபாடங்களைக் கொண்டிருந்த இவ் இராணுவம், தனது ஆளணி மற்றும் ஆயுத பலத்தால் விடுதலைப் புலிகள் மீது பெரும் அழுத்தம் கொடுக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தது. இந்த வகையில் கெரில்லா இயக்கத்திற்கு எதிரான செயற்பாடு மிக்க இராணுவத்தினருக்கும் மரபு வழி போர் முறையில் முழுவடிவம் பெற்ற இராணுவத்தினருக்கும் எதிராக தனது ஆற்றலை வெளிப்படுத்தியிருந்தமையே தலைவர் பிரபாகரனின் தலைமைத்துவ ஆற்றல் வெளியுலகில் அடையாளம் காணப்பட்டமைக்குக் காரணமாகியது.

தமிழீழ தேசிய இன விடுதலைப் போராட்டம் வெளியுலக அரசுகளின் ஆதரவையோ அரவணைப்பையோ பெற்றதொரு போராட்டமாக இருந்ததில்லை. இதற்கு இப் போராட்டத்திற்கான நியாயப்பாட்டில் உள்ள குறைபாடல்ல காரணம். இப் பிராந்தியச் சூழ்நிலை அதற்கான கட்டுப்பாட்டை விதித்திருந்தது. ஆரம்பத்தில் இப்போராட்டத்திற்கு இந்தியாவின் மிகச் சிறிய உதவிகள் இருந்திருப்பினும் கூட—இதனைவிட மிகப் பெரிய அளவில் இப் போராட்டத்திற்கு எதிரான நடவடிக்கையையே இந்தியா கடந்த காலத்தில் மேற்கொண்டிருந்தது.

இந்த நிலையில், இப் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்திச் செல்வதென்பது இலகுவானதொரு காரியமல்ல. இதன் காரணமாகவே தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குப் பலர் தலைமை தாங்க முற்பட்டும் அவை தோல்வியில் முடிவடைந்தது. இறுதியில் எதிர்த்தரப்பினரிடமே மண்டியிடவும் வேண்டி வந்தது. ஆனால், தலைவர் பிரபாகரன் இச் சவால்களை எதிர்த்து நின்று இரு அரசுகளையும் சலிப்படையச் செய்யும் அளவிற்கு அவரின் தலைமைத்துவ ஆற்றல் இருந்தது என்பதே உண்மையாகும்.




அதாவது, தலைவர் பிரபாகரனினால் இலட்சியப்பற்று அசைக்க முடியாத மனவுறுதி எவ்வேளையிலும், எந்த நெருக்கடியிலும் போராடும் ஆற்றல்—தமது கொள்கைக்காக உயிரை பணயம் வைக்கத் தயாரான நிலை. இவற்றைவிட இலட்சியப் பற்று, அர்ப்பணிப்பு என்பனவற்றைக் கொண்ட போராளிகளை உருவாக்கக்கூடிய தலைமைத்துவ ஆற்றல் அவரிடம் நிறையவே இருந்தது. இதுவே பிரபாகரனின் தலைமைத்துவ வெற்றியின் அடிப்படையாகவும் இருந்தது.

ஆனால் தனியாக இவை மட்டும் தான் அவரின் தலைமைத்துவ வெற்றிக்குக் காரணமல்ல. இயற்கையாகவே அவரிடம் இருந்த துணிவு, ஆபத்து நிறைந்த விடயங்களைச் சவாலாக ஏற்கும் பண்பு, இராணுவ ரீதியிலான நுண் அறிவு, தெளிவு என்பனவும் அவரின் தலைமைத்துவ ஆற்றலைத்தூக்கி நிறுத்தியிருந்தன. தலைவர் பிரபாகரன் எவ்வகையான இராணுவ ரீதியிலான அச்சுறுத்தலுக்கும் எப்பொழுதுமே பணிந்து போபவராக இருக்கவில்லை.

ஒவ்வொரு தடவையும் இராணுவ ரீதியிலான பெரும் அழுத்தங்கள் வரும்போதும், அதனை எதிர்த்துப் போராடவும்—அதே சமயம் போராட்டத்தை முன்னோக்கி நகர்த்திச் செல்வதற்குமான மாற்றுத் திட்டங்களையும் அவர் கொண்டவராகவே இருந்தார். அதேசமயம், தமது பலம், எதிரியின் பலம் என்பனவற்றை நன்குணர்ந்த நிலையிலேயே பிரபாகரன் போர் முறைத்திட்டங்களையும் வகுத்துச் செயற்படுத்தினார்.

அவ்வாறு இல்லாது விடில் கடந்த 15 வருடங்களில் எழுந்த இராணுவ ரீதியிலான அழுத்தங்களில் இருந்து விடுதலைப்புலிகளால் மீண்டிருக்க முடியாது. அதிலும் குறிப்பாக இந்திய இராணுவத்தினரின் நெருக்குதலில் இருந்து விடுபடுவதோ அன்றி தப்பிப்பதோ கடினமான காரியமாகவே இருந்திருக்கும்.

விடுதலைப் போராட்டம் இராணுவ ரீதியில் நெருக்கடிகளைச் சந்தித்த ஒவ்வொரு கட்டத்திலும் தலைவர் பிரபாகரன் புதிய போர் வடிவங்களையோ அன்றி புதிய படையணிகளையோ அறிமுகம் செய்தார். இது புலிகள் இயக்கத்திற்கு எழுந்த இராணுவ ரீதியிலான முட்டுக்கட்டைகளைத் தகர்த்தெறிவதாக இருந்தது. இதுவே காலத்திற்கு ஏற்றதும் தேவைக்கு ஏற்றதுமான தலைமைத்துவத்தை வழங்கும் ஆற்றல் அவருக்கு நிரம்பவே இருந்தது என்பதை வெளிப்படுத்தி நின்ற அம்சங்களாகின.

1987—இல் யாழ் குடாநாட்டில் வடமராட்சிப் பிரதேசத்தில் சிறீ லங்கா இராணுவம் மேற்கொண்ட 'ஒப்பரேசன் லிபரேசன்' நடவடிக்கையைத் தொடர்ந்து 'கரும்புலிகள்' என்னும் அணியினை தலைவர் பிரபாகரன் உருவாக்கினார். குறைந்த ஆளணியும், ஆயுத பலமும் கொண்ட ஓர் அமைப்பு பெருமளவிலான



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ஆளணியையும், ஆயுத தளபாடங்களையும் கொண்ட ஓர் அரச இராணுவத்திற்குச் சவாலாகவும், பேரழிவை ஏற்படுத்தக்கூடியதாகவும் உருவாக்கப்பட்டதே இக் கரும்புலிகள் அமைப்பாகும். இன்று இவ் அமைப்பானது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முக்கியம் வாய்ந்த பாத்திரம் ஒன்றை வகித்து வருவதாகவுள்ளது.

இதேபோன்று, ஆகாய கடல் வெளிச் சமரின் பின்னர் தேவையும், அவசியமும் கருதி உருவாக்கப்பட்டதே கடல் புலிகள் அமைப்பாகும். இக் கடற் புலிகள் இன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முக்கியதொரு அங்கமாகவும் சிறீலங்கா கடல் படையின் ஆதிக்கத்தைச் சில பகுதிகளில் இல்லாது ஒழித்துள்ளதோடு வடக்கு–கிழக்கு கடற் பரப்பில் அதன் சுதந்திர நடமாட்டத்தை கட்டுப்படுத்தும் ஓர் ஆற்றல் பொருந்திய அணியாகவும் மாறியுள்ளது.

இவ் அணியின் உருவாக்கமே இரண்டாம் கட்ட ஈழப்போரின் போது யாழ் குடா நாட்டை முற்றுகையிடும் சிறீலங்கா இராணுவத்தின் யுத்த தந்திரோபாயத்தை உடைத்தெறிந்ததெனலாம். அதாவது, ஒப்பரேசன் பலவேகய II. ஒப்பரேசன் வலம்புரி ஆகியவற்றால் யாழ். குடாநாட்டின் தரை வழிப்பாதைகள் அடைக்கப்பட்ட போதும், கிளாலிக் கடற்பரப்பின் ஊடாக யாழ் குடாநாட்டிற்கும், வன்னிப் பெருநிலப் பரப்பிற்கும் இடையில் போக்குவரத்தை நடத்துவதற்கான வாய்ப்பை உருவாக்கிக்கொடுத்தது.

அத்தோடு, வடக்கு–கிழக்கு போர் முனையில் சிறீலங்கா இராணுவத்திற்குக் கணிசமான அழுத்தங்களையும் விடுதலைப்புலிகளால் ஏற்படுத்த முடிந்துள்ளது. ஒருவகையில் சிறீலங்கா இராணுவம் இன்று யாழ். குடாநாட்டிற்கு அவசிய தேவையாக வேண்டி நிற்கும் தரைவழிப்பாதைக்கு கடற்புலிகள் சிறீலங்காவின் கடற்படைக்கு கொடுத்துவரும் அழுத்தமும் கப்பல் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளமையுமே காரணமாகும்.

இந்த வகையில்தான் 'ஜயசிக்குறு' படை நடவடிக்கையை எதிர்கொள்ள விடுதலைப்புலிகளின் தரைத்தாக்குதல் அணிகளில் இரு பிரிவுகளை தலைவர் பிரபாகரன் உருவாக்கினார். ஒன்று கனரக மோட்டார் படைப்பிரிவு. இரண்டு டாங்கி எதிர்ப்பு விஷேட படைப்பிரிவு ஆகும். இப்படைப்பிரிவுகள் இரண்டுமே 'ஜயசிக்குறு' களம் குறித்து தலைவர் பிரபாகரன் தீர்க்கமான முன்னேற்பாட்டுடன் செயற்பட்டதை வெளிக்காட்டியதெனலாம்.

அதாவது ரிவிரச போன்றோ அன்றி சத்ஜெய போன்றோ அன்றி எடிபல போன்றோ அல்லாது 'ஜயசிக்குறு' வை முழுமையாக எதிர்கொள்வதற்கு தலைவர் பிரபாகரன் தயாராகியிருந்தார். இங்குதான் தலைவர் பிரபாகரனின் இராணுவ ஆற்றலும், மதி நுட்பமும் முழுமையாக வெளிப்படுத்தப்பட்டன. அதேசமயம்

**தேசியத் தலைவர் பிரபாகரன் ஓர் கெரில்லா இயக்கத்தின் சிறப்பு மிக்க தலைவர் என்பதுமட்டுமல்ல, மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான ஆளணியுடன், மிகக்குறைந்த அளவிலான மரபு படையணியின் ஆயுததளபாடங்களுடன் ஒரு பெரும் படையெடுப்பை எதிர்கொள்வதுஎவ்வாறு என்பதற்குஇராணுவ வரலாற்றில் முன்னுதாரணம் ஒன்றை உருவாக்கி உள்ளவரும் ஆவார்.**

அவர் ஓர் மரபுவழிப்படையை கட்டி அமைக்கும் ஆற்றலும், அதனை வெற்றிகரமாக வழி நடத்திச் செல்லும் முழுமையான ஆற்றல் மிக்க தலைவர் என்பதும் வெளிப்படுத்தப்பட்டது. அத்தோடு நவீன போரியல் விஞ்ஞானத்தில் அவர் வகுத்துக் கொண்டுள்ள போர்முறைக்குத் தனி இடம் ஒன்று ஒதுக்கப்படவேண்டிய நிர்ப்பந்தம் எழுந்துள்ளதையும் உலகிற்கு உணர்த்தியுமுள்ளதெனலாம்.

ஏனெனில் 'ஜயசிக்குறு' நடவடிக்கைக்கு எதிரான விடுதலைப்புலிகளின் மரபு வழி சார்ந்த போர் முறையானது. சமமான ஆளணி படைக்கலப்பலத்துடன் மேற்கொள்ளப்பட்டதொன்றல்ல. ஆளணிப் பலம் 8:1 என்ற ரீதியில் இல்லாத நிலையிலும், ஆயுத பலம் விகிதாசார ரீதியில் ஒப்பிடமுடியாத அளவினதாகவும் இருந்த நிலையிலும் 'ஜயசிக்குறு' நடவடிக்கையை மரபுப் போர் முறையில் விடுதலைப் புலிகள் எதிர்கொள்ளத் தயார்படுத்தப்பட்டிருந்தனர் என்பதே யதார்த்தமாகும்.

இந்த நிலையிலும் 'ஜயசிக்குறு' நடவடிக்கையானது ஒரு வருடம் தாண்டியும் இடை நடுவில் நிற்கின்றது. இதனைச் சிறீலங்காவைச் சேர்ந்த இராணுவத் தளபதிகளினாலோ அன்றி அவர்களுக்கு ஆலோசனைகளும், பயிற்சியும் வழங்கிவரும் நவீன போர் முறைக்கு வரைவிலக்கணம் உருவாக்க முனையும் வெளிநாட்டு அரசுகளினாலோ அன்றி அமைப்புக்களினாலோ நகர்த்திச் செல்ல இயலவில்லை என்பதே உண்மையாகும்.

இந்தவகையில் எதிரியுடன் ஒப்பீட்டளவில் ஆளணி, ஆயுத தளபாடங்கள் குறைந்த அளவிலுள்ள அமைப்பின் ஓர் படைப்பிரிவோ அன்றி இராணுவமோ தம்மை விடப் பலமானதும், வசதிகள் மிக்கதுமானதொரு படை எடுப்பை எவ்வாறு எதிர்கொள்வது என்பதற்கும் பெரும் அழிவை விளைவித்துச் சலிப்படையச் செய்யலாம் என்பதற்கும் 'ஜயசிக்குறு' படை நடவடிக்கைக்கு எதிராக விடுதலைப் புலிகள் இயக்கம் வகுத்துக் கொண்ட போரியல் திட்டம் சிறந்ததொரு முன்னுதாரணமாகும்.

இந்த வகையில் இத்திட்டத்திற்கு மூல கர்த்தாவாகவும். அதனை நெறிப்படுத்துபவருமான தேசியத் தலைவர் பிரபாகரன் ஓர் கெரில்லா இயக்கத்தின் சிறப்பு மிக்க தலைவர் என்பது மட்டுமல்ல, மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான ஆளணியுடன், மிகக்குறைந்த அளவிலான மரபு படையணியின் ஆயுத தளபாடங்களுடன் ஒரு பெரும் படையெடுப்பை எதிர்கொள்வது எவ்வாறு என்பதற்கு இராணுவ வரலாற்றில் முன்னுதாரணம் ஒன்றை உருவாக்கியுள்ளவரும் ஆவார்.

ஜெயராஜ்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# "ஜெயசிக்குறுய்" இட்டுக்கட்டிய கதைகள்

## இது ஒரு பதினம்

**சூரியக்கதிர், எடிபல இராணுவ நடவடிக்கைகளைப் போன்று, ஜெயசிக்குறுவும் தமது இராணுவ இலக்கை எட்டிவிடும் எனக் கனவு கண்டுகொண்டு கடந்த வருடம் (97-மே-13) ஆரம்பித்த நடவடிக்கை ஆமைவேகத்திலிருந்து நத்தை வேகத்திற்கு நகர்ந்து 98-மே 13 உடன் ஒருவருடத்தை நிறைவு செய்துள்ளது.**

இந்த ஒருவருட காலப்பகுதிக்குள் தென்னிலங்கைத் தலைமையில் இருந்தும், அரச வெகுஜன தொடர்பு சாதனங்களிலிருந்தும் வெளியான, முன்னுக்குப்பின் முரணான வாக்குறுதிகளையும், வதந்திகளையும் சற்றுப் பொறுக்கி எடுத்து நாம் பார்ப்போமாகில் சிரித்துச் சிரித்தே களைத்துவிடுவோம், அந்த அளவுக்கு இவை நகைச்சுவையானவை.

வெற்றி உறுதியின் கால எல்லை தொடர்பாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை அவர்களின் கூற்றுக்களை ஒட்டுமொத்தமாக எடுத்து ஒரு தட்டில்போட்டுப் பார்த்தால், இவருக்கு எத்தனை நாக்கு. இவர் சுயநினைவோடு தான் இருக்கிறாரா என்றெல்லாம் நினைக்கத் தோன்றுகிறது.

(மூன்று மாதத்திற்குள், வெசாக்கிற்குள், டிசம்பர் 31–ற்குள், சுதந்திர தினத்திற்குள், இத்தினத்தில் கிளிநொச்சியில் இருந்துவரும் பஸ்சை தான் கண்டியில் நின்று வரவேற்பேன் என்றும் கூறினார்.) வெகு விரைவில், என்றெல்லாம் கூறிக் களைத்துப் பின் என்றாவது ஓர் நாள் என்று ஓய்ந்துபோனார் ரத்வத்தை. இவை தவிர, இவர் கூறிய இன்னும் சில கருத்துக்களும் வேடிக்கையானவை.

"வன்னியின் கிழக்குப் புறக்காட்டுக்குள் புலிகள் ஒடுங்கிவிடுவார்கள். இனி அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது எனவும்" தலைவர் பிரபாகரனின் இடத்தை நாம் நெருங்கி விட்டோம். அவரை இனி என்ன செயவது என்பது பற்றி முடிவெடுக்க வுள்ளோம். அதேவேளை அவரை மூன்றாவது நாடொன்றுக்குத் தப்பி ஓடவிடலாமா? எனவும் யோசிக்கின்றோம்" என்று கூறினார் ரத்வத்தை.

சரி, ரத்வத்தையை விடுத்து சரத்முனசிங்காவைப் பார்ப்போம். "புலிகளுக்கு அனுபவம் வாய்ந்த தலைமையில்லை எனவே அவர்களுக்குள்ளுள் முரண்பாடு நிலவுகிறது" இது இவரது பொன்மொழி. இதைவிட இன்னொரு சிறப்பான கண்டுபிடிப்பு வேடிக்கையானது. இந்த நூற்றாண்டின் மிகச்சிறந்த பகிடி என்னவென்றால் தமது ஆட்லறி செல்லுடன் சேர்ந்து செல்லும் இலையை வைத்தே புலிகள் எமது ஆட்லறி இலக்குகளை அடையாளம் காண்கின்றார்கள் என்பதுதான். இவர்களது செல் என்ன குப்பை விறாண்டியோ என எண்ணத் தோன்றுகிறது, இது தவிர இவரது இன்னொரு கணக்கியல் சாஸ்திரம். கரிப்பட்டமுறிப்பில் இருந்து கிளிநொச்சிக்கு உள்காட்டுப் பாதையால் செல்ல 20 கி.மீ என்பது.

பாலபெத்த பென்டியும் இவ விடயத்தில் மக்களால் மறக்கமுடியாதவர் யாழ் செல்ல திருகோணமலையில் மக்கள் மாதக்கணக்கில் கிடந்தபோது "நீங்கள் கலங்கவேண்டாம், விரைவில் தரைப்பாதை திறக்கப்படும், பஸ்சில் போகலாம்" என்றார் தீர்க்க தரிசனமாய்.

இவ்வாறாய் ஆளுக்காள் கண்டதையும் கூறியதைவிடுத்து, இன்னும் எத்தனையோ புரளிகளும் புளுகுகளும் தென்னிலங்கை மக்கள் மத்தியில் ஊதோ ஊதென்று ஊதப்பட்டன.

புலிகள் இப்போது புலிகளல்ல அவர்கள் நரிகளாகிவிட்டார்கள் என்றும் மன்னகுளத்தில் தமது பாரிய இழப்பை மறைக்க புலிகளின் பாரிய தளத்தைப் பிடித்து விட்டோம் என்றும் எந்த இடத்தில் புலிகள் கடுமையாகத்தாக்குகிறார்களோ அந்த இடம் புலிகளின் கேந்திர முக்கியத்துவமான இடம் எனக் கூறியும் தமது இழப்பைக் குறைத்து புலிகளின் இழப்பை ஏலம்விடுவது போன்று 100,200,400 என்று பெருக்கல் வாய்ப்பாடு சொல்லியும் முன்பின் முரணான செய்திகளை வெளியிட்ட அவர்கள் புலிகளின் பலத்த அடி தம்மை ஒரு வருடத்துக்குத் தள்ளும் எனச் சற்றும் எதிர்பார்க்கவில்லைத்தான்.

புலிகளின் பலத்தைச் சரியாக எடைபோடாத அரசுக்கு முல்லைத்தீவில் புலிகள் வழங்கிய பரிசு போதவில்லை என்று ஜெயசிக்குறுவையும் தொடங்கியுள்ளனர். வந்து குவியும் பரிசுகளைத் தாங்கமுடியாது நிதானமிழந்து ஆனந்தக் கூச்சலிடுகின்றனர்.

ஒரு வருடத்தில் உடைந்துபோன சிங்களத்தின் குட்டுகள் இனியும் தொடர்ந்தால் என்ன நடக்கும் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

★★

மொறிஸ் தர்மபாலன்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# ஒரு வருடச் சமர்

சிங்களத்தின் படைப்பிரிவுகள் ஒன்றன்பின் ஒன்றாக சிதைந்து – செயலிழந்து வருவது மூன்றாம் ஈழப்போரின் முக்கிய விளைவாகி விட்டது. வான்படை படுமோசமாகப் பாதிக்கப்பட்டு முடங்கிப்போயுள்ளது. கடற்படையும் தனது செயற்திறனை இழந்து – கடலாதிக்கப் பிடியையும் இழந்துவருகின்றது.

“ஜயசிக்குறுய்” சமரின் விளைவுகளில் ஒன்றாக சிங்களத்தின் ராங்குப் படையும் சிதைந்து வருகின்றது. இந்த ஒரு வருடச் சமரில் மொத்தம் 20 ராங்குகளை அது இழந்துள்ளது. தனது கவசப்படையில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமான எண்ணிக்கையுடைய கவசங்களை இந்த ஒரு வருடச்சமரில் அது இழந்துள்ளது.

இதேவேளை, “ஜயசிக்குறுய்” சமரின் விளைவுகளில் மற்றொன்றாக சிங்களத்தின் சிறப்புப் படைப்பிரிவுகளான விசேட கொமாண்டோ அணிகளும் அழிந்துள்ளன. சிங்களப்படையைப் பொறுத்தவரையில் அதன் விஷேட கொமாண்டோ படையினர் தடையகற்றிகளாகச் செயற்படுகின்றனர். கடினமான சூழ்நிலைகளின் போது நகர்விற்கான– அல்லது தாக்குதலிற்கான முன் முயற்சிகளை எடுத்து சண்டைகளின் போக்கை நிர்ணயிப்பதில் இவர்கள் பிரதான பங்கு வகிக்கின்றனர்.

மன்னகுளம்– புதூர்ச்சந்தி மீது விடுதலைப் புலிகள் நிகழ்த்திய முறியடிப்புத் தாக்குதலின் போதும்– தாண்டிக் குளம் மீது நிகழ்ந்த வலிந்த தாக்குதலின் போதும் சிங்களத்தின் கொமாண்டோ அணியினரே சிக்கி அழிந்திருந்தனர். இந்த மூன்று முக்கிய தாக்குதல்களில் மட்டும் ஏறக்குறைய 3000 ஆட்களை (சாவு+காயம்) கொமாண்டோ படையணிகள் இழந்துள்ளன.




“ஜயசிக்குறுய்” படைநடவடிக்கைக்கு ராங்குப் படைப்பிரிவினதும்– விஷேட கொமாண்டோ அணிகளினதும் தேவை இன்றியமையாததாகும். ஆயினும் இந்த இரண்டுவகைப் படைப்பிரிவுகளையும், “ஜயசிக்குறுய்” ஒருவருடச் சமர், வீரியமிழக்கச் செய்துவிட்டது.

“ஜயசிக்குறுய்” சமரின் விளைவாக சிங்களப் படை சந்தித்துள்ள முக்கிய பிரச்சினையாக ஆட்பற்றாக் குறையைக் குறிப்பிடலாம். கடந்த ஒரு வருடச் சமரில் சிங்களப்படை சந்தித்த ஆள் இழப்பை, படைத் தலைமை எதிர்பார்க்கவே இல்லை. குறிப்பாக உடற்சேதமடைந்த நிலையில் களத்தைவிட்டு வெளியேறும் படையினரது எண்ணிக்கை பல்லாயிரமாக இருக்கும்! என்று படைத் தலைமை நினைத்துப்பார்த்திருக்காது.

இந்த உடற்சேத– உயிரிழப்பு அதிகரிப்பிற்கு முக்கியகாரணியாக புலிகளின் மோட்டார்– ஆட்லறித் தாக்குதலின் வீரியமே அமைந்துள்ளது. இத்தகைய உயர்பரிமாணத்தில், புலிகள் எறிகணைத் தாக்குதல்களை நடாத்துவார்கள் என்றும் அது கருதியிருக்கவில்லை.

இந்த ஒருவருடச்சமரில் 3000 படையினர் பலியாகியுள்ளனர். 7000–ற்கும் மேற்பட்ட படையினர் உடற்சேதத்திற்குள்ளாகியுள்ளனர். மொத்தம் பத்தாயிரம் படையினர் நடவடிக்கையிலிருந்து அகற்றப்பட்டுள்ளனர். இது, ஒரு டிவிசனுக்கும் மேற்பட்ட தொகையினர் என்பது குறிப்பிடத்தக்கது. இதே வேளை, இரண்டு டிவிசன் படையினரைப் பயன்படுத்தி பாதையை கைப்பற்றி விடலாம் என்று முன்னர் படைத் தலைமை கணித்திருந்தது. ஆயினும், இப்போது மூன்று டிவிசன்கள் பாதை பிடிப்புக்கு பயன்படுத்தப்படுகின்றன. 65 கி.மீ. நீளமான பாதையில் இதுவரை 35 கி. மீற்றரே கைப்பற்றப்பட்டுள்ளது. இந்த முயற்சிக்காக மட்டும் ஒரு டிவிசன் படையை (ஏறக்குறைய 10.000) இழந்துவிட்டது. இவற்றால் “ஜயசிக்குறுய்” நடவடிக்கை ஆட்பற்றாக்குறையை எதிர்கொண்டது.

சிங்களப்படை சந்தித்துள்ள ஆட்பற்றாக்குறைக்கு படையை விட்டோடுவோரின் தொகையதிகரிப்பும்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ஒரு பிரதான காரணியாகும். சுமார் 18.000 பேர் படையை விட்டோடியுள்ளதாக, சிங்கள அரசு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. போர்முனையில் பெருநெருக்கடிகள் உருவாகும்போது படையை விட்டோடுவோரின் தொகை அதிகரிப்பு இயல்பு. "ஜயசிக்குறுய்" சமர் இத்தகையதொரு நெருக்கடிக்குள் சிங்களத்தை தள்ளிவருகின்றது.

ஆ.க.வெ.சமர் மற்றும் 'மின்னல்' நடவடிக்கைக்கு எதிரான சமர்களைத் தொடர்ந்து வந்த 92–ம், 93–ம் போர் ஆண்டுகளில் புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகளில் ஏற்பட்ட ஏறுமுக வளர்ச்சியின் விளைவாக பெருமளவில் படையை விட்டோடும் முதலாவது படலம் ஆரம்பமாகியிருந்தது. இப்போது, 'ஜயசிக்குறு' நடவடிக்கைக்கு எதிரான சமரின் விளைவுகளால் படையை விட்டோடும் இரண்டாவது படலமும் நடைபெறுகின்றது.

இழக்கப்படும் ஆட்தொகையை ஈடுசெய்யும் வகையில் படையில் இணைவோர் தொகை அதிகரிக்கவில்லை. சிங்களப்படை சந்திக்கும் பேரிழப்புகள் சிங்கள இளைஞர்களை ஊக்கமிழக்கவைத்துள்ளன. 'ஜயசிக்குறுய்' நடவடிக்கை தோல்வியடைகின்றது என்று சிங்கள மக்களும் எண்ணுகின்றனர். இதனால், தோற்கும் படையில் இணைய பின்நிற்கின்றனர்.

சிங்களத்தின் இராணுவ வரலாற்றைப் பொறுத்தளவில் இரண்டே இரண்டு காலகட்டத்தில் மட்டும் படையில் சேர சிங்கள இளைஞர்கள் முண்டியடித்தனர். ஒன்று, தேசிய பந்தோபஸ்து அமைச்சு என்ற ஒன்றை ஜே.ஆர்.உருவாக்கி– அதன் தலைமைப்பதவியை லலித் அத்துலத்முதலியிடம் வழங்கிய காலப்பகுதியிலும் இரண்டாவதாக, இரண்டாம் ஈழப்போர் ஆரம்பமான 90–ம் ஆண்டின் இறுதிப்பகுதியிலும் அவை நிகழ்ந்திருந்தன.

'ஜயசிக்குறுய்' படையெடுப்பிற்கு எதிரான சமரில் புலிகள் வெளிப்படுத்தும் போர்முறையும் சிங்களப்படைக்கு மனச்சோர்வைக் கொடுத்து வருகின்றது. புலிகளை போரில் வெல்லமுடியாது என்ற மனப்படிமத்தையும் அவர்களுக்கு கொடுத்து வருகின்றது.

கெரில்லா நடவடிக்கைகளிலும்– வலிந்த தாக்குதல் சண்டைகளிலும் – முறியடிப்புத்தாக்குதல்களிலும், புலிகள் திறமைகாட்டுபவர்கள் என்பது சிங்களப்படையினர்க்கும் தெரியும். ஆனால், நிலத்தை விட்டுக் கொடுக்காது நிலைகொண்டபடி– புலிகள் தீவிரமானமுறையில் மரபுச் சண்டைகளை நடாத்துவது சிங்களப்படைகள் எதிர்பார்க்காத ஒன்று. நெருங்கி நின்று நடாத்தும் நேரடிச் சண்டை உபாயங்களை உபயோகித்து புலிகள் நடாத்தும் மரபுச்சமர் அபாரமாயுள்ளது. போர்க்கலங்களில் ஏற்றத்தாழ்வுகள் இருந்தாலும், மரபுச்சமரை புலிவீரர்கள் திறம்பட நடாத்துகின்றனர்.

**குறைந்த ஆட்தொகையையும் குறைந்த ஆயுதவளங்களையும் வைத்திருந்தபடி அவற்றின் உச்சப்பயனைப் பெறும் வகையில், தலைவர் பிரபாகரன் செயற்படுத்தும் போர்த் திட்டங்களிலேயே புலிப்படைக்கு வெற்றிகள் கிடைக்கின்றன.**

புளியங்குளத்தில் ஆரம்பமான மறிப்புச் சண்டைகளுக்குப் பின்னர் புலிகள் நிலைகொண்ட பகுதிகளை சண்டையிட்டு கைப்பற்ற– இன்று வரை– சிங்களப்படைகளால் இயலவில்லை. புளியங்குளம் பின்னர் கனகராயன்குளம் என புலிகள் தாமாகவே தமது நிலைகளை விட்டுப் பின்வாங்கிய பின்னரே அந்த இடங்களை படையினர் கைப்பற்றியுள்ளனர். புளியங்குளத்தில் நடந்த மறிப்புச்சண்டைகளில் புலிகளின் நிலைகளைக் கைப்பற்ற படையினரால் முடியவில்லை. நேரடியாக நிலைகளைக் கைப்பற்றுவதற்குப் பதிலாக, களத்தை அகல விஸ்தரித்து– அதன்மூலம் புலிகளை பின்னுக்கு இடிக்க முயன்றனர். புலிகளை பலவீனமாக்கும் என்று கருதி படையினர் செய்த அளவுக்கு மீறிய கள விஸ்தரிப்பால் இன்று படையினரே அவதிப்படுகின்றனர். ஆட்பற்றாக் குறையால் அவர்கள் அவதிப்பட இதுவுமொரு காரணியாக அமைந்துள்ளது.

'ஜயசிக்குறுய்' சமரில் சுமார் முப்பதாயிரம் காலாட்படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சிங்களத்துத் தரைப்படையில் இது மூன்றில் ஒரு பங்காகும். ஆயினும், சிங்களப் படையின் சண்டைப் படையணிகளில் இந்தத் தொகை அரைப்பங்கிற்கும் அதிகமாகும். அத்துடன், ஆயுத பலத்தைப் பொறுத்தவகையில் சிங்களத் தரைப்படையினரிடம் உள்ள ஆயுத வளங்களில் முக்கால் பங்கு 'ஜயசிக்குறுய்' நடவடிக்கைக்கு திருப்பி விடப்பட்டுள்ளது. படைத்தலைமையின் முழுக்கவனமும் 'ஜயசிக்குறுய்' களமுனைகளிலேயே உள்ளது. சிங்களப்படையிலுள்ள தேர்ந்தெடுக்கப் பட்ட சிறந்த தளபதிகள் 'ஜயசிக் குறுய்' முனைகளிற்கே அனுப்பப்பட்டுள்ளனர். எனினும் சமரை வெற்றியை நோக்கி முன்னெடுத்துச் செல்ல படைத்தலைமையால் முடியவில்லை.

குறைந்த ஆட்தொகையையும் குறைந்த ஆயுதவளங்களையும் வைத்திருந்தபடி அவற்றின் உச்சப்பயனைப் பெறும் வகையில், தலைவர் பிரபாகரன் செயற்படுத்தும் போர்த் திட்டங்களிலேயே புலிப்படைக்கு வெற்றிகள் கிடைக்கின்றன.

★★★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## இரண்டாம் ஆண்டில்

# ஜயசிக்குறுய்

சிங்களத் தளகர்த்தர் ரத்வத்தவின் புகழ் பெற்ற காலக் கெடுக்களையும் தாண்டி 'ஜயசிக்குறுய்' படை நடவடிக்கை இரண்டாம் ஆண்டினுள் அடியெடுத்து வைத்துள்ளது.

முடிந்துபோன முதலாண்டுச் சமரில் 3000–ற்கும் அதிகமான சிங்களப்படையினர் கொல்லப்பட்டனர். 7000–ற்கும் மேற்பட்டோர் உடற்சேதமடைந்துள்ளனர். இந்த ஒரு வருடச் சண்டைகளில் சிங்களப் படைகள் இழந்துள்ள ஆயுதங்களினதும்– இராணுவத் தளபாடங்களினதும் பணப்பெறுமதி சுமார் 600 கோடி ரூபாய்களாகும்.

இந்த இராணுவ நடவடிக்கையின் கால நீட்சி, சிங்களத்தில் இராணுவ– அரசியல் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. இந்த ஓராண்டுச் சமரின் விளைவுகளால் சிங்களத்தின் படைப் பெருமை பாழடைந்துள்ளது. எந்த ஒரு தளபதியும் தேசிய வீரர்களாக சிறீலங்காவில் கணிக்கப்படவில்லை– கௌரவப்படுத்தப்படவில்லை. ஜயசிக்குறுய் சண்டைகளுக்கு தலைமை கொடுக்கும் அனைத்து சிங்களத் தளபதிகளும் ஏளனத்திற்கும்– கண்டனத்திற்கும் உள்ளாகின்றனர். இடமாற்றங்கள், பதவிமாற்றங்கள் மூலம் சிங்கள அரசே அவர்களைத் தண்டிக்கிறது.

ஓராண்டுச் சண்டைகள் மூலம் 65 கி.மீ. நீளமான தரைப்பாதையில் 35 கி.மீ. தூரத்தை மட்டுமே படையினரால் கையகப்படுத்த முடிந்துள்ளது. இதில் படைத்தரப்பு சந்தித்த இழப்பு அளவுக்கு மீறிய விலை கொடுப்பு என அரசு கண்டனத்திற்குள்ளாகியுள்ளது. முழுப் பலத்தையும் திரட்டி, செலவழித்து இலக்கை அடைந்தாலும் இது தோல்வியடைந்த ஒரு இராணுவ நடவடிக்கை எனவும் ஆய்வாளர்கள் மதிப்பிடுகின்றனர்.



எனினும், பாதையைக் கைப்பற்றி விடவேண்டும் என்பதில் படைத் தலைமை விடாப்பிடியாகவுள்ளது. இரண்டாம் ஆண்டில் புதிய தந்திரோபாயங்களுடன் பலத்தையும் அதிகரித்து, நகர்வுகளை மேற்கொள்ள அது எத்தனிக்கின்றது, இந்த நோக்கத்துடன் கிளிநொச்சியிலும், மாங்குளம் பகுதியிலும் சிங்கள அரசு படைக்குவிப்பைச் செய்துள்ளது. 20.05.1998 அன்று கரடிப்போக்கு முனையிலிருந்து ஒரு நகர்வை மேற்கொள்ள முயற்சித்து அடிவாங்கி பின்வாங்கியிருந்தது.



இந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் ஆரம்பமாகவிருக்கும் பருவ மழைக்கு முன்னர் படை நடவடிக்கையை வெற்றியுடன் முடிக்கவேண்டும் என



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வெளிப்படுத்தப்படாத காலகெடுவை சிங்களப்படைத் தலைமை விதித்துள்ளதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. தொடங்கவிருக்கும் புதிய சண்டைகளின் விளைவுகளை எதிர்பார்த்து சிங்கள அரசு நடாத்தவிருக்கும் மாகாணசபைத் தேர்தல் களமும் உள்ளது.

'ஜயசிக்குறுய்' முதலாண்டுச் சமரால், சந்திரிகா அரசு, பாரிய அரசியல் நெருக்கடியையும் சந்தித்துள்ளது. தமிழரின் விடுதலைப் போரை ஒடுக்க அம்மையாரின் அரசு வரைந்த இராணுவ அரசியல் திட்டங்களை புலிகள் இயக்கம் முறியடித்து விட்டது என சிங்களத்தின் எதிர்க்கட்சிகள், அரசை குற்றம் சாட்டுகின்றன. எனினும், பலவந்த ஆட்சேர்ப்பு– விட்டோடிய படையினரை கைதுசெய்தாவது களமுனைக்கு அனுப்புவது, தேசிய வளங்களை விற்றாவது போர்ச் செலவை ஈடுசெய்வது என்று, சிங்கள தேசத்தையே போர்முயற்சிக்காக திசைதிருப்ப அரசு முயற்சிக்கின்றது. இவ்விதம், சிங்கள சமூகத்தை இராணுவமயப்படுத்தியாவது தமிழினத்துடனான போரை வென்றுவிட வேண்டும் என்று பேரினவாத அரசு துடிக்கின்றது.



இன்றைய நிலையில் மூன்று டிவிசன்களைக் கொண்ட முப்பதாயிரம் படையினர் 'ஜயசிக்குறுய்' களமுனையில் இருக்கின்றனர். இன்னும் சில மாதங்கள் கழிந்ததும் ஜயசிக்குறுயின் ஆட்தேவையை அதிகரிக்கவேண்டிய நிர்ப்பந்தம் படைத் தலைமைக்கு எழும். அப்படி ஒரு நிலை ஏற்படும்போது 'வெற்றி உறுதி' படைநடவடிக்கையின் இராணுவ விளைவுகளை சிங்களம் அனுபவிக்கத் தொடங்கும்.

★★★

# தொண்ணூற்றெட்டே தமிழ்முரசு கொட்டு!

அட்டதிக்கும் அதிர்ந்து நோக்க
அண்ணனின் சேனை அணிவகுத்து நிற்க
மரணித்த வீரர் கனவுகள் பலிக்க
மகிழ்ச்சிக் கடலில் தமிழ் மண் குளிக்க
செக்கச் சிவந்த புலிக்கொடி சடசடத்து
பொலிகண்டி தொடக்கம் பொத்துவில் வரைக்கும்
பட்டொளி வீசி பறக்கும் காலம் மலருதென்று
தொண்ணூற்றெட்டே தமிழ்முரசு கொட்டு!

பரீட்சைக்குச் சென்ற 'கிருசாந்தி' களும்
திருமணம் நிச்சயமான 'ராஜினி'களும்
செம்மணி வெளிகளிலும்
சென்றிப் பொயின்றுகளிலும்
சிங்களப் படையால் சீரழித்து சிதைக்கப்பட்டது
அம்பலத்துக்கு வந்து அரசு திணறுவதுபோல்
அம்மையார் செய்த அக்கிரமங்களை
அகில உலகமும் அறிந்துகொள்ளும் காலம் மலர
தொண்ணூற்றெட்டே தமிழ்முரசு கொட்டு!

அப்பு...சாமி — என்று கும்பிட்ட இடமெல்லாம்
அப்புகாமி ஆட்கள் இப்ப இருக்கினம்.
கற்பூரம் வைச்சு வித்த இடமெல்லாம்
கசிப்புக் காய்ச்சி கூசாமல் விக்கினம்
கச்சான் வறுத்து வித்த இடங்களிலே...
கஞ்சாவைக் குவிச்சு அஞ்சாமல் விக்கினம்.
பஞ்சாமிருதம் படைக்க வேண்டிய சாமிக்கு
புஞ்சிபண்டா ஆட்கள் கசிப்பும் கஞ்சாவும்
வைக்கினம்.

ஆமிக்கு அஞ்சி நடுங்கி நடுங்கியே அர்ச்சகரும்
சாமிக்கு நேரந்தவறிப் பூசை செய்யிறார்.
இந்த நிலை மாறி அன்று போல் என்றும்...
அடியார்கள் புடைசூழ ஆண்டவன் பவனிவர
அரோகராசொல்லி அங்கப்பிரதிட்டையை
அச்சமின்றி செய்யும் காலம் அண்மித்துவிட்டதென
தொண்ணூற்றெட்டே தமிழ்முரசு கொட்டு!

மயிலை தர்மராஜா



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ஒரு நொடிப் பொழுது

**எஸ். உமாஜிப்ரான்**

உடையார்!

இப்படித்தான் அவர் தன்னூரில் அழைக்கப்படுகின்றார்.

அவரது இயற்பெயர் வேலாயுதம்.

1920—களில் விதானையாகவும் — உடையாராகவும் உத்தியோகம் பார்த்த, வேலாயுதம் அவர்களின் பேரனாரின் உத்தியோகப் பெயரே பிற்காலத்தில் இவரது குடும்பப் பெயராகிவிட்டது.

உடையார் குடும்பம், பழைய வட்டக்கச்சி கிராமத்தின் ஆதிக்குடிகளில் ஒன்று.

உடையார் விவசாயத்தில் ஊறித்திளைத்தவர், உழவுத் தொழில் தருகின்ற ஆத்ம திருப்தியை வேறு எந்தத் தொழிலிலும் அனுபவிக்க முடியாது. அந்தத் திருப்தி அவரது நிறைந்த வாழ்விலும் பளிச்சிட்டது.

பழைய வட்டக்கச்சி கிராமத்தின் மத்தியில், மா, பலா, கமுகு, வாழை, தென்னைகளின் பரிவாரங்கள் விரித்த நிழலில் உழைப்பின் உபரியாகிய உடையாரின் கல்வீடு நிமிர்ந்து, குளிர்ந்து நின்றது.

வீட்டைச் சுற்றிப் பரந்து விரிந்த வயல் நிலங்கள், ஒரு போதுமே போகங்களைத் தவறவிடாது தளதளவென்று செழித்துக் கிடக்கும்.

தன் நிலம் தனக்கு வாரி வழங்கியதை, இல்லையென்று இருந்தவர்க்கு உடையார் இல்லையெனாது கொடுத்தார். இராணுவ அட்டூழியங்களால் நிலமிழந்து, நிலை தளர்ந்து தன்னிடம் வந்தவர்களுக்கு, வேலைகொடுத்து வயிறு நிறைத்தார்.

தன்னிடம் வேலை செய்பவர்களையெல்லாம் தன் உறவுகளாய் அரவணைத்து, ஆதரித்த உடையார் குடும்பம் இன்று உருக்குலைந்து கிடக்கிறது.

26.03.98— எப்போதும் போலவேதான் அன்றும் விடிந்தது.

ஒரு இரத்தக்களரியைச் சந்திக்கப்போவது தெரியாமல் அந்தக் காலைப் பொழுது சுறுசுறுப்போடு அசைந்து கொண்டிருந்தது.

உடையார் வீட்டில் எட்டு நாட்களுக்கு முன்பு நிகழ்ந்த திருமணத்தின் கலகலப்பு இன்னும்தான் கலையவில்லை. பாவம் அந்தக் குடும்பம். ஒரு பயங்கரம் அவர்கள் மீது படியப்போவதை எந்த ஒரு கெட்ட சகுனமும் அவர்களுக்கு உணர்த்தவில்லை.

காலை 8.00 மணி

பேரிரைச்சலைக் காற்றில் நுழைத்தபடி, ஒளிக்கீற்றுகளென வானில் முளைத்த இரண்டு கிபிர் விமானங்கள், அழகிய கொடூரத்தை தெளிந்த வானில் வரையத் தொடங்கின.

யாரைப் பலியெடுப்பதற்கு இந்தப் பீடிகை?

நானா? நீயா? எங்களையா? அவர்களையா? வட்டக்கச்சியா? கண்டாவளையா? அல்லது வேறெங்கோவா? நிலத்தில் உயிர்கள் தவித்தன.

அந்தத் தவிப்பும், பீதியும் முகத்தில் வழிய, வானத்தை வெறித்தபடி உடையாரும், அவரது பிள்ளைகளும், அவரோடு இருக்கின்ற அவரது ஊழியர்களும் வீட்டு முற்றத்தில் குழுமி நின்றனர்.

வெளிக்கண்டல் குடியிருப்பைத் தமது பலிபீடமாகத் தெரிவு செய்த விமானங்கள் குண்டுகளை இறைத்து அந்தக் குடியிருப்பை உலுப்பிச் சரித்தன.

குண்டெறிந்து செல்கின்ற இரண்டு ஒளிக்கீற்றுகளையும் விழிகளால் பற்றிவிட முயன்று, தோற்ற உடையார், “எந்த வயிறு பத்தியெரிய ஆரக்கொத்திக் கொண்டு போறானோ தெரியேல்ல” என்று புலம்பிக் கொண்டிருக்கும் போதே அந்தக் கொடூரம் அவர்மீதே தரையிறங்கியது.

உடையார் வீட்டையும் பலிபீடமாக உருவகித்த விமானங்கள் அதன் மீதும் குண்டுகளைத் துப்பின.

பேரொளியும், பெரு முழக்கமும் அந்தக் கணத்தையே இடித்து நொருக்கின.

பூமி பிளந்து அந்தப் பிரதேசத்தையே உள்ளிழுத்த பிரமை.

ஒரு நொடிப்பொழுதில், அங்கேயிருந்த சிருஷ்டியின் உன்னதங்களெல்லாம் சிதைந்துபோயின.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# காலமும் காட்சியும்

விக்கித்து நின்ற காற்றசைந்து வீச, அங்கே மண்டிக்கிடந்த கந்தகப் புகை கலைந்து போனது.

சற்றுமுன் அழிந்து திசைகள் உயிர்த்திருந்தன.

பூவும், பிஞ்சும், காயும், கனியுமாய் முற்றத்தில் கொத்தாய், நின்ற அவர்களை குண்டுகள் இறைச்சிகளாய் அறுத்தும் போட்டிருந்தன.

வீட்டின் மீது ஒன்றும், பின் வளவில் இரண்டும், முற்றத்தில் ஒன்றுமாக நான்கு குண்டுகள் நர்த்தனமாடிய அந்த அரங்கு சிதைந்து கிடந்தது.

இதந்தரு மனையும், மனை சூழ்ந்த சோலைகளும் கந்தலாய்க் கிழிந்து கிடந்தன.

சற்றுமுன் வரைக்கும் அந்த வீட்டுக்குக் களையூட்டிய உயிர்களில், ஆறு உயிர்களைக் குண்டுகள் உறிஞ்சியெடுத்துவிட்டன.

அந்த ஆறில் ஒன்று உடையாரின் குருதிப்பூ. 21 வயது நிரம்பிய யாழினி. அந்த மாணவியின் வண்ணங்கள் மிளிர்ந்த வாழ்வை, தொடைகிழித்த ஒரு துண்டு இரும்பு துடைத்தெடுத்துச் சென்றுவிட்டது.

மற்ற ஐந்து பேரும் ஊழியர்களாய் வந்து, உடையாரின் உறவுகளாய் நெருங்கியிருந்தவர்கள்.

உடல் கிழித்து உயிரெடுத்த இரும்புத்துண்டுகள், வேறு ஆறு சீவன்களின் உடலைமட்டும் கிழித்துவிட்டு உயிரெடுக்காமல் விட்டு விட்டன.

அந்த ஆறு சீவன்களில் உடையாரின் மூத்த மகள் பாமினியும் ஒருவர். சாமி அறையின் மீது குண்டு விழும் போது பக்கத்து அறைக்குள் நின்ற பாமினிக்கு வயிறு பொத்தலாகி குருதி கொப்பளித்தது. இடிந்து வீழ்ந்த சுவரேறிக் குதித்து முற்றத்துக்கு ஓடிவர, அடிவயிற்று ஓலங்களால் முற்றம் அதிர்ந்து கொண்டிருந்தது.

வெடிப்பதிர்வு– குருதிப்பெருக்கு– மரணஓலம்–மூன்று அதிர்ச்சி யலைகளும் ஒன்றாய்திரண்டு– பாமினியின் புலனழித்து அருகிலிருந்த கிணற்றுக்குள் விழுத்திவிட்டன.

அவளின் உயிரை, அயலவர்கள் கிணற்றிலிருந்து அள்ளியெடுத்து விட்டனர்.

கூட்டி, அள்ளி, எரித்து, கழுவி துடைத்து எ...ல்...லா....ம் முடிந்துவிட்டது.

பாமினிக்குத் திருமணமாகி எட்டு நாட்கள்தான் நிறைந்திருந்தன. தாம்பத்திய வாழ்வின் பூரிப்புத் ததும்பிய முகத்தில் இப்பொழுது மரண பீதியைத்தான் பார்க்கமுடிகின்றது.

அந்த வீட்டில் எஞ்சியிருக்கின்ற யார் முகத்தில்தான் அந்தப்பீதி பிரதிபலிக்கவில்லை. அது அயல் வீடுகளிலும் ஒட்டிக்கிடக்கின்றது.

அங்கே உயிர் பிழைத்த மனிதர்களுக்கு ஒரு கொடிய அனுபவத்தைத் தவிர வேறு எதுவுமே மிஞ்சவில்லை.

இடியுண்ட மனை, தறியுண்ட மரங்கள், உருக்குலைந்த அந்த வீடு, ஒரு பயங்கரம் நடந்து முடிந்த எச்சங்கள் துலங்க, விகாரமாகவும் பரிதாபமாகவும் காட்சியளிக்கிறது.

வீட்டுக்கருகில் உடையார் அமைத்திருந்த மிக நேர்த்தியானதும் பாதுகாப்பானதுமான பதுங்குகுழி மட்டும் அலுங்காமல் குலுங்காமல் அப்படியே இருக்கிறது. அது மனிதர்களைப் பொத்திக் காக்க வாய்ப்பளிக்கவில்லை, யூதன் கொடுத்த 'சிங்கக்குட்டிகள்'! ▽





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சிறீலங்காவின் சர்வதேச தொடர்பில் இரட்டைத் தன்மை

★ **தமிழர்களை ஒடுக்க சர்வதேச உதவி வேண்டும். தமிழர்களுக்கு உதவுவதானால் சர்வதேச உதவி வேண்டாம்.**

★ **யுத்தத்தை நியாயப்படுத்த பயங்கரவாதம். பயங்கரவாதத்தை நியாயப்படுத்த சர்வதேசப்பிரச்சாரம்.**

இரண்டாம் உலகமகா யுத்தத்தை அடுத்து நூரம்பேர்க்கில் இடம்பெற்ற யுத்தக்குற்ற விசாரணைகளின் விளைவாக யுத்தம் இரண்டே இரண்டு நிலைகளில் மட்டுமே சட்டபூர்வமானதாக அங்கீகரிக்கப்படலாம் என வரையறுக்கப்பட்டது.

ஒன்று தற்பாதுகாப்பு நடவடிக்கையாக அடுத்தது மற்றவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு சட்டத்தை அமுலாக்குவதற்குத் துணையாக நடைமுறைப்படுத்தப்படும் பொழுது மட்டுமே யுத்தம் சட்டபூர்வமாக ஏற்புடையதாகின்றது. (Chris Brown, Understanding International Relations, 1997. Page 114)

இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் மேல் காலனித்துவம் உருவாக்கிய சிங்களப் பெரும்பான்மை அரசாங்கம் தமிழர் தாயகத்தில் அரச ஆதரவுடனான சிங்களக் குடியேற்றங்களை நடாத்தி தமிழ் மக்களின் பிரதிநிதித்துவ வீதத்தைக் குறைத்து தமிழரின் ஜனநாயக பங்களிப்பை வீழ்ச்சியடைய வைத்தல், சட்டவாக்க பங்களிப்பை அர்த்தமற்றதாக்கி பெரும்பான்மையினரின் சட்டவாக்கங்களைத் திணித்தல், தமிழரை வேலைவாய்ப்புக்கள்– மேற்படிப்புக்கள்– கைத்தொழில் முயற்சிகள் போன்றவற்றை அடைய முடியாது தடுத்து அதன் மூலம் வரண்ட பூமிகளில் வாழும் தமிழரின் பொருளாதாரத்தை மட்டுமல்ல அடிப்படை மனித உரிமைகளையும் மட்டுப்படுத்தி தமிழர்களை ஆட்சி உரிமை– பொருளாதார வளர்ச்சி அற்றவர்களாக மாற்றி தமிழர்களை அவர்களது சொந்த தாயகத்திலேயே இரண்டாந்தரப் பிரஜைகளாளாகவோ நாடற்றவர்களாகவோ மாற்றுதல் என்ற அரசியல் நோக்குடன் செயற்பட்டு வந்தது. இந்த வரலாற்று ரீதியான இன ஒடுக்கலில் 1980–ல் தமிழரின் சாத்வீக ரீதியான சத்தியாக்கிரக போராட்டம் ஆயுத படைபலம் கொண்டு முறியடிக்கப்பட்டு தமிழர்களின் அரசியல் பணிவை பலாத்காரங்களின் மூலம் பெறும் திட்டங்கள் வேகப்படுத்தப்பட்டன. இதன் உச்சக்கட்டமாக 1972 வைகாசி 22–ல் சிறீலங்கா என்ற அரசை தன்னிச்சையாக தோற்றுவித்த சிங்கள பௌத்த பேரினவாதிகள் தமிழர்களை நாடற்றவர்களாக்கினர், இதனை தமிழர்கள் ஜனநாயக ரீதியில் எதிர்க்க முற்பட்ட பொழுது நிராயுதபாணிகளான மக்கள் மேல் சிறீலங்காவின் படைபல பிரயோகம் திணிக்கப்பட்டு மக்கள் மீதான யுத்தமாக அது மாற்றப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்டு சட்டபூர்வமானதாக உள்ளது. சுருக்கமாகச் சொன்னால் இலண்டன் இன ஒதுக்கல் ஆய்வாளர் சிவானந்தன் குறிப்பிடுவது போல் 1970–கள் சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் கூட்டு



முன்னணியாட்சி தமிழர்களை மக்கள் (People) என்ற நிலையை மீண்டும் வெளிப்படுத்தச் செய்ய, 1980 களில் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சி அவர்களைத் தமிழீழத் தேச மக்களாக (Nation) வெளிப்பட வேண்டிய கட்டாயத்துக்குள்ளாக்கியது. இந்தத் தமிழீழத் தேச மக்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் என்னும் தமது தேசிய விடுதலை அமைப்பின் மூலம் தமது தமிழீழத் தேசத்தில் பல பகுதிகளை மீட்டு அரசு நோக்கிய அரசு (Defacto) மீள நிறுவும் சட்டபூர்வமான சுயநிர்ணய உரிமைப்பிரயோகத்தை சட்டவிரோதமான முறை

**பற்றிமாகரன் B.A, BSc**




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

யில் இன அழிப்பை மையமாகக் கொண்ட மக்கள் மீதான யுத்தங்கள் மூலம் தடுத்து வரும் சிறீலங்கா தனது சட்ட விரோத செயற்பாடு களுக்கு சர்வதேச உதவிகளைப் பெற உருவாக்கிய கோஷமே பயங்கரவா தம் என்ற வேஷம், யுத்தத்தை நியாயப்படுத்த பயங்கரவாதம் பயங் கரவாதத்தை நியாயப்படுத்த சர்வ தேசப்பிரச்சாரம் என்பது சிறீலங் காவின் முக்கியமான கொள்கையாக உள்ளது. தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு சட்டத்தை நடை முறைப்படுத்துவதற்கு துணையாக செய்யப்படும் யுத்தம் என்னும் சர்வ தேசத்திற்கு நியாயப்படுத்தவே சிறீ லங்கா பயங்கரவாதமென தமிழர் பிரச்சினைக்கு மகுடம் சூட்டி மகிழ் கின்றது. சந்தை நலன்களிலும் இரா ணுவ நலன்களிலும் ஆயுத விற்ப னைகளிலும் அக்கறையுள்ள நாடு கள் சிறீலங்காவின் பயங்கரவாதக் கோஷத்திற்குப் பக்கப்பாட்டுப் பாடி வருகின்றன. சிறீலங்காவுக்கு ஆதர வான முடிவுகளை எடுத்து யுத்தத் தில் சர்வதேச தலையீடுகள் உள்ளன என்பதை உறுதிசெய்துள்ளன. இவை தமிழர் பிரச்சினை சர்வதேச பிரச் சினை உலக அமைதிக்கும் பாது காப்புக்கும் ஊறுவிளைவிக்க கூடிய தன்மைகளைச் சர்வதேச தலையீட் டால் உருவாக்கி வருகின்றது என்ற உண்மையை தெளிவாக்குகின்றன. ஆகவே தமிழர் பிரச்சினை ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்திற்குரிய முக்கிய விடயங்களில் ஒன்றாகிறது. சிறீலங்கா தமிழர்களுக்கு செய்யும் இன அழிப்புக்களும் மனிதநேயத்துக் கும் எதிரான குற்றங்களும் ஐக்கிய நாடுகள் சபை தமிழீழ மக்களுக்காக உடன் தலையீடு செய்யவேண்டிய தேவையை உருவாக்கியுள்ளது. ஒரு அரசாங்கம் தனது மக்கள் எனக் கூறிக்கொள்ளும் ஒரு பகுதியினர்க்கு அமைதியையும் பாதுகாப்பையும் அளிக்கமுடியவில்லை என்றால் அவ் அரசாங்கத்தின் ஆற்றலின்மை தெளி வாவதினால் அப்பாதிக்கப்பட்ட மக்களை காப்பாற்றுவதற்கு அவ் அரசாங்கத்தின் இறைமையினை மீறி தலையிடுவதற்கு ஐக்கிய நாடுகள் சபைக்கு உரிமை– கடமை உண்டு. இவ்விடத்தில் ஐக்கிய நாடுகள் சபை யின் தலையிடாக் கொள்கை தானா கவே வலுவிழந்துவிடும் என்பது சர்வதேச சட்ட அறிஞர்கள் கருத்து. ஏனெனில் ஐக்கிய நாடுகள் சபை யின் சாசனம் "மக்களாகிய நாம்...." என்றே தொடங்குகிறது. எனவே தமிழீழ மக்களும் ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள். இம் மக்களைக் காப்பாற்ற வேண்டிய முழுப்பொ றுப்பு ஐக்கிய நாடுகள் சபைக்கு உண்டு. ஆனால் தமிழீழ மக்களின் பிரச்சினையை உள்நாட்டுப் பிரச் சினை என முழுப் பூசணிக்காயைச் சோற்றுக்குள் புதைக்கும் செயற்பாட் டில் சிறீலங்காவும் அதன் ஆதரவு நாடுகளும் தொடர்ந்து பகீரதப் பிரயத்தனம் செய்து வருகின்றன. இதனை உடைத்தெறிந்து சத்தி யத்தை தர்மத்தை உலகில் நிலை நாட்ட வேண்டிய பொறுப்பு புலம் பெயர் தமிழராகிய எம் தலையாய கடமைகளில் ஒன்றாகின்றது.

## தமிழீழ விடுதலைப் போராட்டம் உள் நாட்டுப் பிரச்சினையல்ல

உலக அரங்கில்– உலக வரை படத்தில் சிறீலங்கா என்றொரு நாடு *1972* வரை இருக்கவில்லை. சிலோன் என ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் இலங்கை எனத் தமிழிலும் அழைக் கப்பட்ட நாடு தான் இருந்து வந்தது. இந்த நாடும் கூட தனியரசுகளாக கென பிரித்தானிய காலனித்துவம் *1833*–இல் ஒருங்கிணைத்ததினால் உருவாக்கப்பட்ட ஒன்றேயாகும். அத்துடன் *1930*–ல் டொனமூர் ஆணைக்குழு தமிழ் சிங்கள அரசுக் களின் வரலாற்றுத் தன்மைகளை தமிழ் சிங்கள தேச இனங்களின் தனித்துவங்களை பேணாமல் சனத் தொகை ரீதியிலான வாக்கெடுப்பை அறிமுகப் படுத்தியதினாலேயே தமிழ்த்தேசிய இனம் சிறுபான்மை இனம் என்னும் பிரித்தானிய நாம கரணத்தை ஏற்கவேண்டியதாகியது. இதுவே தமிழர் பிரச்சினையின் (Tamils Question) தோற்றுவாயாக உள்ளது. இதனால் தமிழர் பிரச் சினை காலனித்துவப் பிரச்சினை யாக உள்ளது. அத்துடன் இலங்கைத் தீவில் காலனித்துவம் சோல்பரி ஆணைக்குழு மூலம் பெரும்பான்மை யினர் ஆட்சிக்கு வழிவகுத்து விட் டகன்றமை சிங்களப் பெரும்பான்மை அரசாங்கம் ஒன்றுக்கு சர்வதேச சட்ட அந்தஸ்தை உருவாக்கி இதன் வழி நவகாலனித்துவம் (Neo Colonialism) தமிழ்த் தேசிய இனத்தின்மீது திணிக்கப்பட்ட காலாயிற்று. இந்த நவகாலனித்துவத்தின் வளர்ச்சியாக தமிழரும் சிங்களவரும் இலங்கை அரசாங்கம் என்னும் ஜனநாயக ஒற்றையாட்சியில் பங்குபற்றுவ தற்கு காலனித்துவம் விதித்த அரசிய



முன்னைய காலனித்துவ வாதிகளான போர்த்துக்கேய டச்சுக்காரர்களால் அனுமதிக்கப்பட்டிருந்த தமிழ் அரசுக் களையும் சிங்கள அரசுக்களின் எல்லைகளை தனது நிர்வாக வசதிக் லமைப்பு நிபந்தனைகளை மீறி (Violation of the Solbury Constitution) சிங்கள பெரும்பான்மையினத்தவர் தமிழ்த் தேசிய இனத்தின் மீது திணித்த (Forcible) அந்நிய அரசாங்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கமே (Alien Government) 1972–இல் பிறந்த சிறீலங்கா என்னும் இன்றைய அரசாங்கம். இதனால் நாடற்ற தேசஇனமாக்கப்பட்ட தமிழ் மக்கள் தமது வரலாற்று நிலையான தமிழீழ மக்கள் என்ற நிலையினை தமது தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் தலைமை மூலம் வெளிப்படுத்தி தமது வரலாற்றுத் தாயகமான தமிழீழ அரசை மீள அமைப்பதாக தமது சுய நிர்ணய உரிமையைப் பயன்படுத்தி உலகுக்கு அறிவித்து அதனை குடியொப்பத்தால் நிறுவினர். இந்த சுயநிர்ணய உரிமை பிரகடனத்தை ஆயுத படைபலம் கொண்டு தடுத்து தமிழ் மக்கள் மீது மக்கள் மீதான யுத்தத்தை சிறிலங்கா பிரகடனப்படுத்தி கடந்த 26 ஆண்டுகளாக இராணுவத் தீர்வு மூலம் தமிழர் பிரச்சினையை தீர்க்க முற்பட்டு வருகின்றது. எனவே தமிழர் பிரச்சினை உள்நாட்டுப்பிரச்சினையல்ல. காலனித்துவப் பிரச்சினை. காலனித்துவம் உருவாக்கியுள்ள நவகாலனித்துவம், சர்வதேச விளைவுகளால் உலகின் பாரம்பரிய கலாச்சாரம் நாகரீகம் படைத்த இனமான தமிழீழ மக்கள் தாங்கொணாத் துன்பங்களை அனுபவிக்கின்றனர்.

### பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக தேசிய விடுதலை இயக்கம் அங்கீகரிக்கப்பட வேண்டும்

**1960**–ம் ஆண்டினதும் அதன் பின் இயற்றப்பட்டதுமான ஐக்கிய நாடுகள் சபையின் சுயநிர்ணய உரிமை சம்பந்தமான சர்வதேச சட்டங்களினாலும் பாதுகாப்புக்களினாலும் அணுகப்படவேண்டிய ஒன்று. இவ்வகையில் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைச் சட்டங்கள் ஒழுகலாறுகள் மரபுகளின் தேசிய விடுதலை இயக்கமாகவும் தேசிய விடுதலைப் போராட்ட வீரர்களாகவும் உள்ளனர். இவர்களுக்கு உரிய அந்தஸ்தை சர்வதேச அமைப்புக்கள் வழங்குவதில் ஏற்படும் தாமதமே சிறீலங்கா அரசாங்கம் தனது படைபலம் கொண்டு தமிழீழ மக்கள் மேல் மக்கள் மீதான யுத்தங்களை மக்கள் மீதான பொருளாதார தடைகளை ஏற்படுத்தி தமிழீழ மக்களை வாட்டி வதைக்க வழி கோலுகின்றது. பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக சுயநிர்ணய உரிமைக்குரலினை எழுப்பும் இயக்கங்களை அங்கீகரிப்பதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதாகும் (Recognition of a state or an organisation involved in a civil war can also help bring about intervention in favour of the beleaguered community) என சர்வதேச தந்திரோபாய விவரத்திரட்டு 1992–1993 (Strategic Survey 1992—1993) கூறுகின்றது. இவ்வகையில் தமிழீழ விடுதலைப்புலிகள் என்னும் தமிழ் மக்களின் விடுதலை இயக்கத்தை தேசிய விடுதலை இயக்கமாக உலகு அங்கீகரிப்பது பாதிக்கப்பட்ட – பாதிக்கப்பட்டுவரும் தமிழீழ மக்களுக்கு உடன் உதவும் செயற்பாடாக அமையும்.

### "சர்வதேச அங்கீகாரம் ஒன்றே குறைச்சல்" சர்வதேச ஆய்வறிக்கையின் கருத்து

இதே விவரத்திரட்டின் 1995–1996–ம் ஆண்டறிக்கை தமிழ்மக்களின் போராட்டம் குறித்து சந்திரிகா பண்டாரநாயக்கா சமாதானப் பேச்சுவார்த்தை வேடம் போட்ட காலத்தில் உலகுக்கு பின்வருமாறு 201–ம் பக்கத்தில் வெளிப்படுத்துகின்றது. தமிழர் பிரதேசங்கள் மீது உண்மையான இறைமையைக் கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சிறீலங்கா அரசாங்கம் மிக குறைந்த தீர்வையே கொடுக்க முயற்சிக்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் வரிகளை அறவிடுகின்றனர். உள்ளூர் ஆட்சியினை நடாத்துகின்றனர். சீருடை தரித்த பொலிசாரையும் இராணுவத்தையும் கொண்டுள்ளனர். (இவ்வாறு ஒரு அரசுக்குரிய எல்லா இயல்புகளையும் கொண்டிருக்கும்) அவர்களுக்கு இல்லாதது ஒன்றே ஒன்று தான். அது சர்வதேச அங்கீகாரம் மட்டுமே, கொழும்பு இதனைக் கொடுக்கமாட்டாது என்பது மட்டுமல்ல கூட்டாட்சி அரசமைக்கவும் ஆயத்தமாகவில்லை. தமிழீழ விடுதலைப்புலிகள் தாம் ஏற்கனவே கொண்டிருக்கும் அரசுநோக்கிய அரசு நிலைக்கு குறைவான எதையுமே ஏற்கமாட்டார்கள். ஆனால் சட்ட அந்தஸ்துள்ள சுய ஆட்சி மூலம் பாதுகாப்பு சுமைகளைக் குறைப்பது பெறுமதியுள்ளதாக இருக்கும் என அவர்கள் நினைக்கலாம்

### சந்திரிகாவால் முறிவடைந்த பேச்சுவார்த்தை முயற்சிகள்

சர்வதேச தந்திரோபாய விவரத்திரட்டு சரியான முறையில் தமிழர் நிலையினை ஆய்வு செய்தது. ஆனால் சந்திரிகாவோ தமிழரின் சுய ஆட்சி நிலையினை இனங்கண்டு இணக்கத்தீர்வு ஒன்றைக் கொண்டுவர பேச்சுவார்த்தைகளை அணுகவில்லை





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

என்பதை தெளிவுபடுத்தியது மட்டுமல்லாமல் சமாதானமுயற்சி என்னும் புனிதச் செயற்பாட்டினை சண்டை ஒன்றுக்கான இராணுவ ஆயத்தங்களுக்கான கால அவகாசமாகவும் தமிழீழ மக்களையும் அவர்களது விடுதலை இயக்கத்தையும் வேறுபிரிப்பதற்கான ராஜதந்திரோபாயமாகவும் செயற்படுத்தினார். இதனை இனங்கண்ட தமிழீழ விடுதலைப்புலிகள் மக்களின் நாளாந்த வாழ்வுக்கிருந்த அச்சுறுத்தல்களைத் தடைகளை நீக்கி பேச்சுவார்த்தைக்கான நல்லிணக்க சூழ்நிலைகளை உருவாக்கும்படி கேட்டதும் சந்திரிகா தமிழீழ மக்கள் மேல் யுத்தத்தை ஆரம்பித்து சந்திரிகா சமாதான முயற்சிகளை முறித்தது யாவரும் அறிந்த உண்மை.

### சர்வதேச தொடர்புகள் இராணுவத் தந்திரோபாயமாக்கப்பட்டது

சமாதானத்தை சண்டைக்கான ஆயுதமாகப் பயன்படுத்த முயன்ற சந்திரிகா அது கைகூடாமல் போனமை கண்டு மக்கள் மீதான யுத்தத்தை தானே ஆரம்பித்துவிட்டு சமாதானத்திற்கு எதிரானவர்கள் விடுதலைப்புலிகள் அவர்களை அழித்தொழித்து சமாதானத்தை நிலைநாட்டப் போகிறேன் என சர்வதேச பிரச்சாரத்தை தொடங்கினார். சர்வதேச தொடர்பும் சிறீலங்காவைப் பொறுத்தவரை தனது மக்களின் நலனுக்கு என்ற நிலை மாறி தனது இராணுவத்தின் நலனுக்கு என்ற நிலை சந்திரிகாவால் உச்சமாக்கப்பட்டுள்ளது. சர்வதேச பத்திரிகையாளர்கள் மதிப்பீட்டாளர்கள் தமிழ் தாயகத்திற்குச் செல்வதைத்தடுத்த சந்திரிகா தனது இராணுவவாதிகளின் தகவல்களையே தமிழர் தாயகம் குறித்த தகவல்களாக உலகில் பரவச் செய்து உலக சமுதாயத்தை ஏமாற்றி வருகின்றார். இன்றைய உலகு தகவல்களால் நெறிப்படுத்தப்படும் உலகு என்பதை நன்கு தெரிந்த சந்திரிகா உண்மைக்கு மாறான தகவல்களால் உலகை நெறிப்படுத்த முயன்றார். ஆனால் இது புலம்பெயர் தமிழர்களின் கூட்டு முயற்சியில் முறியடிக்கப்பட்டு விட்டது. தமிழீழ மக்களின் உண்மைத் தகவல்களை உலகுக்கு கூறும் வலிமை புலம்பெயர் தமிழருக்கு உண்டு. இதனால் சந்திரிகாவின் சர்வதேச பிரச்சாரம் தோல்வி கண்டு வருவதினால் இன்று சந்திரிகாவின் அரசாங்கத்தின் கழுகுக் கண்கள் சர்வதேசங்களிலும் வாழும் புலம்பெயர் தமிழர்களாகிய உங்கள் மேல் திரும்பியுள்ளது.

### சர்வதேசப் புலம்பெயர் தமிழர்கள் இராணுவ இலக்காக்கப்பட்டுள்ளனர்

**தம் உடன்பிறப்புக்களுக்கு உதவ தம்மைத் தவிர யாருமே இல்லாத நிலையை புலம்பெயர் தமிழர்கள் உணர்ந்து செயற்படுவதில் தவறேதும் இருப்பதாகத் தெரியவில்லை**



தமிழீழ மக்களின் விடுதலை மீதான உறுதியையும் தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவ வலிமையையும் விடுதலைமீதான உறுதிப்பாட்டையும் நன்குணர்ந்த சந்திரிகா தமிழீழ விடுதலைப் போராட்டத்தை சர்வதேச நாடுகள் அங்கீகரிப்பதை தடுப்பதன் மூலம் போராட்டக் காலத்தை நீடித்து அக்கால அவகாசத்தில் தமிழீழ மக்களையும் தமிழீழத் தேசத்தையும் உருக்குலைப்பதற்கான இராணுவ அழுத்தங்களை வேகப்படுத்தி தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வலிமையை தணித்து அல்லது இல்லாதொழித்து தமிழீழ மக்கள் மீது சிங்கள பௌத்த பேரினவாத ஆட்சியினை உறுதிப்படுத்தக் கூடிய அரசியல் தீர்வுகளை திணிக்க துடியாய்த் துடித்து வருகின்றார். இந்த பௌத்த சிங்களப் பேரினவாத மேலாதிக்கத்திற்கான பாதையைத் திறத்தலே பாதை திறப்பு யுத்தம் எனப்படும் ஜயசிக்குறு–வின் நோக்கம். இந்த சிங்கள பேரினவாதத்தை நிலை நிறுத்துவதற்கான தமிழீழ மக்கள் மீதான யுத்தங்களுக்கும் தமிழீழத் தேசம் மீதான ஆக்கிரமிப்புக்களுக்கும் சர்வதேச நியாயப்படுத்தலை செய்வதற்காக சந்திரிகா மேற்கொண்டு வரும் பிரச்சாரமே பயங்கரவாதப்பிரச்சினை என்ற உண்மைகள் சர்வதேசப் புலம் பெயர் தமிழர்களால் உலகுக்கு தெளிவாக விளக்கப்பட்டு வருவதால் சந்திரிகா அரசாங்கம் சர்வதேச தமிழர்கள் மேல் நெருக்குதல்களை மேற்கொள்ளத்தொடங்கியது. இது இரண்டு வழிகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஒன்று புலம் பெயர் தமிழர்கள். தங்கள் கிட்டிய குடும்ப உறுப்பினர்கள்– யுத்தத்தால் பாதிக்கப்பட்டுத் தவிக்கும் தம் சகோதரர்கள்– தம் தேச உடன்பிறப்புக்கள் ஆகியோரின் உயிர்வாழ்தலுக்கு என அனுப்பும் உதவிகளை தடுத்தல். அடுத்தது



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தமிழீழப் புலம்பெயர் மக்களுடைய நற்பெயருக்கும் நாளாந்த வாழ்க் கைக்கும் களங்கம் ஏற்படுத்தக் கூடிய உண்மைக்கு மாறான செய்திகளை, தகவல்களை சர்வதேச மக்களிடை வேகமாகப் பரப்புதல். இதில் முதலா வதை அதாவது தமிழீழப் புலம் பெயர் யுத்தத்திற்குப் பணம் சேர்க் கின்றார்கள் என்ற விஷமப்பிரச் சாரத்தின் மூலம் சிறீலங்கா தடுத்து நிற்பாட்டப் படாதபாடு பட்டு வருகிறது. அடுத்தது புலம் பெயர் தமிழீழ மக்களை பொருளாதார அகதிகளாக காட்டி அவர்கள் மேல் சர்வதேச சமூகம் கொண்டுள்ள அனுதாபங்களை களைந்தெறிய சந்திரிகாவின் ஏவல்படை உலகெல் லாம் திட்டம் இட்டு செயற்பட்டு வருகின்றது. பயங்கரவாதமென ஆயுத உதவிகள் இராணுவ பயிற்சி களைப் பெறவும் போர்க்கான நிதி மூலகங்களை உருவாக்கவும் சர்வ தேச உதவிகளை தேடும் சிறீலங்கா தமிழர்களை அழிப்பதற்கு சர்வதேச உதவி தேவை அவர்களுக்கு உதவுவ தானால் சர்வதேச உதவி வேண் டாம் என்ற இரட்டைத் தன்மை யைத் தனது சர்வதேச தொடர்புக ளில் தெளிவாக வெளிப்படுத்தி வருகிறது. இலங்கைத் தீவின் அர சாங்கம் என்ற போலியான அந் தஸ்தை ஏற்று தம் சந்தை நலன்க ளுக்காக அழிக்கும் சிறீலங்காவுக்கு உதவ ஆயிரம் கைகள் முன்வருகின்ற சூழலில் துடிக்கும் தம் உடன்பிறப் புக்களுக்கு உதவ தம்மைத் தவிர யாருமே இல்லாத நிலையை புலம் பெயர் தமிழர்கள் உணர்ந்து செயற் படுவதில் தவறேதும் இருப்பதாகத் தெரியவில்லை. புலம்பெயர் தமிழர் கள் எந்த சிறீலங்கா அரசாங்க பயங் கரவாதம் தாம் அரசியல் அகதிக ளாக தம் சொந்த மண்ணை– சொந்த மனிதர்களைவிட்டு அலைய வைத்ததோ அதே அரச பயங்கர வாதம் தாம் அரசியல் தஞ்சம் அடைந்து வாழும் நாடுகளிலும் தம் வாழ்வின் அமைதியை –தம் வாழ் வின் உறுதியைக் குலைக்க முற்படுவ தைத் தெளிவாக உணர்கின்றார்கள். இதனால் இலங்கைத் தீவில் சிறீலங் காவின் அரசபயங்கரவாதம் எவ வாறு தமிழீழ மக்களை எல்லாம் தேசிய எழுச்சி கொண்டெழ வைத் துள்ளதோ அதே போல் சர்வதேச புலம்பெயர் தமிழர்களையும் சந்திரி காவின் சர்வதேச நெருக்குதல்கள் தேசிய எழுச்சி கொண்டெழ வைத்து வருகின்றது. இந்த எழுச்சி வளர வளர சர்வதேச மக்களிடை தமிழர் பிரச்சினை குறித்த உண்மை நிலை தெளிதாகி சர்வதேச உதவிகள் அங்கீ காரம் தமிழீழ மக்களை நோக்கி திரும்புவதைத் தடுக்கும் முகமாகவே தமிழர் பிரச்சினை உள்நாட்டு பிரச் சினை என்ற கோஷம் சிறீலங்கா வால் மேலும் மேலும் பிரச்சாரமாக் கப்பட்டு வருகின்றது.

## யுத்தம் தான் தீர்வானால் அது உள்நாட்டுப் பிரச்சினையல்ல

*பிரித்தானியாவின் சர்வதேச தொடர்புகள் சங்கத் தலைவர்*

சர்வதேச யுத்தத்திற்கும் உள் நாட்டு யுத்தத்திற்கும் இடையிலான தொடர்புகளை ஆராய்ந்த பிரித்தானி யாவின் சர்வதேச தொடர்புகள் ஆய்வுச் சங்கத் தலைவர் கிறிஸ் பிறவுண், யுத்தம் தான் தீர்வாக இருப்பது சர்வதேச யுத்தத்தின் முக் கிய பண்பு. உள்நாட்டு யுத்தத்தில் முரண்பாட்டினை தீர்ப்பதற்கு அர சாங்கம் யுத்தம் அல்லாத பல வழி களை கையாளும் எனக் கூறி சர்வதேச யுத்தத்திற்கும் உள்நாட்டு யுத்தத்திற்கும் உள்ள வேறுபாட்டி னைத் தெளிவாக்கி உள்ளார்.

## படைகள் விலத்தப்பட்டாலே தீர்வு சாத்தியமாகும்

சிங்கள பெரும்பான்மை அர சாங்கங்களும் சமாதான தேவதை சந்திரிகாவின் அரசாங்கமும் யுத்தம் தான் தீர்வு என செயற்பட்டு வந்தமை– வருவது சமகால இலங் கைத் தீவின் வரலாறு. இது சிங்கள அரசாங்கங்கள் தமிழீழத்தை ஒரு அரசாகவும் சிறீலங்காவை ஒரு அரசாகவும் கருதி செயற்பட்டு வரும் இயல்பான தன்மையின் வெளிப் பாடாகும். இந்த யதார்த்த தன்மை யின் அடிப்படையில் எடுக்கப்ப டும் அரசியல் முயற்சிகளே அர்த்த முள்ள தீர்வைத் தரும். ஆனால் இந்த அரசியல் யதார்த்தத்தினை திரையிடும் கருவியாக சிறீலங்கா தனது படைகளை தமிழர் தாயகம் எங்கும் நிறுத்தி ஆக்கிரமிப்பு செய்து நிற்கிறது. இதுவே யுத்தத்தையும் இன அழிவினையும் விளைவித்து நிற்கி றது. ஆகவே தமிழர் பிரச்சினைக்கு தீர்வு பெறப்பட வேண்டுமானால் சிறீலங்கா படைகள் தமிழர் தாய கத்தை விட்டு விலத்தப்பட வேண் டும். மைக்கல் வால்ஸர் சர்வதேச சமூகத்தில் சட்டமும் ஒழுங்கும் என்னும் தனது கட்டுரையில் யுத்த நிறுத்தம் செய்யப்பட்டால் மட்டும் போதாது ஆக்கிரமிப்பில்லா நிலை யிலேயே விடுவிப்பும் பாதுகாப்பும் உரிமையுள்ள அமைதி தோன்ற முடி யும் என வலியுறுத்திக் கூறுகின்றார்.

**சிறீலங்கா படைகள் விலத்தப்பட்டாலே தீர்வு என்பதற்கு சாத்தியமான சூழ்நிலைகள் தோன்ற முடியும். இதை சிறீலங்கா செய்ய மறுக்கும் நிலையில் அதனை செய்ய வேண்டிய பொறுப்பு தமிழீழ விடுதலைப் புலிகளுடையதாகின்றது**

ஆகவே சிறீலங்கா படைகள் விலத்தப்பட்டாலே தீர்வு என்பதற்கு சாத்தியமான சூழ்நிலைகள் தோன்ற முடியும். இதை சிறீலங்கா செய்ய மறுக்கும் நிலையில் அதனை செய்ய வேண்டிய பொறுப்பு தமிழீழ விடுத லைப்புலிகளுடையதாகின்றது. அதற்கான சகல உதவிகளையும் வழங்க வேண்டிய பொறுப்பு தமிழீழ புலம் பெயர் தமிழர்களாகிய நம் அனைவரதும் காலக் கட்டாயமாக உள்ளது. இதனை நாம் நம்மால் இயலுமான அளவுக்கு நமது நாளாந்த கடமையாகக் கொண்டு நிறைவேற்றினாலே சிறீலங்காவின் சர்வதேச தொடர்புகளில் உள்ள இரட்டைத் தன்மை அம்பலமாகும். ▽



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# துரத்திவரும் இரவு



இரவுப் பெண்; எழிலென
எல்லோரும் எழுதுகின்றனர்.
நிலம் தபசியற்றும் நிசிப்பொழுது
அழகெனப்பாடாதவர் எவர்?
அழகின் சிகரம் இரவெனச்
சொல்லி
எழுதுதல் இலகு
இரவுக்குள் வாழ்தல் எத்தனை
சுமை
வந்தணைக்கும் காற்று
மோனத்த தவமியற்றும் மரங்கள்,
பனிநீராடிய வயல்கள்,
சில்வண்டின் ரீங்காரம்,
பேரமைதி
அழகென்றுதானிருந்தேன் நானும்,
நேற்றிரவு
கூவிவந்தென் கூரைதடவி எதிர்வீட்டில்
வெடித்ததிர்ந்தது எறிகணை.
தூரத்திலிருந்து ஏவியபின் தூங்கியிருப்பான்
பாவி.
இங்கு ஏதுமறியாது துடித்தது குடிசை.
ஓலமிட்டது.
அச்சத்தில் உறைந்து போன அயல்
ஓடிவந்தபோது....
எல்லாம் முடிந்திருந்தது.
உயிரடங்கிக் கிடந்தன பூவும் வேரும்.
இரவு வயற்காவலுக்குப் போன
தந்தையே எஞ்ச
தாயும் மகளும் அடங்கிப் போயினர்.
மகளெனப்படுவது எட்டவைகண்ட சிறு பூ
தாயெனப்படுவது யாதெனில்
இளமை மெருகுலையாத ஒருத்தி,
தலையிலடித்தபடி வந்தான், தலைவன்.
குவிந்து கிடந்த சிதிலத்தைக் கட்டி
குழறினான்.
புரண்டேதேதோ பிதற்றினான்.
சாபமிட்டான்.
பின் மூச்சிர்த்துக் கிடந்தான் மூலையில்.
பின்னரெல்லாம் வழமையென
வரிசைகொண்டன.
கூட்டியள்ளியதற்குக்
கொள்ளிவைத்து,
மொட்டையடித்து முழுகியதும்
வழமைக்குத் திரும்பியது ஊர்.
குண்டதிர்ந்தது பகலெனில்
அந்தரம் குறைவு.
ஏவுகுழலோடு அண்மித்ததாய்
ஆக்கிரமிப்பு.
அதற்குள்ளேயே ஜீவிதமென்றான
பின்பு
இரவு என்னைப்பாடாய்ப்
படுத்துகிறது.
காலமினிப் பகலாய்க்கழியாதோ?
இரவு கலைக்கிறது.
அந்தியானதும் அச்சமும் கவிகிறது.
உன் வீட்டுக் கூரையிலும் இடிவிழுமென
அந்தராத்மா அடிக்கடி எச்சரிக்கிறது.
ஊரின் அழகு இரவில் உந்நதமென்று
எட்டயிருந்தவரும் எழுதலாம்,
பாடலாம்.
வார்த்தைக் களிமண்ணால் வடிவான
சிலையொன்றை
கவிதையென
நேர்த்தியாய் வடிக்கலாம்
பார்த்துக் களிக்கலாம்.
வல்லிபுரக் கோயிலுக்கு வண்டிகட்டிச் சென்ற
நினைவுகளை,
நிலாக்கால இரவுகளைச்
சொல்லி மகிழ்தல் சுகமான சொறிவு.
இன்று
நெருப்புக்குள்ளே நீச்சலடிக்கிறது ஊர்.
இரவு வந்தெம்மை இடிக்கிறது.
பகலும்தான்.
கழிந்து போன நிலவிரவுகளும்,
கவிதைகளும், தூரவிலகத்
துரத்திவருகிறது இரவு.

**புதுவை இரத்தினதுரை**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மண்சுமக்கும் ஊழியம்

"ஜயசிக்குறுய்! வீம்பு முற்றிய சாத்தானின் வீதிபிடிக்கும் வேதம்"

1997 ம் ஆண்டு 13–ஆம் நாள் சாத்தான் ஓதத்தொடகிய இந்த வேதம் ஒரு வயது நிறைந்து– ஊனக்குழந்தையாய் தெருவில் கிடந்து சீரழிகிறது.

சாதாரண வேதமல்ல அது. அழிவின் கலைகள் தெரிந்த அனைத்து அஸ்திரங்களையும் கொண்டு பாராயணம் செய்யப் படுகின்ற சாத்தானின் வேதம்.

நவீன போராயுதங்களையும், இனவெறி நிறைந்த இராணுவத்தையும் முழுவீச்சோடு பயன் படுத்தியும், வீதியை வெற்றி கொள்ள முடியாமல் ஜயசிக்குறுய் வேதம், வாதக்காலாய் நொண்டுகிறது.

தான் ஓதுகின்ற வேதம் வரமெதையும் சம்பாதிக்கப் போவதில்லை என்பதைத் தெரிந்துகொண்ட பின்பும் ஊர் பிடித்துச் சேமித்த தனது மகிமையைக் காத்துக்கொள்ள சிங்கள இராணுவ இயந்திரத்தைச் சிதைத்தபடி சாத்தானின் வேதம் அவலம் நிறைந்த ஓலமாய் எழுகிறது.



சாத்தானின் வினைத்திறனையெல்லாம் விழுங்கி ஏப்பமிடுகின்ற தனிப்பெரும் சக்தியாக தமிழர்சேனை விஸ்வரூபமெடுத்து நிற்கிறது.

தமிழர்சேனை! உச்சரிக்கும் கணத்தில், மயிர்க்கால்கள் குத்திட்டெழ தேகமெங்கும் பரவுகிறதே ஒரு மென்னதிர்வு; அது சுதந்திரத்தின் சுகம்.

சுதந்திரத்தின் சுகம், தங்கள் நேசத்துக்கினிய மக்களின் தேகங்களில் நிலைப்பதற்கு, அந்த மென்மனிதர்களின் உடல், பொருள், ஆவி, அனைத்தும் ஊழியம் செய்கின்றன.

கடுழியம்.....

அவர்களின் வாழ்வசைவது சிற்றாறு ஊரும் சீதளச்சோலைகளிலல்ல; பற்றைக்காடுகளில்; பாழ்வெளிகளில்; உயிர் உருவும் பொறிகளுக்கிடையில் தாய்நாட்டின் விடுதலைக்காகவும், மக்களின் மீட்சிக்காகவும் விடுதலைப் போராளிகளின் வாழ்வு சிலுவைப்பாடாகிறது. மரிக்கின்ற போதும் அந்த மனிதர்களின் சீவியம் நித்தியமானது. நீளும் காலங்களிலும் தொடரும் சந்ததிகளிலும் அவர்கள் சீவிக்கின்றார்கள்.

கிளர்ந்தெழும் ஆசாபாச உணர்வுகளையெல்லாம் நசித்து அடக்கி மண் மீது காதல், இனப்பற்று, மக்கள் நேசம், சுதந்திர வேட்கை என்ற மனுக்குலத்தின் ஆதார உணர்வுகளுக்கு உயிரூட்டி– ஒப்பற்ற விடுதலை நெருப்பாக விடுதலைப்புலிகள் ஒளிர்கிறார்கள்.

காட்டு வெய்யில், ஓரிடத்தில் தரித்து நின்றால் கொழுத்திவிடுவேன் என்பதுபோல் மனிதர்களை ஓட, ஓட விரட்டும் கோர வெய்யில். காற்றிறங்கா பதுங்கு குழியுள்ளிருக்கும் புலிவீரர்களின் தேகம் புழுக்கத்தில் அவியும், வியர்வை பெருகி சீருடைதொப்பலாகும். வெளியிடை உலாவி காற்றோடு மோதி ஆசுவாசிக்க மனசு அவாவும், ஆனால், அந்தச் சூழலின் போர்விதி, உள்ளிருந்து சற்றேனும் தலைநிமிர்த்த அனுமதிக்காது. பதுங்கு குழிச் சுவரோடு தலை சாய்த்து மண்ணைச் சிநேகித்து– மண் காக்கும் ஊழியத்தில் திளைப்பார்கள் புலிவீரர்கள்.

தாரை, தாரை யாக பெருமழைத் துளிகள் நிலத்தைப் பொழியும். மண்ணைத் தழுவி மனம்போன போக்கில் வெள்ளம் பெருகும். பதுங்குகுழிகள் நீர்நிலைகளாய் தளம்பும், புலிவீரர்களின் தேகச் சூட்டை நீர் பருகும். போர்வைக்குள் சுருண்டு கதகதப்புத் தேடும் பொழுதில், குளிரில் விறைத்து பற்கள் வெட

**குருதி ஒழுகி பதுங்குகுழி சகதியாகும். அங்கங்கள் பிய்ந்து உடலோடு உறவறுக்கும். உயிர்நரல் இழையை- போர்த்தறியில்- சுதந்திரப் புடவை நெய்யக் கொடுத்த புகலுடல்கள் மண் தோய்ந்து கிடக்கும். ஆனாலும், நிலம் விழுங்க முனையும் பகைக்கெதிரான போர் சலியாது, சளையாது நீளும்**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வெடக்க– சமர் தவளும் திசை பார்த்து பொழுது கழிப்பார்கள் பிள்ளைகள்.

முழத்துக்கொன்றாய் நிலத்தைக் குதறும் எறிகணைகள்; கூடுகலைந்த குழவிகளாய் கொட்டவரும் ரவைகள்; காவலரண்களை இடித்து நொருக்கும் வெறிகொண்டு– உறுமி நகரும் இரும்பரண்கள்; இலக்குகளைத் தேடித் தேடி இடி விதைக்கும் வான்போரூர்திகள்; இத்தனை அட்டகாசங்களுடனும் சிங்கள இராணுவ இயந்திரம் நிலம் விழுங்கப் போர் திறக்கும்.

பற்றியே தீருவேன் என எதிரி பற்றவைத்த நெருப்போடு, தமிழர் சேனையின் மண் கரக்கும் உறுதியில் மூண்டெழுந்த தீ குமுறிப் பொருதும். புகை மண்டலமும் காட்சிகளை விழுங்க, ஒலி நுகர்வில் போர் உருளும்.

சிங்கள இராணுவ இயந்திரத்தின் பேரியக்க வலுவை தமிழர் சேனையின் முறுகித் திரண்ட மனவலு திணறடிக்கும், புலிவீரர்களின் உடல் வலு உருவாக்கிய காப்பரண்களும், பதுங்குகுழிகளும் எதிரியின் படைக்கல வலுவை நெஞ்சிலேந்தி நின்றெதிர்க்கும்.

குருதி ஒழுகி பதுங்குகுழி சகதியாகும். அங்கங்கள் பிய்ந்து உடலோடு உறவறுக்கும். உயிர்நூல் இழையை– போர்த்தறியில்– சுதந்திரப் புடவை நெய்யக் கொடுத்த புகளுடல்கள் மண் தோய்ந்து கிடக்கும். ஆனாலும், நிலம் விழுங்க முனையும் பகைக்கெதிரான போர் சலியாது, சளையாது நீளும்.....

போராளிகளின் காவலரண் வாழ்வு என்பது வெறுமனே எதிரியோடு சமராடுவது மட்டுமல்ல....

காலமாற்றங்கள் பிரசவிக்கின்ற இயற்கையின் சீற்றங்களோடு அவர்கள் சமராடுகிறார்கள்.

தன் மீது முட்டுகின்ற எதையும் கொட்டுவதற்குத் தயாராய் கொடுக்கைத் தூக்கியபடி அலையும் நட்டுவக்காலிகளோடும், கடித்த நொடியில் உயிரெடுக்கும் பாம்புகளோடும், குருதியைக் குடித்து– மலேரியாவைச் செலுத்திவிட்டுப் போகும் நுளம்புகளோடும் அவர்கள் சமராடுகிறார்கள்.

**புலிவீரர்களைப் பொறுத்தவரையில் ஜயசிக்குறுய் ஒரு சமரல்ல. சிங்களச்சேனையோடு, இயற்கையோடு, விஷ உயிரிகளோடு பசியோடு, தாகத்தோடு, தூக்கத்தோடு புலிகள் சேனை நடத்துகின்ற பல்வேறு சமர்களடங்கிய ஒரு பெரும் போர்.**

போர்செய்த உடலசதி, ஓய்வு கேட்டு உடல் கெஞ்சக் கெஞ்ச உருக்குலைந்த காவலரண்களைச் செப்பனிட்டு மேலதிக பதுங்குகுழி வெட்டி தங்கள் வாழ்வின் ஒவ்வொரு கணத்தையும் தேச ஊழியத்தில் செலவிடுகின்ற புளிவீரர்களின் தேகங்களில் அசதி நிறைந்து வழியும். இரவானால், இருளுக்குள் அசைகின்ற இருள் தேடும் பொழுதில், இமைகளில் ஏறியிருந்து அசதி அழுத்தும், இமைகள் இரண்டையும் இழைத்து விட முனையும் நித்திரையோடு, தேசத்தின் நித்தியத்திற்காக அவர்கள் சமராடுகிறார்கள்.

குடலைப் புசிக்கும் பசியோடும், தொண்டையை உலர்த்தும் தாகத்தோடும் அவர்கள் சமராடுகிறார்கள்.

களத்தின் முன்னரங்கிலுள்ள புலிவீரர்களுக்கான விநியோகப் பாதையைக் குறிவைத்து எதிரி செலுத்துகின்ற எறிகணைகளுக்குள் சிக்காது உயிரையும் காத்து, உணவையும் காத்து– காவலரண்களுக்கும் உணவு கொண்டு செல்வதே ஒரு தனிச்சமர்தான்.

காவலரணிலிருந்து நெடுந்தொலைவில் இருக்கும் நன்னீர் நிலைகளிலிருந்து நீரெடுத்து வரும் புலிவீரர்களும் அந்த எறிகணைச் சமருக்கு முகம்கொடுத்தே ஆகவேண்டும்.

இதனால் குறித்த நேரத்தில் உணவோ, நினைத்தமாத்திரத்தில் தாகம் தணிக்க நீரோ காவலரணிலுள்ள போராளிகளுக்கு கிட்டுவதில்லை.

மொத்தத்தில்– புலிவீரர்களைப் பொறுத்தவரையில் ஜயசிக்குறுய் ஒரு சமரல்ல. சிங்களச்சேனையோடு, இயற்கையோடு, விஷ உயிரிகளோடு பசியோடு, தாகத்தோடு, தூக்கத்தோடு புலிகள் சேனை நடத்துகின்ற பல்வேறு சமர்களடங்கிய ஒரு பெரும் போர்.

ஜயசிக்குறுயின் ஆசையை நிராசையாக்கிக் கொண்டிருக்கின்ற தமிழர் சேனையின் முறியடிப்புப் போரின் வருட நிறைவு, தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு அற்புத நிகழ்வு. தமிழர் சேனையின் நெஞ்சுரத்தையும் போர்வினைத்திறனையும் உலகுக்கு முழக்கி நிற்கும் கீர்த்தி மிகு வருடம்.

தமிழினத்திற்கு கீர்த்தி புனையும், ஜயசிக்குறுய் முறியடிப்புப் போரின் வருட நிறைவு, சிங்களத்தின் வரலாற்றில், அதன் இராணுவத்திற்கு அபகீர்த்தியை விளைத்த வருடமாக கறுத்த வருடமாக நிலைத்து நிற்கப் போகிறது.

ஜயசிக்குறுய் தொடர்கிறது......

குருதிச் சகதியில் கால்பதித்து வேரிறக்கி, புலிகள் சேனையின் நிலைபெயராக் காத்திருப்பும் தொடர்கிறது....

"மீள்வழி ஏதுமற்ற வீதிவழி நீள்கிறது கைத்தடியின் காலம்".

★★★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# 'எடிபல' நடவடிக்கையின் செலவீட்டு கணக்கு ஆரம்பம்!

கடந்த வாரத்தில் வடக்கில் நடந்த சில காத்திரமான தாக்குதல்கள் சம்பவங்கள் சிறீலங்கா இராணுவத்தரப்பிற்கும்– அரசியல் தரப்பிற்கும் கவலை அளிப்பவை யாக நிச்சயம் இருந்திருக்கும். ஏனெனில், இத்தாக்குதல்கள், சிறீலங்கா இராணுவம்– அரசாங்கம் இணைத்து வடக்கில் 'விடுவிக்கப்பட்ட பிரதேசங்கள்' இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன என்ற ரீதியில் உருவாக்கிய தோற்றப்பாட்டைக் கேள்விக்குள்ளாக்குபவையாக இருந்தன.

இந்த வகையில், வவுனியா செட்டிகுளத்தில் இடம் பெற்ற இராணுவத் தொடர் அணிமீதான தாக்குதல், யாழ் குடாநாட்டில் பருத்தித்துறையில் சிறீலங்கா இராணுவத்தின் 524–வது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் லறி விஜயரத்ன மீதான தற்கொடைத் தாக்குதல் மற்றும் யாழ் மாநாகர சபை மேயர் சரோஜினி யோகேஸ்வரன் மீதான தாக்குதல் என்பன முக்கியம் பெறுகின்றன.

மேஜர் ஜெனரல் லறி விஜயரத்ன கொல்லப்பட்டமையானது, யாழ். குடாநாட்டில் சிறீலங்கா இராணுவத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள், கட்டுப்பாடுகள் என்பனவற்றையும் மீறியதான செயற்பாடுகளுக்கு இடமுண்டு என்பதை நிரூபிப்பதாக இருந்தது. அதாவது, தமது கட்டளை அதிகாரிகளைக்கூட பாதுகாப்பதில் இராணுவம் நெருக்கடிகளைச் சந்தித்து நிற்கின்றது என்பதை இது வெளிப்படுத்தியது.

**யாழ் குடாநாடானது சிறீலங்கா இராணுவம் கூறுவதுபோன்று அதன் பூரண கட்டுப்பாட்டில் இல்லை என்பது மட்டுமல்ல அரசாங்கம் கூறுவது போன்று அங்கு சிவில் நிர்வாகமோ அன்றி அரசியல் நடத்துவதோ சாத்தியமான சூழ்நிலை இல்லை என்பதை கடந்த மாதச் சம்பவங்கள் உலகிற்கு வெளிக்காட்டியிருக்கும்.**

இதேசமயம், யாழ் மாநாகரசபை மேயர் சரோஜினி யோகேஸ்வரன் கொல்லப்பட்டமையானது சிறீலங்கா அரசாங்கம் யாழ். குடாநாட்டில் சிவில் நிர்வாகத்தைச் சீரமைத்துவிட்டோம், சிறீலங்கா அரசின் ஆணை அங்கு செல்லுபடியுள்ளதாகியுள்ளது என்பதற்குக் கொடுக்கப்பட்ட பலமானதொரு அடி என்பதில் ஐயத்திற்கு இடமில்லை.

இந்த வகையில், யாழ் குடாநாடானது சிறீலங்கா இராணுவம் கூறுவதுபோன்று அதன் பூரண கட்டுப்பாட்டில் இல்லை என்பது மட்டுமல்ல அரசாங்கம் கூறுவது போன்று அங்கு சிவில் நிர்வாகமோ அன்றி அரசியல் நடத்துவதோ சாத்தியமான சூழ்நிலை இல்லை என்பதை கடந்த மாதச் சம்பவங்கள் உலகிற்கு வெளிக்காட்டியிருக்கும்.

இதேசமயம், கடந்தவாரத்தில் சிறீலங்கா இராணுவத் தொடரணி மீது செட்டிகுளத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலானது, இராணுவத்தினருக்கு உயிரிழப்பு மட்டுமல்ல, சிறீலங்கா இரா



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ணுவம்– அரசாங்கம் பிரமாதப்படுத்திக் கொண்ட 'எடிபல' இராணுவ நடவடிக்கையின் வெற்றிகுறித்த கேள்வியை உருவாக்குவதாகவே உள்ளது.

ஏனெனில், மன்னாருக்கும் வவுனியாவிற்கும் இடையில் சிறீலங்கா இராணுவம் 'எடிபல' மூலம் உருவாக்கிய இராணுவ வேலியானது– ஒரு பெரும் நிலப்பரப்பை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிப்பதாகவும் மன்னார் தீவூடான தரைவழிப்பாதை ஒன்றைத் திறப்பதென்ற நோக்கமும் கொண்டதாகும். 'எடிபல' நடவடிக்கை முற்றுப்பெற்றபோது அரசாங்கத் தரப்பும் அதனையே அறிவித்தது அதற்கேற்பவும் செயற்பட்டது.

ஆனால் 'எடிபல' நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டபோதோ அன்றி அந்நடவடிக்கை முற்றுப் பெறும் வரையிலோ விடுதலைப்புலிகள் இந் நடவடிக்கை முற்றுப் பெறும்வரையிலோ விடுதலைப்புலிகள் இந்நடவடிக்கைக்கு எதிர்ப்புக் காட்டவில்லை. ஆகையினால், 'எடிபல' ஒரு வெற்றிகரமான நடவடிக்கை என்ற ரீதியில் சிறீலங்கா இராணுவத் தரப்பில் பிரஸ்தாபிக்கப்பட்டதோடு– புலிகள் குறித்த மதிப்பீடுகள் சிலவற்றிற்கும் அவர்களை இட்டுச் சென்றது. இதன் விளைவு 'ஜயசிக்குறு' நடவடிக்கையில் சிறீலங்கா இராணுவம் சிக்கிக் கொள்ளவேண்டி ஏற்பட்டமை வேறுவிடயம்.

ஆனால், 'எடிபல' வின் கணக்குகள் முடிவுற்றதாக சிறீலங்கா இராணுவம் அறிவித்ததன் பின்னர்தான், புலிகள் 'எடிபல' வின் கணக்கை மிகவும் சிறிய அளவில் இருந்து ஆரம்பித்தனர் எனலாம்.

இதன் விளைவு, ஆங்காங்கு



'எடிபல' இராணுவத்தினரின் பாதுகாப்பு நிலைகள் சிறு சிறு தாக்குதல்களுக்கு உள்ளாகியதோடு – உயிலங்குளம் பொலிஸ் நிலையமும் புலிகளின் தாக்குதல்களுக்கு உள்ளாகியது. இதேசமயம், 'எடிபல' வின் மூலம் விடுவிக்கப்பட்டதாக அரசாங்கம் கூறிக்கொண்ட பகுதிக்குள்ளும் புலிகளின் ஊடுருவல்களும், தாக்குதல்களும் இடம்பெறத் தொடங்கின.

இத்தாக்குதல்களின் வளர்ச்சிப் போக்கே, 'எடிபல' விற்கு முன்னதாகவே இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் இருந்த செட்டிகுளம் பகுதியில் வைத்து இராணுவத் தொடரணி மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலாகும். இத்தாக்குதலானது இராணுவத்தினருக்கு குறிப்பிடத்தக்க உயிரிழப்பை கொடுத்தது மட்டுமல்ல, 'எடிபல'வின் வெற்றிகளை வெளிப்படையாகவே கேள்விக்குரியதாக்கியுள்ளது.

அதாவது, 'எடிபல' வேலியைத் தாண்டி– 'அதாவது விடுவிக்கப்பட்ட பகுதிகளில்' காத்திரமான தாக்குதல்களைச் செய்யக்கூடியதான வலுவில் அப்பகுதியில் விடுதலைப்புலிகள் நிலைகொண்டுள்ளனர் என்பதை இத்தாக்குதல் புரிய வைத்துள்ளது. இந் நிலையானது 'எடிபல'வின் கணக்கு முடிவடையவில்லை. அண்மையில்தான் ஆரம்பித்துள்ளது இனிமேல்தான் அதிகரித்துச் செல்லும் என்பதையும் அதேசமயம், அரசாங்கம் கூறிக்கொள்வது போன்று 'எடிபல' மூலம் ஒரு பாரிய பிரதேசம் விடுவிக்கப்பட்டுள்ளது என்பதையும் பொய்ப்பிப்பதாகவும் அமைந்துவிட்டது.

இந்த வகையில், கடந்த வார நிகழ்வுகள் சிறீலங்கா இராணுவத் தரப்பும்– அரசாங்கத்தரப்பும் தமது வெற்றி எனப் பிரச்சாரப்படுத்திக் கொண்ட 'ரிவிரச' மற்றும் 'எடிபல' இராணுவ நடவடிக்கைகளின் வெற்றி குறித்து பலமான கேள்விகளை எழுப்புபவையாகவே இருந்துள்ளன. ஏனெனில் ரிவிரச வினதும், எடிபல வினதும் கணக்குகள் இன்னமும் முடியவில்லை. அவை இன்னமும் தொடர்வனவாகவே உள்ளன என்பதையே கடந்தகால நிகழ்வுகள் உணர்த்துபவையாகவுள்ளன.

★★★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சிறீலங்கா காற்றைக்கூட விற்க முனையலாம்

ஆசிய நாடுகளின் பொருளாதார வீழ்ச்சிக்கும் நிதி நெருக்கடிக்கும் தீர்வு காண்பதற்காக பிரிட்டனில் நடைபெற்ற ஆசிய நாடுகளுக்கு உதவி வழங்கவென ஐரோப்பிய சமூகத்தின் மாநாடு பிரிட்டிஷ் பிரதமர் ஜோன்பிளேயரின் தலைமையில் நடைபெற்றது. இதில் குறிப்பாக ஆராயப்பட்ட விடயங்களாவன,

ஏழ்மை நிலை
சுகாதார நலன்கள்
சுற்றுச் சூழலின் பாதிப்பு
குடும்ப நல அபிவிருத்தி
பொருளாதார வீழ்ச்சி
நிதி நிலை பாதிப்பு

என்பவை பற்றி ஆராயப்பட்டன. ஆயினும் இம் மாநாடு ஆசிய நாடுகளுக்கு உதவுவது பற்றி தீர்மானம் எடுத்ததைத் தவிர வேறு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என பொருளாதார விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஆசிய நாடுகளைப் பொறுத்தவரையில் அமெரிக்கப் பொருளாதாரத்திற்கே சவால் விடக்கூடிய நிலையில் முன்னேறிய ஜப்பானே இன்று பெரும் பொருளாதார, நிதி நெருக்கடியில் சிக்கியிருப்பது சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய ஒன்றாகும். மாறிமாறி வரும் ஜப்பானிய பிரதமர்களும் அவர்களது மந்திரி சபையும் ஏதாவதொரு சூழலில் சிக்கி இராஜினாமா செய்வதும் தொடர் கதையாகவே உள்ளது.

கொரியாவைப் பொறுத்தவரையில் வடகொரியா தனது மக்களின் உணவுத் தேவைகளையும், மற்றும் உறைவிட, சுகாதார தேவைகளையும் வழங்குவதற்கு வெளிநாடுகளில் கையேந்த வேண்டிய நிலையிலேயே உள்ளது. ஆயினும் தென்கொரியர்கள் பொருளாதார வளர்ச்சியில் ஜப்பானுடன் போட்டியிடக்கூடிய முன்னேற்றம் காண்பதாக பீற்றிக் கொண்டாலும் இன்று பொருளாதார ரீதியில் படுபாதாளத்தில் வீழ்ந்துள்ளது. இலங்கையிலும்கூட தென்கொரியர்கள் பல முதலீடுகளை நிறுவியபோதும் இன்று அவை சரிவரச் செயற்பட கொரிய நாட்டு நிதிநிலை இடங்கொடுக்குமா என்பதே இன்றுள்ள முக்கிய விடயமாகும்.

கொரியாவில் உதாரணமாக வெளிநாட்டு தொழிலாளர்களை குறிப்பாக ஆசிய நாட்டுத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியிருந்த தனியார் நிறுவனங்கள் பல இன்று அவர்களை வேலையிலிருந்து நிறுத்தியுள்ளதோடு, அந்நாட்டுத் தொழிலாளர்களைக்கூட ஆட்குறைப்புச் செய்யவேண்டிய கட்டாயத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

தாய்லாந்து, கம்போடியா, வியட்னாம், லாவோஸ் போன்ற நாடுகளும் மீளமுடியாத பொருளாதாரச் சிக்கல்களிலிருந்து மீள்வதற்கான பெரும் பிரயத்தனங்களைச் செய்துகொண்டிருக்கிறது எனலாம்.

> யுத்தத்தை நிறுத்தி அபிவிருத்தியைப் பேணுவோம். மக்களின் துயர்துடைப்போம், வேலையில்லாப் பிரச்சினையைத்தீர்ப்போம், நாட்டின் வளங்களைப் பாதுகாப்போம், வெளிநாட்டுத் தரகர்களுக்கும் நிறுவனங்களுக்கும் சிம்மசொப்பனமாக விளங்குவோம் என ஜனாதிபதி சந்திரிகாவின் தாயார் ஒரு காலத்தில் நிலவுக்குச் சென்றாவது அரிசி கொண்டு வருவோம் என்பது போல பல நிறைவேற்றவே முடியாத வாக்குறுதிகளை அள்ளி வீசி ஆட்சிக்கு வந்த சந்திரிகா அரசு தனது அரசைக் கூட வெளிநாட்டினருக்கு விற்றாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இந்தோனேசிய பொருளாதாரமே அதன் அரசியல் தலைமையின் ஊழல்களினால் நாறிப்போய்க் கிடக்கிறது. ஏற்கனவே நான்கு வங்கிகள் அங்கு வங்குரோத்தாகிவிட்டன. இன்னும் ஏழு வங்கிகள் இழுத்து மூடப்படவேண்டிய நிலையில் உள்ளன.

ஜனாதிபதி சுகார்ட்டோவின் குடும்ப அங்கத்தவர்களே அங்குள்ள நிதி நிறுவனங்களைப் பரிபாலித்து வருகிறார்கள். வங்குரோத்தாகுகின்ற 7 வங்கிகளில் 2 வங்கிகள் சுகார்ட்டோவின் மைத்துனருக்கும், ஒரு வங்கி மருமகனுக்கும் சொந்தமானவை என்பது குறிப்பிடத்தக்கது. இந்தோனேசியாவுக்கு நிதி உதவி வழங்கும் சர்வதேச நாணயநிதியம் இது குறித்து இந்தோனேசிய அரசை எச்சரித்திருக்கிறது. அமெரிக்க டொலரின் மதிப்புக்கேற்ப பலமுறை இந்தோனேசியா தனது ருப்பியா என்னும் நாணயத்தை மதிப்பிறக்கம் செய்ததன் பயனாகவும், பணவீக்கத்தை உண்டு பண்ணுமளவுக்கு ரூபாய் நோட்டுக்களை அச்சிட்டு வெளியிட்டதாலும் மக்கள் பொருட்களை வாங்குவதற்கு கட்டுக்கட்டாக பணத்தை வைத்திருந்தாலும்கூட பொருட்களை வாங்கமுடியாது அல்லலுறுகின்றனர்.

பர்மா, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் போன்ற நாடுகளும் ஏதாவதொரு விடயத்தில் பொருளாதார வீழ்ச்சியையும், நிதி நெருக்கடியையும் கொண்டுள்ளது என்பதை துணிந்து கூறலாம். இந் நாடுகள் அனைத்தும் வெளிநாட்டு மூலதனக்காரர்களுக்கு செங்கம்பளம் விரித்து அழைப்பு விடுவதிலிருந்தே இதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளமுடியும்.

தன்னிறைவுப் பொருளாதாரம் என மக்கள் சீனம் பீற்றிக் கொண்டாலும் இதுவும் வெளிநாட்டு மூலதனத்துக்கான தமது அழைப்பை விடுத்துக்கொண்டிருப்பதைக் காணக் கூடியதாகவேயுள்ளது.

கடைசியாக ஒரு காலத்தில் சிங்கப்பூர் ஜனாதிபதி நாம் சிறீலங்காவைப் போல் முன்னேற வேண்டும் என உதாரணமாகக் கூறிய சிறிலங்கா இன்று மீளவே முடியாத பொருளாதார வீழ்ச்சிக்கும், நிதி நெருக்கடிக்கும் ஆளாகியுள்ளது தெட்டத்தெளிவாகியுள்ளது.

> **சிறீலங்காவில் மக்கள்விடும் மூச்சையும், சுவாசிக்கும் காற்றையும்கூட அரசு வெளிநாட்டவருக்குத் தாரை வார்த்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.**

மாறிமாறி வரும் அரசியல் கட்சிகளின் ஆட்சிகள், ஏதாவதொரு விதத்தில் சர்வதேச நாணய நிதியத்தின், உலக வங்கியின் தாளத்துக்கு ஆட்டம் போடுபவையாகவே செயல்பட்டு வருகின்றன. முன்னைய ஐக்கிய தேசியக் கட்சி உலக வங்கியின் தாளத்திற்கு ஆட்டம் போட்டு நாட்டை அந்நிய மூலதனக்காரருக்கு தாரை வார்க்கிறது என வீராவேசக்கூச்சலிட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு இன்று ஆட்டம் போட்டவர்களை விட ஆனந்தக் கூத்தாடுகின்றனர் என்றால் அது மிகையாகாது.

இலங்கையைப் பொறுத்தவரையில் பராக்கிரமபாகு காலத்தில் வெளிநாடுகளுக்கே அரிசி ஏற்றுமதி செய்த பெருமைமிக்க நாடு என்று பீற்றிக் கொள்ளும் ஆட்சியினர், இன்று அரிசி, தேங்காய் ஏன் சர்வதேசரீதியில் பிரசித்தி பெற்ற யானைகளைக் கொண்ட நாடு என்ற போதிலும் தாய்லாந்திலிருந்து தேங்காயையும் யானையையும் இறக்குமதி செய்யப்போவதாக அறிவித்துள்ளது. ஒரு அரசியல் விமர்சகர் கூறியதுபோல் மருந்துகள், வைத்தியர்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்யும் அரசு போகிறபோக்கைப் பார்த்தால் நோயாளிகளையும் இறக்குமதி செய்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை என்பதை உற்றுநோக்க வேண்டிய நிலையே இன்றுள்ளது.

யுத்தத்தை நிறுத்தி அபிவிருத்தியைப் பேணுவோம். மக்களின் துயர்துடைப்போம், வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்போம், நாட்டின் வளங்களைப் பாதுகாப்போம், வெளிநாட்டுத் தரகர்களுக்கும் நிறுவனங்களுக்கும் சிம்மசொற்பனமாக விளங்குவோம் என ஜனாதிபதி சந்திரிகாவின் தாயார் ஒரு காலத்தில் நிலவுக்குச் சென்றாவது அரிசி கொண்டு வருவோம் என்பது போல பல நிறைவேற்றவே முடியாத வாக்குறுதிகளை அள்ளி வீசி ஆட்சிக்கு வந்த சந்திரிகா அரசு தனது அரசைக் கூட வெளிநாட்டினருக்கு விற்றாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஒவ்வொரு வருடமும் யுத்தத்திற்கான நிதியைப் பெறுவதற்கு ஒவ்வொரு முக்கிய துறையையும் வெளிநாட்டமைச்சருக்கு விற்பதில் சந்திரிகா அரசு கின்னஸ் சாதனை புரியும் என்பதில் சந்தேகமில்லை. ரெலிகொம் நிறுவனம் இன்று வெளிநாட்டவரின் கையில். தபால், போக்குவரத்து கூட இவர்கள் விற்றாலும் விற்கக்கூடும். ஏனெனில் மின்சாரத்தைக் கூட தனியார் மயப்படுத்தல் என்ற போர்வையில் வெளிநாட்டவருக்கு விற்க முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஆபிரிக்க நாடுகளை கைப்பற்ற வெள்ளையர்கள் சென்ற போது வெள்ளையர்களின் கைகளில் பைபிள் இருந்தது. அங்கிருந்த நிலபுலன்கள் ஆபிரிக்கர்களின் கைகளில் இருந்தது. சிறிது காலம் சென்றபின் ஆபிரிக்கர்களின் கைகளில் பைபிள் இருந்தது. வெள்ளையர்களின் கைகளில் அவர்களது நிலபுலன்கள் இருந்தது என்ற கூற்றுக்கமைய சிறீலங்காவில் மக்கள்விடும் மூச்சையும், சுவாசிக்கும் காற்றையும் கூட அரசு வெளிநாட்டவருக்குத் தாரை வார்த்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**பூவரசன்**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

**தமது நலன்களிற்கெதிராகச் செயற்படுபவர்களைத் தமது பொட்டுக் கேடுகளை வெளிக்கொண்டு வருபவர்களை ஆட்சியாளர்களிற்கு பிடிப்பதில்லை என்பது வழமையானதுதான். மக்கள் நலனிலன்றி தமது ஆட்சியதிகாரத்தை காப்பாற்றிக் கொள்ளுதலும் நீடித்துக் கொள்ளுதலுமே தேவையெனக் கொண்டவர்களால் தமது வண்டவாளங்கள் தண்டவாளத்திலேறுவதை எப்படிப் பொறுத்துக் கொள்ளமுடியும்.**

சிறீலங்காவின் நிலமை இதற்கு எந்தவிதத்திலும் குறைந்ததல்ல. 'அதெப்படி உங்களால் அவ்வாறு சொல்ல முடியும்? பத்திரிகைச் சுதந்திரத்தைக் காப்பேன் என்று வாக்குறுதி அளித்தே பத்திரிகைகளின் ஏகோபித்த ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதியின் நாட்டில் எவ்வாறு இதெல்லாம் நடக்கும்?' இப்படி எவரும் கேட்க மாட்டீர்களென நம்புகிறேன்.

முன்சொன்ன கொலை, கடத்தல் போன்ற உத்திகளைவிட, கேவலமான வழிகள் கூடச் சிறீலங்காவில் கடைப்பிடிக்கப்படுகின்றன.

பட்ட நடவடிக்கைகளை அடுத்து, இப்போது முப்படைகளில் ஒன்றின் தளபதியே இதனைத் திட்டமிட்டுச் செய்வித்தார் எனப்பரவலாக நம்பப் படுகிறது. அத்தாசும் சூசகமாக இதைச் சொல்லியிருக்கிறார்.

இதைவிட இன்னுமொரு விடயம், இக்பால் அத்தாசின் வீட்டில் சுப்பிரமணியம், பாதலட்சுமி என்ற இரு தமிழர்கள் பணியாட்களாக இருப்பதை வைத்து அவரைப் புலிகளின் ஆதரவாளராக சித்தரிக்க முற்படும் வேடிக்கையும் நடைபெறுகிறது. ஆனால் அத்தாஸ் தமிழர் மீதான போரை அரசு வெற்றிகரமாக நடத்தவில்லை எனவும் அதை எவ்வாறு வெற்றிகரமாக நகர்த்தலாம் என்னும் நோக்கிலுமே தனது கட்டுரைகளை எழுதுகிறார் என்னும் கருத்து அத்தாஸ் மீது உள்ளதும் குறிப்பிடத் தக்கது.

இதற்கு முன்பும் அத்தாஸ் மீது சேறு பூச நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. ஆனால் எல்லாமே புஸ்வாணமாய்ப் போயின. அத்தாஸ் எழுதும் கட்டுரைகள் ஊடாக புலிகளிற்கு செய்திகள், தகவல்கள் சென்று சேர்கின்றன – என்றொரு புரளியைக் கிளப்பிவிட்டு அவரை ஒரு தேச விரோதியாகச் சித்தரிக்க முயன்றனர் படையினர். குறிப்பாக விமானப் படையினர் இந்தப் புண்ணிய கைங்கரியத்தில் முன்நின்றனர். (மற்றைய படைகளை விட விமானப் படையினர் உயர்கல்வி, வசதியான குடும்பப் பின்னணியையுமுடையவர்கள் என்பது நோக்கத்தக்கது).

கரிப்பட்டமுறிப்பு பகுதியில் தம்மிடம் சரணடைந்த ஒரு அரைவேக்காட்டு நபரை (கொழும்பு பத்திரிகைகளின் விமர்சனம்) வைத்து இதைச் சாதிக்க முற்பட்டார். "நான் புலிகளின் பிரதம மொழிபெயர்ப்பாளன். சண்டே ரைம்ஸின் நிலவர அறிக்கையினை (Situation Report) நான் மொழிபெயர்த்தேன். அது எட்டு பிரதிகள் எடுக்கப்பட்டு புலிகளின் ஒவ்வொரு பிரிவுக்கும் அனுப்பப்படும் என்றார் அந்த நபர்! அதா

# சிறீலங்காவில்

## அச்சுறுத்தப்படும், கேவலப்படுத்தப்படும்

# பத்திரிகைச் சுதந்திரம்

இந்த வகையில் ஆட்சியாளர்களின் தீவிர நெருக்கடிக்குள்ளாகுபவர்களில் முதன்மையானவர்கள் பத்திரிகையாளர்கள். கடந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் உலகெங்கிலும் பத்திரிகையாளர்கள் மீது 681 தாக்குதல்கள் தொடுக்கப்பட்டுள்ளன. 13 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 33 பேர் காணாமற்போயுள்ளனர்.

என்னதான் எடிற்றேர்ஸ், கில்ட் ஆட்டிக்கின் நைன்ரீன், இன்ரநஷனல் பென், இன்டிபென்டன்மீடியா என்ற அமைப்புகளைப் பத்திரிகையாளர்கள் கொண்டிருந்தாலும் அவர்கள் மீதான தாக்குதல்களும் பழிவாங்கலும் இயல்பானதேயெனக் கொள்ளப்படுமளவிற்கு சில நாடுகளின் அரசியல் நிலமை உன்னத நிலையில் உள்ளது!

பிறவுணிங் பிஸ்ரல்களுடன் வீட்டினுள் புகுந்த ஐந்து நபர்கள் பணிப்பெண்ணான பாதலட்சுமியிடம் விபச்சாரத்தில் ஈடுபடும் பெண்கள் எங்கே? என்று விசாரித்தனர். கடந்த மாதம் 12–ம் திகதி இரவு 9– மணிக்கு பிரபல பத்திரிகையாளர் இக்பால் அத்தாசின் வீட்டினுள் புகுந்த ஆயுதந்தாங்கிய இனந்தெரியாத நபர்கள் கேட்ட கேள்விகள் எப்படியிருக்கின்றன?

நேருக்கு நேராக அவர்களின் ஊழல்கள் இழப்புகளைச் சாடும் அத்தாசை ஒடுக்க எடுக்கப்பட்ட மிகக் கேவலமான கடைசி நடவடிக்கையே இது. மலர் வளையம் அனுப்பியது, கொலை மிரட்டல், புலிகளுக்குத் தகவல் வழங்கும் தேசத்துரோகியாக சித்தரித்தமை என்று ஒவ்வொரு தளபதிகளாலும் செய்யப்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வது 'நிலவர அறிக்கை'யில் இருந்தே புலிகள் தகவல்களைப் பெறுவதாகக் கற்பிதம் செய்கிறது அவரது கூற்று. எப்படியிருக்கிறது?

இதில் என்ன புதினமென்றால், இவ்வாறான அதி அற்புத மொழி பெயர்ப்பாளரை, விமானப்படை முகாமொன்றில் வைத்து மேற்கண்ட வாறு கருத்து வெளியிடுவதற்கு பயிற்சியளிக்கப்பட்டு வந்த விடயம், ஒரு உயர் அதிகாரியால் அத்தா சுக்குத் தெரியப்படுத்தப்பட்டுவிட, குறித்த செல்லத்துரை செந்திநாத னின் பேட்டி கலகலத்துப்போயிற்று.

விவகாரம் அத்தோடு முடிந்து போகவிடவில்லை. அத்தாஸ் ஒவ வொரு சந்தர்ப்பத்திலும், தகவல்கள் எங்கிருந்து கசிகின்றன என்பதைப் புட்டுப் புட்டு வைக்கத்தொடங்கி னார். விமானப்படையினரின் 98–ம் ஆண்டிற்கான நாட்காட்டி (Calander) யில் அவர்களால் பாவிக்கப்ப டும் விமானங்கள், குண்டுகள், ஏவுக ணைகளின் படங்கள் பிரசுரிக்கப்பட் டிருந்தன. அடுத்த வாரம் சண்டே ரைம்ஸின் நிலவர அறிக்கை, 'கலண் டர்களே எல்லாத் தகவல்களையும் சொல்கின்றன!' என்றது.

**பத்திரிகையாளர் விடயம். எந்தச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதாகக்கூறி ஆட்சிக்கு வந்தார்களோ, அவர்களின் ஆட்சியில் அதே சுதந்திரம் முன்பிருந்ததைவிடவும் ஆழமாகக் குழிதோண்டிப் புதைக்கப்படுவதுடன் கேவலப்படுத்தப்பட்டும் வருகிறது.**

சுதந்திரப் பொன்விழாவை முன் னிட்டு BMICH (பண்டாரநாயக்கா நினைவு சர்வதேச மாநாட்டு மண்ட பம்)–ல் கண்காட்சி நடைபெற்றதல் லவா? இராணுவத்தின் காட்சிக் கூடத்தில் நவீனரக ஆயுதங்கள் வைக் கப்பட்டிருந்தன. இராணுவத்தினர் புதிதாகப் பெற்ற நவீனரக ஆட்லறி யொன்றை பிக்கு ஒருவர் பார்வை யிடுவதையும் இராணுவ வீரன் ஒரு வன் அவருக்கு விளக்கமளிப்பதை யும் அடுத்த வார சண்டே ரைம்ஸின் முதற்பக்கம் தாங்கி வந்தது. படத்தின் கீழே 'யார் தகவல்களை வழங்கு கிறார்கள்?' என்ற குறிப்பும் இருந்தது.

இப்போது வீடு புகுந்து நடந்தி ருக்கிறது கொலை மிரட்டல். விட் டாரா அத்தாஸ்? விமானப்படைத் தளபதியின் பதவி நீடிப்பை ஒரு வாங்கு வாங்கியிருக்கிறார். "எப்படி ஒலிவர் பதவி நீடிப்புப்பெற்றார்? ஒரு பில்லியன் பெறுமதியான கேள்வி" என்றது நிலவர அறிக்கை.

அமுக்க அமுக்கப் பீறிடும் நிகழ்வு களாக தொடர்கிறது சிறீலங்காவின் பத்திரிகையாளர் விடயம். எந்தச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதாகக்கூறி ஆட்சிக்கு வந்தார்களோ, அவர்க ளின் ஆட்சியில் அதே சுதந்திரம் முன்பிருந்ததைவிடவும் ஆழமாகக் குழிதோண்டிப் புதைக்கப்படுவதுடன் கேவலப்படுத்தப்பட்டும் வருகிறது.

★★

## அன்று நிலவிலிருந்தாவது அரிசி இன்று என்றாவது ஒருநாள்

இந்த ஆண்டில் இல்லை எதிர்வரும் ஆண்டில் இருக்கமாட்டார் எங்கள் தோழர்கள் கூண்டில்–இவை போராட்ட வெற்றியில் நம்பிக்கை கொண்ட ஒரு கவிஞனின் வரிகள். இந்த ஆண்டில் இல்லாவிடினும் அடுத்த ஆண்டிலாவது எனது தோழர்களைச் சிறை மீட்பேன். அப்போது புதிய தோழர்களும் சிறை செல்ல வேண்டியிருக்காது என்கிறாள் அவள்.

இப்போது ஜெனரல் ரத்வத்தையும் இதே பாணியில் ஒரு அறிவிப்பை விடுத்திருக்கிறார் "என்றாவது ஒருநாள் ஜெயசிக்குறு நடவடிக்கை வெற்றிகரமாக முடியும்" மூன்று மாதத்துள் முடிக்கப்படுமென தொடங்கிய நடவடிக்கை புலிகளை அழித்து யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கை இன்று நிலவிலிருந்தாவது அரிசி கொண்டுவரும் வாக்குறுதி போல என்றாவது ஒருநாள் என்று சேடமிழுத்து நிற்கிறது.

யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்படாவிடில் நாடு அழிவுற்று விடும் என பொருளியலாளரும் அரசியலாளரும் அலறிக் கொண்டிருக்க ஓர் இராணுவ நடவடிக்கையை முடிக்கவே என்றாவது ஒருநாள் என்று சொல்லும் நிலையில் யுத்தம் எங்கே முடிவது? அப்படியாயின் வாழ்க சிங்களம்!



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சிறீலங்கா கல்வி அமைச்சின் பாடத்திட்டத்தில் மறைக்கப்பட்ட வரலாறு

சிறீலங்காவில் தமிழர்களின் பூர்வீக வரலாறு மட்டுமல்ல மிக சமீபத்தைய வரலாறுகள் கூட மறைக்கப்படுகின்றன. நடந்ததொன்றுக்கு அப்படி ஒன்றும் நடவாதது போலவும் நடவாத ஒன்று நடந்தது போலவும் தோற்றமளிக்கப்படுகிறது. சிங்களப் பேரினவாதிகளும் சிங்களப் பேரினவாத புத்திஜீவிகளும் தான் இவ்விதம் வரலாற்றை மறைக்கிறார்கள் என கூறமுடியாது.

சில அரசியல் வாதிகளும் அவ் அரசியல் வாதிகளுக்கு காவடி தூக்கும் அறிவியல் நேர்மையற்ற புத்திஜீவிகளும் கூட வரலாற்று மறைப்பிலும் இருட்டடிப்பிலும் ஈடுபடுகின்றனர். இவ்விதமே சிறீலங்காவின் கல்வியாளர்களால் தொகுக்கப்பட்ட ஆண்டு 6–12 வரையான வரலாறும் 7–ம் ஆண்டு சமூகக் கல்வியும் மறைக்கப்பட்டதும் திணிக்கப்பட்டதுமான வரலாறாகவே உள்ளன. இந்த வரலாற்றுச் சிறப்பானது முழுமையாக தமிழரின் சுயநிர்ணயத்தையும் வாழ்விடத்தையும் மழுங்கடிப்பதற்காகவே செய்யப்பட்ட ஒன்றாகவே உள்ளது.

7–ம் ஆண்டு சமூகக் கல்வியை எடுத்துக்கொண்டால் 10–ம் அத்தியாயத்தில் இருந்து 17–ம் அத்தியாயம் வரை போத்துக்கீசர் வருகை பற்றிக் கூறுகிறது. 16–ம் அத்தியாயம் வரை யாழ்ப்பாண இராச்சியம் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. ஆனால் 17–ம் அத்தியாயத்தில் திடீரென யாழ்ப்பாண இராச்சியம் பற்றிக் கூறப்படுகின்றது.

"யாழப்பாணத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றிய ஆரியச்சக்கரவர்த்தி அரசின் அச்சுறுத்தல் இக்காலப் பகுதியில் முக்கியத்துவம் பெறும் ஒரு விடயமாகும். கம்பளை இராச்சியத்தின் அமைச்சருள் ஒருவரான நிசங்க அரசக்கோனார் என்பவர் அந்த அச்சுறுத்தல்கட்கு அஞ்சாது அவர்களைக் கட்டுப்படுத்தினான். இவன் கம்பளை இராச்சியத்தை ஆரியச் சக்கரவர்த்தியிடம் இருந்து பாதுகாத்தான் மேலும் கோட்டை இராச்சியம் உருவாவதற்கு வழி வகுத்தவனும் இவனே..."

ஆகவே, இதன்படி பார்த்தால் 13–ம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை படையெடுத்துச் செல்லக்கூடிய ஒரு யாழ்ப்பாண இராச்சியம் இருந்துள்ளது தெரிகின்றது. நிலமை இவ்வாறு இருக்க 7–ம் ஆண்டு சமூகக் கல்வியில் அந்த 08 அத்தியாயங்களில் யாழ்ப்பாண இராச்சியம் இருட்டடிப்புச் செய்யப்பட்டது எதற்காக?

தென்னிந்தியப் படையெடுப்பாலும் மலேரியா நோயாலும், அனுராதபுரம் பொலநறுவை, தம்பதேனியா, குருநாகலை, கம்பளை ஆகிய சிங்கள இராசதானிகட்கு இடம் பெயர்ந்ததைக் கூறும் இவ் 08 அத்தியாயங்களும் இதே காலத்தில் தழைத்தோங்கிய வன்னி இராச்சியம் பற்றி மறந்து போனது ஏன்?

அனுராதபுரத்திலிருந்து கோட்டை வரையிலான வரலாறுதான் இலங்கையின் வரலாறா? அதேவேளை சிங்களவர்களின் வரலாறு கூட முழுமையாக இல்லை என்பதும் கவனத்திற்கொள்ளப்பட வேண்டும். கண்டி இராச்சியமும் கண்டி யாழ்ப்பாண இராச்சியங்கள் போன்று இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் தீவின் கிழக்குப் பகுதியின் நிலைபற்றிக் கூட எதுவுமே நினைவு கூரப்படவில்லை.



**நடா. கருணாகரன்**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

6–ம் ஆண்டு வரலாற்றினை பார்ப்போமானால் 2–ம் அத்தியாயத்தில் இருந்து 11–ம் அத்தியாயம்வரை படிப்படியான திட்டமிட்ட ரீதியில் முழுமையான சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை நிலை நிறுத்துவதாக அமைந்து செல்கிறது. பௌத்தமதம் வருகை, அதன் புனிதம், மகிமை என்பவற்றின் ஊடாக அதைத்தான் ஒரு சரியான மதமாக 4–ம் அத்தியாயத்தில் காட்டமுற்பட்டுள்ளனர்.

இதன்படி பார்த்தால் பௌத்தத்தின் தாய்மதமும் இலங்கைக்கான பூர்வீக மதமான இந்து மதம் சம்பந்தமான வரலாறும் சிறுவர்கள் மத்தியில் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது. இவற்றைக் கூற வந்தவர்கள் புத்தர் ஓர் இந்து என்பதை ஏற்கத் தயாராக உள்ளனரா?

மன்னர்களின் வரிசையில் அவர்களின் பணிகளை வைத்துப் பார்க்கையில் அதுவும் முழுக்க முழுக்க சிங்கள பௌத்தத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. அப்படியிருந்தாலும் பரவாயில்லை, ஆனால் அங்கு இனக்கலவரம் தூண்டப்பட்டுள்ளது. குறிப்பாக துட்டகாமினி வரலாற்றை கூறப் புகுந்த மகாநாம தேரர் மதவெறி பிடித்த பித்தலாட்டம் ஆடியுள்ளார். ஓரிடத்தில் ஆசிரியர் மகாவம்சத்தில் கூறுவதாவது:

"........ எல்லாளனின் படைத் தளபதியின் தோளில் ஏறி நின்று அவன் கழுத்தை வாளால் வெட்டி ஓடிவரும் இரத்தத்தை நான் குடிக்க வேண்டும்...... என துட்டகாமினியின் தாயானவளான விகாரமகா தேவி கூறுவதாக கூறுகிறார்.

மகாவம்சத்தில் பெரும்பகுதி தேரரின் அண்டப்புளுகு. ஆனால் இது மாணவர்கள் மட்டத்தில் பெரும் தாக்கத்தை உண்டுபண்ணவல்லது. இங்கெல்லாம் தமிழ் மன்னர்களின் பணி தொட்டுக் கூடப் பார்க்கவில்லை. வன்னி மன்னன் தூய தேசியவாதியாக பிரித்தானியரால் அவனது சிரம் கொய்யப்படும்வரை அவர்களை முழுமையாக எதிர்த்தவன், எங்கே அவனது வரலாறு.

**ஒரு நாட்டின் வரலாறுதான் அந்நாட்டின் தேசியத்தை பாதுகாக்கக்கூடியது, வளர்க்கக்கூடியது. இதை சரியாக இனங்கண்டு சிங்கள பௌத்தத்துக்கு ஏற்றமாதிரியான ஒரு வரலாற்றை வகுத்துக்கொண்டவர்கள் சிறீலங்காவின் வரலாற்றாசிரியர்கள்.**

கட்டிடக்கலை, மொழி இலக்கியம் என்பவற்றையும் எடுத்துக் கொண்டால் அசோகா, மௌரீகக் கலாச்சாரத்துடனேயே இலங்கையின் கலாச்சாரத்துறை வரையறுக்கப்பட்டுள்ளது. இக் கலாச்சாரம் ஓர் பௌத்த கலாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்டது. ஏன் தென்னிந்தியக் கலாச்சாரங்களை வெளிக்காட்ட விரும்புகிறார்களில்லை?

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் அவர்கட்கு எதிராக எழுந்த சுதேச இனமத தேசியவாத எழுச்சியின் போது தமிழுக்கும் சைவத்துக்குமுரிய இடம் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது. 11–ம் ஆண்டில் 6–ம் அத்தியாயமான தேசிய இயக்கமும் சமயகலாச்சார மறுமலர்ச்சியும் எனும் அத்தியாயத்தில் சிங்கள பௌத்த வாதத்துக்கே முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தது. இந்துத் தமிழர்களான இராமநாதன், அருணாசலம் போன்றவர்கள்தான் முதலில் வெள்ளைக்காரருக்கு எதிராக முகத்துக்கு நேரே தேசியம் பேசியவர்கள். 1915 கலகத்தால் பாதிக்கப்பட்ட சிங்களவர்களுக்கே பரிந்து பேசி நீதியைப் பெற்றுக் கொடுத்தவர் இராமநாதன்.

இதைவிட உயர்தரத்தில் இலங்கை தேசியவாதப் போராட்டத்தில் தமிழர்களின் எழுச்சி மறைக்கப்பட்டதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். முக்கியமாக 'யாழ்வாலிபர் சங்கம்' இவ் இயக்கம் இலங்கையின் தேசியவாத இயக்க எழுச்சியில் முன்னோடியானது. சாதி, சமய, வர்க்க பேதமின்றி முதலில் சோசலிச எண்ணமுடையதுமான இவ்வியக்கத்தின் பணி அளப்பரியது.

1931–ல் அரசாங்க சபைத் தேர்தலைப் பகிஸ்கரிப்பதில் முழுவெற்றி கண்டு முழுமையான சுயராட்சியக் கோரிக்கையை முன்வைத்தது. இப்படிப்பட்ட இயக்கத்தை, அதன் நடவடிக்கைகளை மறைத்தது ஏன்? அது மட்டுமல்ல தமிழ் புத்திஜீவிகள் கூட அதனை மறந்துவிட்டார்கள் என்பது தான் வேதனைக்குரியது.

ஒரு நாட்டின் வரலாறுதான் அந்நாட்டின் தேசியத்தை பாதுகாக்கக்கூடியது, வளர்க்கக்கூடியது. இதை சரியாக இனங்கண்டு சிங்கள பௌத்தத்துக்கு ஏற்றமாதிரியான ஒரு வரலாற்றை வகுத்துக் கொண்டவர்கள் சிறீலங்காவின் வரலாற்றாசிரியர்கள். இதை சரியான முறையில் வளர்க்கக்கூடிய இடம் பாடசாலை. பல்லின மத சமூக அமைப்புடைய ஒரு நாட்டில் இவ்வாறான திரிபுவாதம் ஆபத்தானது. அங்குள்ள சிறுபான்மை இனங்கட்கு பெரும் குந்தகமானது. இந்நிலைமையை மாற்றியமைத்து சரியான பாதையில் நெறிப்படுத்த வேண்டும். இதை இரண்டு வழிகளில் அணுகலாம்:

1– சகல இனப் பிரதிநிதிகளும் ஒன்றுகூடி புரிந்துணர்வின் அடிப்படையில் செயற்படல்.

2–அவ்வாறு சாத்தியப்படாத பட்சத்தில் தாமே திருந்திக் கொள்ளல்.

★★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சிறீலங்காவில் மீண்டும் ஜே.வி.பி

கம்யூனிஸ்ட்டுகள் மத்தியில் பிரிவென்று ஒன்று கிடையாது என மார்தட்டிய காலமும் ஒன்று இருந்தது. ஆனால் இன்று கம்யூனிஸ்ட்டுகள் மத்தியில் உள்ள பிரிவுகள் போல் வேறு எந்த அமைப்பிலும் கிடையாதென உறுதியாகக் கூறலாம். இலங்கையைப் பொறுத்தவரையிலும் கம்யூனிஸ்ட்டுகளின் பிரிவிலே உருவாகிய ஜனதா விமுக்தி பெரமுன பற்றியும், அதன் அரசியல் அபிலாஷைகள் பற்றியும் சற்று விரிவாகப் பார்ப்போம்.

60 களில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும் எழுத்து ரீதியாக பிளவுபட்ட போது அதன் தாக்கம் இந்தியா, இலங்கை, இந்தோனேசியா போன்ற நாடுகளில் இரண்டாக அவ்வமைப்பு உருப்பெற்றது. இந்தியாவில் வலது, இடது எனவும், இலங்கையில் கெனமன், சண்முகதாசன் எனவும், இக் கட்சிகள் உருப்பெற்றன.

இக்கால கட்டத்தில் ரஷ்யாவில் உள்ள லுமும்பா பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்த விஜேவீர சீனச் சார்பு கருத்துக்களைக் கொண்டிருந்தார் எனக் குற்றம் சாட்டி அங்கிருந்து திருப்பியனுப்பப்பட்டார். நாட்டுக்குத் திரும்பி வந்த விஜேவீர சண்முகதாசன் தலைமையிலான சீனச் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியில் தம்மை இணைத்துக் கொண்டு அக்காலகட்டத்தில் நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்ட சண்முகதாசனுக்கு ஆதரவாக தேர்தல் பிரச்சாரங்களில்கூட ஈடுபட்டார். சண்முகதாசன் தேர்தலில் போட்டியிட்டபோது பாராளுமன்றத்தை அரசியல் மேடையாகப் பாவிக்கப் போவதாகவே கூறினார். ஆனால் தேர்தலில் படுதோல்வியடைந்ததுமே தனது பல்லவியை மாற்றிக் கொண்ட அவர் அதன் பின் நடைபெற்ற தேர்தல்கள் எல்லாவற்றையும் பகிஷ்கரித்ததுடன் பாராளுமன்றம் கள்ளர்களின் குகை எனவும், புள்ளடி கேட்டால் பொல்லடி கிடைக்குமெனவும், எமது பாதை புரட்சிப் பாதை எனவும் சீச்சீ இந்தப் பழம் புளிக்கும் என பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதைக் கைவிட்டார். ஒருவேளை வென்றிருந்தால் தமது கருத்துக்களை மாற்றியிருக்கவும் கூடும்.

**ஜே.வி.பி யினர் ஜனாதிபதித் தேர்தலிலும் உள்ளூராட்சித் தேர்தல்களிலும் போட்டியிட்டனர். பின் இவர்களுக்கும் சீச்சீ இந்தப் பழம் புளிக்கும் என்றதாகிவிட்டதோ தெரியாது. ஏனெனில் தோல்வியைத் தழுவியதன் வெளிப்பாடே இவர்கள் மீண்டும் இரகசிய அமைப்புக்களைக் கட்டியெழுப்பத் தொடங்கினர் எனலாம்.**

கடுசா

இச் சந்தர்ப்பத்திலே சமத்துவம் பேசும் கம்யூனிஸ்ட்டுகள் மத்தியில் இப்படியான ஒரு கோஷம் வைக்கப்பட்டதுதான் வெட்கத்திலும் வெட்கக்கேடு. அது யாதெனில் எமது கட்சியின் வளர்ச்சிக்குத் தடை சிறுபான்மையினர் ஒருவர் தலைமை தாங்குவதே. பெரும்பான்மை இனத்தவர் ஒருவர் தலைமை தாங்கின் கட்சி அபரீத வளர்ச்சி காணும் என்ற கருத்தேயாகும். இக் கருத்து முன்வைக்கப்பட்ட காலத்தில் கட்சிக்குள் இரகசியமாக அமைப்பொன்றை ஆரம்பித்த விஜேவீர தன் கருத்துக்களுக்கு வலுச் சேர்க்க மாஓவின் சிந்தனைகளைவிட சேகுவேராவின் கருத்துக்களை முன்னெடுத்துச் சென்றார் எனலாம். இம் முயற்சியின் விளைவாக இவர்களை சேகுவேரா என்ற குறியீட்டுப் பெயருடன் தென்னிலங்கை மக்கள் அழைக்கத் தொடங்கினர்.

சமசமாஜிகளும், கம்யூனிஸ்ட்டுகளும் பாராளுமன்ற மாயையில் சிக்கித் தவிப்பதில் இருந்து மீளவேமாட்டார்கள் எனவும் சிறிலங்காவில் மக்கள் விடுதலைக்கு வித்திட வேண்டுமெனில் ஆயுதப்புரட்சி ஒன்றின் மூலமே முடியும் எனவும் சிங்கள இளைஞர்களின் மத்தியில் இவர்களின் பிரசாரம் நன்கு எடுபட்டதன் விளைவாக பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள் ஜனதா விமுக்தி பெரமுனவின் பின்னால் அணிதிரண்டனர்.

இவ்வமைப்பில் கூடுதலாக பல்கலைக்கழக மாணவர்களையும் க.பொ.த.சாதாரண, உயர்தர மாணவர்களையும் கொண்டதாகவே இணைத்தனர். இவர்களுக்கு நான்கு வகுப்புக்கள் வைக்கப்பட்டன. அதில் ஒரு



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வகுப்பு மலை நாட்டுத் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரானது. இந்நாட்டின் உண்மையான பெரும் தொழிலாளர் வர்க்கம் தோட்டத் தொழிலாளர்களே. ஆனால் தொழிலாளர் வர்க்க ஆட்சியமைக்கப் புறப்பட்ட ஜே.வி.பி அத் தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிராக கருத்து வைத்திருந்ததை ஜீரணிக்க முடியாமல் போனது எனலாம். இவர்களின் வளர்ச்சியின் காரணமாக 1971–ஆம் ஆண்டு இவ் அமைப்பின் தலைவர் விஜேவீர கைது செய்யப்பட்டு யாழ் கோட்டைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது ஏப்ரல் 5ம் திகதியன்று தென்னிலங்கையின் பல பகுதிகளிலும், ஏன் யாழ் கோட்டையிலும்கூட சாதாரண கைக்குண்டுகளினாலும், உள்ளூர்த் துப்பாக்கிகளினாலும் நாட்டில் ஒரு தொழிலாளர் வர்க்க சர்வாதிகாரத்தை ஏற்படுத்த முனைந்ததுதான் ஆச்சரியத்திற்குரிய விடயமாக இருந்தது.

இவ்வமைப்பினர் தமது இவ் ஆரம்பம் நாட்டிலுள்ள கடற்படை, விமானப்படை, இராணுவத்திலுள்ளவர்கள் தம்முடன் ஒருங்கிணைவார்கள் என்ற யுத்த தந்திரமற்ற மூலோபாயத்தை கடைப்பிடித்ததன் விளைவாக அன்று ஆட்சியிலிருந்த சிறீமாவோ அம்மையார் ஆட்சி இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் நேரடி உதவியையும் ரஷ்யா, சீனா போன்ற கம்யூனிச நாடுகளின் ஆயுத உதவியுடனும் பல்லாயிரக் கணக்கான சிங்கள இளைஞர்களை பயங்கரவாதிகள் என்ற நாமகரணத்துடன் வேட்டையாடி தென்னிலங்கை நதிகளிலே மிதக்கவிட்டது.

இதன் பின்னர் இவ்வியக்கத்தில் இருந்தோர் எல்லாம் அப்போதைய சிறிமா அம்மையாரின் மூத்த புதல்வி சுனேத்ராவின் முன்னாள் கணவரான குமார் ரூபசிங்கவின் ஜனவேகம என்ற அமைப்புக்குள் தம்முயிரைப் பாதுகாப்பதற்காக சரணடைந்தனர். இதன் பின்னர் 1977–ல் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர் அரசு விஜேவீர போன்றவர்களை விடுதலை செய்தது. நாட்டின் ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து கொள்வதாகத் தம்மைக் காட்டிக் கொண்ட ஜே.வி.பி யினர் ஜனாதிபதித் தேர்தலிலும் உள்ளூராட்சித் தேர்தல்களிலும் போட்டியிட்டனர். பின் இவர்களுக்கும் சீச்சீ இந்தப் பழம் புளிக்கும் என்றதாகிவிட்டதோ தெரியாது. ஏனெனில் தோல்வியைத் தழுவிய தன் வெளிப்பாடே இவர்கள் மீண்டும் இரகசிய அமைப்புக்களைக் கட்டியெழுப்பத்தொடங்கினர் எனலாம்.

இக்கட்டியெழுப்புதலின் விளைவாக இவ்வமைப்பில் கண்டவர், நின்றவர் எல்லோரையும் ஒரு கட்டுப்பாடென்று சேர்க்கத் தொடங்கினர். இதில் இரகசியப் பொலிசார் கூட அங்கம் வகித்தது இவ்வமைப்பின் தலைமைக்குத் தெரியாமல் போனது தான் துரதிஷ்டம் எனலாம். இவ்வமைப்பின் முக்கிய தலைவர்களான விஜேவீர ஒரு எஸ்டேட் உரிமையாளராகவும், உபதிஸ்ஸகம நாயக்க

**தென்னிலங்கை இளைஞர்களை மீண்டும் ஒருமுறை பலிகொடுக்க ஜே.வி.பி முனையுமா? என்ற கேள்விகளுக்கு எதிர்வரும் காலம்தான் பதில் சொல்லும் என்பதில் சந்தேகமில்லை.**

பிரபல வர்த்தகராகவும் இருந்து கொண்டே பல ஆயுத செயற்பாடுகளை செவ்வனே நடாத்தி வந்தனர். தென்னிலங்கையை ஆண்ட அரசினருக்கு இது பெரும் தலையிடியைக் கொடுத்தது. இவ்வாயுத செயற்பாட்டினால் நாடே ஸ்தம்பிதமடைந்தது. ஆயினும் நாளையோ, நாளை மறுதினமோ ஜே.வி.பி ஆட்சியொன்று இலங்கையில் அமையும் என்ற நம்பிக்கையில் மீண்டும் அணிதிரண்ட சிங்கள இளைஞர்கள் வீதிகளில் ரயர்போட்டு எரிக்கப்பட்டும், புதைகுழிகளில் புதைக்கப்பட்டும், ஆறுகளிலே மிதக்கவிடப்பட்டும் ஏன் இதன் தலைவர்கள் கைது செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டபின்னர் தலைவர்கள் தம்மைத் தாமே சுட்டுக்கொண்டு இறந்தனர் என்றும் அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவால் பிரச்சாரம் செய்யப்பட்டது.

1971–ம் ஆண்டு ஜே.வி.பி யின் உள்வீட்டுக் கொலைகளைக் காரணம் காட்டி அதிலிருந்து வெளியேறிய பிரிவினர் ஜனதா சங்கமய என்னும் அமைப்பின் சில வெளியீடுகளையும் கூட்டங்களையும் நடாத்திய பின்னர் அவர்கள் என்னவானார்கள் என்பது இதுவரை தெரியவில்லை. 1983–ல் ஜே.வி.பி யில் இருந்து பிரிந்தவர்கள் நவஜனதா விமுக்தி பெரமுன என தம்மை அமைத்துக் கொண்டவர்கள் இன்று அவர்களுக்கும் என்ன நடந்தது என்பதும் இதுவரை தெரியவில்லை.


இன்று ஜனதாவிமுக்தி பெரமுன தேர்தலில் போட்டியிட்டு ஒரு ஆசனத்தை பாராளுமன்றத்தில் பெற்றிருக்கிறது. அதன் உறுப்பினராக நிஹால் கலப்பதி இருக்கிறார். இன்னும் அதன் தலைமையில் பல பிளவுகள் ஏற்பட்டுள்ளது. மீண்டும் ஒரு ஆயுதக் கிளர்ச்சிக்கு இவ்வியக்கம் திட்டமிடுவதாக அரசு தெரிவித்துள்ளது. சமீபத்தில் இவ்வமைப்பில் இருந்து வெளியேறிய ஒரு பிரிவினர் தம் அமைப்புக்கு ஜனதா விமுக்தி சாயோகதா பெரமுன (மக்கள் விடுதலை ஆதரவு முன்னணி) என பெயரிட்டுள்ளதுடன் தமது முன்னைய காலத்தவறுகளை எல்லாம் சுயவிமர்சனம் செய்து மக்கள் முன் வைக்கவேண்டும் எனவும் அதன் மூலம் மக்கள் ஆதரவைத் திரட்டி அமைப்பை கட்டியெழுப்ப வேண்டுமெனவும் அதன் முக்கியஸ்தரான பேராசிரியர் கமல் கருணா நாயக்க கூறியுள்ளார். ஆயினும் இது சாத்தியப்படுமா? தென்னிலங்கை இளைஞர்களை மீண்டும் ஒருமுறை பலி கொடுக்க ஜே.வி.பி முனையுமா? என்ற கேள்விகளுக்கு எதிர்வரும் காலம்தான் பதில் சொல்லும் என்பதில் சந்தேகமில்லை.

★★★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# தூது

அன்பின் சுபன்,

உன் 'உலகத்தில்' நீ நலமாய் இருப்பாய் என நம்புகிறேன். நான் காடு சூழ் குடிசையில் வாடுகிறேன். ஆனாலும் எனது மண்ணில் என்ப தில் நிம்மதியடைகிறேன்.

ஜெயசிக்குறுய் ஒவ்வொரு இடத்தி லையும் தடக்குப்பட்டு நிக்குது. ரத்வத்த சுதந்திர தினத்துக்கு முதல் யாழ்ப்பாணத்துக்கு தரை வழிப்பா தையை திறப்பனெண்டார். ஆனால், அது முடியேல்ல. பாதுகாப்புக் கெண்டு ஜெயசிக்குறுவில இருந்த படையை கண்டிக்கு மாத்தி பாது காப்பைப் பலப்படுத்தினார். ஆனால், சுதந்திர தினம் கொண்டாட இருந்த இடத்தில் அவன் தந்திரம் தனக் கந்திரம் எண்டமாதிரி ஆகிவிட்டது. தலதாமாளிகை குண்டு வெடிப்பில் தகர்ந்தது, இதனால பௌத்த சிங்கள வரே பொங்கியெழும்ப சந்திரிகா தனது நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டுவந்து புலிகளைத் தடை செய்கிறதா அறிவித்தார். (முன்னுக்குப் புலிகள் ஏதோ சுதந்திரமாக இலங்கை முழுக்க நடமாட அனுமதிச்சமாதிரி) சுதந்திரதினக் கொண்டாட்டத்தை கொழும்புக்கு மாத்திச்சினம். கொழு ம்பில பத்தாயிரம் படையைச் சேர்த்து சுதந்திர தினத்துக்குப் பாதுகாப்பு அதிகமாக்கப்பட்டது.

சுதந்திர தினத்துக்குத் தரைப் பாதையைத் திறப்பன் எண்டு சொன்ன ரத்வத்த சிங்களத்தின்ர இதயம் நொருங்க மௌனமாக—புலிகள் சுதந்திர தினப் பரிசு ஒண்டைக் குடுத் தினம். ஜெயசிக்குறுவுக்கு உறுது ணையாக இருக்கவிருந்த கிளிநொச் சித் தளத்தைப் புலிகள் தகர்த்தினம், அதைத் தொடர்ந்து கட்டுப்பாட்டி லையும் வைச்சிருக்கினம். சுதந்திர தினத்தண்டைக்கு கொல்லப்பட்ட படையினரின் சடலங்களை புலி கள் சிங்கள அரசிடம் குடுத்தது தான் அது.

சுதந்திரதினப் பொன்விழா அரசாங்கப் பிரமுகர்களுக் காக 4 மணித்தியாலம் மட் டும் நடந்தது. சுதந்திரதினம் முடிய இரண்டாம் நாள் கொழும்பில ஒரு குண்டு வெடிப்பு. அதுவும் விமானப்படைத் தளத்தருகே நடந்தது.

இதுக்குப் பிறகு, யாழ்ப்பாணத் துக்கு ஆயுதங்களையும் படையை யும் ஏத்திக் கொண்டு போன கடற் படைக்கப்பல் அணியை கடற்புலிக ளணி தாக்கி படைக்குப் பெருஞ் சேதம், 50–க்கு மேல படையையும் 2 ராங்குகளையும் இன்னும் பல ஆயு தங்களையும் அரசாங்கம் இழந்ததாக கொழும்புப் பேப்பர்களே எழுதியி ருக்கு.

கடலில் கப்பல் தாக்கப்பட்ட போது கடலில் குதித்துத் தப்பிய படையினர் சிலரை தமிழக மீனவர் கள்தான் காப்பாற்றியிருக்கினம். தமி ழக மீனவர்களை எத்தனை தரம் சுட்டுக் கலைச்சவை இந்தப்படை கள். மீனவர்களில் எத்தனையோ பேர் இறந்ததுகூட உலகுக்குத் தெரி யும்,. ஆனால், இப்ப அந்த மீனவர் களால காப்பாற்றப்பட வேண்டிய நிலை, படைக்கு வந்திருக்கு பார்த் தியா, இதோட கிளாலியிலயும் கடற் படைத்தளம்மீது புலிகளின் இன் னொரு அடிவிழுந்திருக்கு, அரசுக் கும் படைக்கும் எதிர்பாராத அடி கள்தான்.

இப்படி அரசியல் இராணுவ நிலமை போய்க் கொண்டிருக்கு, இப்ப, இங்க மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு அதிகம். அரசாங்கம் பிறகும் மண்ணெண்ணையைக் குறைச் சுப் போட்டுது. இரவுச் சாப்பாட்டை இருட்ட முதல் முடிக்கிறம். இரவு இருட்டிலதான், நிவாரணமும் ஒழுங் காத்தாறேல்லை. சனம் சரியாக் கஷ் டப்படுகுது. தொழில் செய்து உழைக் கிறதுக்கும் என்னதான் இருக்குது. நிலமிருக்கிற ஆக்கள் விவசாயம் செய்து இப்ப அறுவடை செய் யினம். இப்ப மழை முடிஞ்சு நல்ல வெயில். இரவில பயங்கரப்பனி. போட்டிருக் கிற குடிசைகள் இதுகளைத் தாக்குப் பிடிக்கிற நிலையில இல்லை.

யாழ்ப்பாணத் தேர்த லில் அரசாங்கம் மண் கவ்விப் போட்டுது. மூண்டு லட்சத்திச் சொச்சச் சனம் தான் செல்லுபடியாகக் கூடிய வாக்குகளை வழங்கியிருக்கு அரசாங்கம் பெரிசா பிரச்சாரம் செய்தும் சனம் தங்கட முடிவில உறுதியாக இருக்கிறதக் காட்டி யிருக்கு. 18.4 வீத வாக்குத்தான் விழுந்திருக்கு. அப்ப 81.6 வீத வாக் குப் புலிகளுக்கு எண்டுதான் சொல்ல வேணும். இந்த இரண்டு மாதமும் அரசுக்கு ஏமாற்றம் நிறைஞ்ச மாதங் களாய், நெருக்கடி கூடிய நாட்களாய் போச்சுது.

இதுக்கிடையில் 'புலிகளின் குரல்' வானொலிக் கலைஞர்களுக்கு இரண்டு நாள் கருத்தரங்கை நடத்தியது. பிர யோசனமாயிருந்தது. இதை விட 'புலிகளின் குரல்' கலைஞர்களை எங்கட தேசியத் தலைவர் கௌர விச்சு விருதுகளும் பரிசுகளும் வழங்கி யுள்ளார். இது கலைஞர்கள் எல் லோருக்கும் கிடைச்ச மதிப்பும் கௌரவமும் அல்லவா. போராட் டத்தின் முக்கியத்துவத்தை எடுத்தி யம்பும் கலைஞர்கள் எந்த நெருக்கடி களிலயும் தளராமல் ஆற்றிய பங்க ளிப்புக்குக் கிடைச்ச மதிப்பு இது. புதினமொண்டு, அக்கராயனில ஒரு



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

யானை நிலத்துக்குக் கீழ் இருந்து கண்டு பிடிக்கப்பட்டிருக்கு. மண் யானைதான், சின்ன யானை மண்ணால செய்து சுடப்பட்டிருக்கு... இதோட பல மட்பாண்டங்களும் கிடைச்சிருக்கு பழைய காலத்தானாம். ஆனால், இதைப்பற்றி இங்கு ஆராய ஒரு வசதியுமில்ல எண்டது தான் கவலையான செய்தி. எங்களுக்கெண்டு வரலாற்று ஆதாரங்கள் சரியாக இல்லை. கிடைச்சிருக்கிறத ஆராயவும் வசதியில்லை. எங்கடை வரலாற்றுத் துன்பம் இப்படித் தொடருது.

யாழ்ப்பாணத்தில வருசாவருசம் விழாக் கொண்டாடுகிற கம்பன் கழகம் இப்ப கொழும்பில; தமிழில இருக்கிற முக்கிய இலக்கியமான கம்பராமாயணத்தை வைச்சு காலத்தை ஓட்டுது, கம்பன் கழகம், 95 இடப் பெயர்வோட கொழும்புக்குப் போயிற்றுது. அங்க இவைக்கு விழாச் செய்யேலாம இருக்கேலாது போல கிடக்கு. அதுதான், அங்கயும் ஒரு கிளையை அமைச்சு விழாவைப் பெரிசாக் கொண்டாடி இருக்கினம். இதில பிரதம விருந்தினர் பழுத்த தமிழ் எதிர்ப்பு இனவாதியான லஷ்மன் ஜெயக்கொடி. என்ன கொடுமை? தமிழினம் பற்றி எரியுது. இவைக்கு அங்க விழா வேண்டியிருக்கு. 'தமிழன்'– 'கன்னித் தமிழ்' எண்டு ஏன் தமிழனுக்கு அவமானத்தை தேடுகினம்? இவை அங்க விழாச் செய்ய உலகம் என்ன நினைக்கும்? இலங்கையில தமிழனுக்கு என்ன பிரச்சினையெண்டு கேட்கும்? சிங்கள நாட்டிலேயே கன்னித்தமிழுக்கு விழா எடுக்க அரசாங்கம் அனுமதிச்சிருக்கு எண்டெல்லாம் உலகம் நினைக்குமெல்லோ, இந்த வேலையெல்லாம் தமிழருக்கெதிரான திட்டமிட்ட வேலையெண்டுதான் நினைக்க வேண்டியிருக்கு.

கம்பன் கழகக்காரர் அரசியல் வாதிகள், அமைச்சர்களான அஷ்ரப், லஷ்மன் ஜெயக்கொடியைக் கூப்பிட்டிச்சினம். ஆனால் அவையை 'அரசியல் பேசவேண்டாம்' எண்டு தயவுடன் கேட்டவையாம். அப்ப அஷ்ரப்ப எந்தமுறையில் கூப்பிட்டவை. கவிஞரெண்டா? அஷ்ரப் அரசியல்வாதியா இல்லாமல் இருந்தா அவரைக் கூப்பிட்டிருப்பினமோ? லஷ்மன் ஜெயக்கொடியை ஏன் கூப்பிட்டவை. அவர் என்ன கலைஞரோ மொழி அறிஞரோ? அரசியல்வாதிகள் எண்டபடியாத் தானே அவையக் கூப்பிட்டிச்சினம். ஏன் கூப்பிட்டவை? ஐக்கியம் எண்ட பேரில சிங்கள அரசியல் தலைமைக்குக் கீழ தாங்கள் இருக்கச் சம்மதமெண்டு காட்டி லாபங்களைப் பெற்று கொழும்பில சுகமாக வாழுறதுக்குத்தான் இந்தவேலை. அரசாங்கமும் தருணம் பார்த்து இவையளைப் பாவிக்குது. ஆனால் 'கன்னித்தமிழ்' சிங்களவற்றை காலுக்குக்கீழ கிடந்து மிதிபடுது. இவை கொழும்பில போயிருக்கினம்? யாழ்ப்பாணத்தில பாடுபட்டுக்கட்டின கம்பன் கோட்டத்தை விட்டு ஏன் இடம்



பெயர்ந்தவை? இதற்குக் காரணமானவையிட்டயே போய் கன்னித் தமிழுக்கெண்டு விழா எடுக்கிறது, தங்களுக்கு நடந்த, தங்கட சனத்துக்கு நடந்த கொடுமையை மறைக்கிற செயலெல்லோ இது. இவை உண்மையாய் தமிழுக்கு விழா எடுக்கிறதெண்டா தாய் நிலத்துக்குப் போகும்வரை விழா செய்யிறதில்ல எண்ட தவத்தைச் செய்திருக்க வேணும். கொழும்புக் கம்பன் கழகம் செய்ததெண்டு அவை சொல்லலாம். ஆனால், இவைதான் கொழும்பில போய் அங்கத்தைய பிரமுகர்களைக் கொண்டு கம்பன் கழகக்கிளையெண்டு ஒண்டைத் தொடங்கி விழா நடத்தினவை. எந்த நியாயத்தையும் சொல்லி உண்மையை மூடேலாது. இந்த விழாவில கம்பன் தலைவராக இருந்தவர் தெ. ஈஸ்வரன்.

இலங்கைத் தமிழ் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கொழும்பில எழுத்தாளர் மாநாடு எண்டு ஒரு பிரமாண்டமான விழாவை நடத்தியிருக்கினம். இவை இடது சாரிகள், இதைவிட கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவையுங்கூட நடத்தின விழாவில கொழும்பின் சில பிரபலமான வர்த்தகர்களை அழைச்சு கௌரவிச்சு பரிசுகளும் குடுத்திருக்கினம். இடது சாரிகள் எண்டவை சிறுமைகண்டு பொங்குபவர்களாகவும் அநீதியை எதிர்த்துப் போராடுபவர்களாகவும் இருக்க வேணும். ஆனால் இங்க நடக்கிறதோ எல்லாம் தலைகீழ் தான். 'முற்போக்கு' எண்டு சொல்லி சமூகத்தில கீழ்நிலையிலுள்ள மக்களைப் பற்றி எழுதிறமெண்டு பேர் வாங்கி முதலாளியள அரவணைச்சுக் கொண்டு வாழ்க்கையை ஓட்டுறது தான் இவையின்ர போக்கா இருக்கு. இதை என்னெண்டு சொல்லுறது. தவிர, தமிழரான இவை, இண்டைக்குத் தமிழற்றை நிலை பற்றி ஒண்டுஞ் சொல்லாம எழுதாம இருக்கிறது இவை பற்றிச் சந்தேகத்தை எழுப்புது. அரசாங்கம் எல்லாரையும் தமிழரெண்ட அடையாளத்தோட தானே பார்க்குது.

அண்மையில சிறு பத்திரிகை ஒன்றில் எழுத்தாளர் குப்பிளான் ஐ. சண்முகன், யாழ்ப்பாண நிலைபற்றி பேட்டி ஒன்று கொடுத்திருந்தார். யாழ்ப்பாணத்தின் அகபுறநிலைமைகளை மிகத் தெளிவாக சண்முகன் கூறினார். 'மரணத்துள் வாழ்வு' என அவர் கூறிய சாரம்ச வார்த்தையை நாம் நன்றாக விளக்கிக்கொள்ளலாம். துணிச்சலான, உண்மையான கருத்துக்களை சண்முகன் கூறியிருக்கிறார். ஆனால் இதற்கு எதிர்மாறாக யாழ்ப்பாணத்தில் உள்ள எழுத்தாளர் சாந்தன் ஒரு பேட்டியை பத்திரிகை ஒன்றுக்கு வழங்கியிருந்தார். யாழ் நிலையை எதுவும் கூறாது மொழி, இலக்கியம் என் ஏதேதோ பக்கம் பக்கமாக மிகமிக பூடகமாக ஒருவரி பதிலில் மட்டுமே யாழ் நிலையை கூறினார். முன்பு விடுதலைப் போராட்டம் பற்றி முழங்கி எழுதிய பொன் பூலோக சிங்கம் பேட்டி கண்டிருக்கிறார். தேர்தலுக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்கப்போவதில்லை என யாழ் மக்கள், 'ஆயர்' அரச சார்பற்ற அமைப்பு பிரதிநிதிகள் எல்லாம் பிரகடனம் செய்தது அவர்களின் விடுதலை உணர்வைத்தானே வெளிப்படுத்துகின்றன.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

நீ எழுதியிருந்தாய் அங்கு லண்டனில் இருந்து ஈழத்தமிழர்கள் **IBC** என்ற தமிழ் வானொலி சேவையை நடத்தி வருவதாக, நான் அதை கேட்டு வருகிறேன். ஈழத்தமிழர்கள் நடத்தும் வானொலி என்பதால் ஈழத்தமிழ் விசயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது. வெரித்தாசின் மாமனிதர் எலியேஸரின் பேட்டி கேட்டோம். அவர் உணர்வுகள் வெளிநாட்டிலிருக்கும் உங்களை தட்டியெழுப்பியிருக்கும் என நினைக்கிறேன்.

போன கடிதத்தில் அ.செ.மு. காலமானார் எண்டு எழுதினனான். அது பிழை. அவர் உயிரோட இருக்கிறாராம். கொழும்புக்காரர்தான் அவர் காலமானார் எண்டு செய்தி போட்டவை. நவீன உலகத்தில இருக்கிற இவை ஒரு விசயத்தை உறுதிப்படுத்த முடியாத பொறுப்புணர்வில்லாத் தனத்தை என்னெண்டு விளங்குகிறது? அ.செ.மு செத்துவிட்டார் என்ற பிறகு எல்லா இடமும் அவரை வைச்சுப் பிழைக்கிற வேலை நடந்திருக்கு. ஆனால், அவர் உயிரோட இருக்கிறது தெரிஞ்சதுக்குப் பிறகும் அவருக்கு எவரும் எதுவுஞ் செய்யேல்லை எண்டு கேள்வி.

யாழ்ப்பாணத்தில இருந்து விசுவர் கடிதம் போட்டிருந்தார். அ.செ.மு பற்றி அவரும் எழுதியிருந்தார். அ.செ.மு நினைவுரை யாழ்ப்பாணத் திலையும் நடந்ததாம். விசுவர் அதுக்குப் போனவாரம். விசுவரின் கடிதத்தில் சில பகுதிகளைத் தாறன்.

'திருநெல்வேலி விவசாயப் பண்ணையிலிருந்த மழைமானி அங்கு இல்லை. வீதியோர மரங்கள் யாவும் தறிக்கப்பட்டுவிட்டன. இதனால் வெயில் பாதசாரிகளை மிகவும் வாட்டி எடுக்கிறது. சந்திக்குச் சந்தி சென்றி என்று சனம் மிகக் கஷ்டத்தை அனுபவிக்குது, சைக்கிள்,



பஸ்களிலிருந்து இறுங்கிச் செல்வோர் முணுமுணுப்பும் தொணதொணப்புமாகத் தாண்டியபடியே செல்கிறார்கள்'.

விசுவின்ர கடிதத்தில் குறிப்பிடக் கூடியவை இவை. அந்த கடிதங்கள ஆமி பாக்கிறதால கனக்க எழுதேலாது தெரியும்தானே!

இங்க அரசாங்கத்தின்ர போர் முனைப்புக் கூடுது. புலிகளும் சகல பக்கங்களிலும் படை முனைப்பை எதிர்கொள்ளுகினம். புலிகளின்ர அடிகளில படைகளுக்கு பலத்த இழப்பு வருகுது. புலிகளுக்கான மக்கள் பலம் இப்ப இன்னும் கூடுது' நம்பிக்கைகளுடன் வாழ்க்கையை எல்லோரும் நகர்த்துறம் வெற்றி ஒருநாள் கிடைக்குமெண்டு நிச்சயமா எங்களுக்குத் தெரியும். இதற்கான வலுவான காரணங்களையும் நியாயங்களையும் நாங்கள் அறிவம். நீயும் அறிவாய். தாயக உணர்வுகளை. ..களும் மறக்கக்கூடாது எண்டு ..ங்கள் வேண்டுறம்.

இங்க நாங்கள் ஒரு நேர உண..க்குக் கூட கஷ்ரப்படுகிற நிலையில ..ருந்தம். இப்பிடிச் சந்தர்ப்பங்கள் இனியும் வரலாம். பட்டினியால் நோய்வந்து சாகிற அவலங்களும் ..க்குது.

நிவாரணம் எடுத்து அதை வித்த காசில செத்த உடலை புதைச்ச சம்பவமும் உண்டு. இதைவிட மோசமான அவலங்களும் நடக்குது. ஒரு நம்பிக்கையில்தான் இழப்புகளோடையும் நாங்கள் இந்த மண்ணில வாழுறம்.

இனி அடுத்த கடிதம், உன்பதில் பார்த்து.

**தி.நி.அருள்**

## ஜெயசிக்குறு ராஜபாட்டையில் சிறீலங்கா கிரிக்கெட்டும்

உலக கிரிக்கட் அணிகளில் சில இலங்கை அணியை எதிர்த்தாட வெற்றியில் நம்பிக்கையின்றியே களமிறங்கும். ஆனால் இலங்கை அணியினரோ தென்னாபிரிக்க அணியின் முன் நிலை தடுமாறி சின்னாபின்னமாகின்றனர். இலங்கையில் கிரிக்கட் வரலாற்றில் மறக்கமுயல நினைக்கும் கசப்பான தோல்விகள் இவைதான்.

சென்ற ஆண்டு பாகிஸ்தான் சுதந்திரக் கிண்ணத்திற்கான இறுதி லீக் போட்டி தென்னாபிரிக்காவிடம் இலங்கையணி நாரி முறிபட்டது, கடைசி நிலையில் இறுதியாட்டம் அந்தோ பரிதாபம்! தடாவடி ஆட்டக்காரர்கள் டமாலாகினர் சுருண்டு ஒதுங்கியது அணி.

இது டெஸ்ட் தொடர் நாட்கணக்கில் நிலைத்தாடியவர்கள் நாழிகைகளில் தென்னாபிரிக்க அணியின் சிறிப்பாயும் பந்துகளுக்கு போல்ட்டாகினர். கசப்பான தொடரை இழந்த தோல்வியது.

மீண்டும் ஒருநாள் ஆட்டத்தில் தென்னாபிரிக்காவுடன் பாகிஸ்தானும் இணைந்து அடுத்தடுத்து உதைத்தனர். இங்கும் கடைசி லீக் ஆட்டம் தென்னாபிரிக்காவில் பந்துகளை குண்டாக நினைத்திருப்பாரோ? 105 ஓட்டங்களுடன் அடங்கினர். 398 ஓட்டம் அடித்தவரின் ஆணவநிலை அடக்கப்பட்டது. இலங்கைக்கு இராணுவ அரசியலில் விலகி கிரிக்கட்டில் தமிழீழமாக மாறிவரும் தென்னாபிரிக்க அணி.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# நெருப்புக்காலத்தில் ஒரு துளிர்

ஒரு நாள் மாலை அது நீண்ட நாட்களின் பின்வந்தது நகரின் மையத்திலிருந்த கடைத் தெருக்களிலும் வேறு சில அருகான இடங்களிலும் கொடிய விஷத்தைப் பீச்சியபடி காற்றோடு வந்தன பாம்புகள்.

கட்டிடங்கள் விஷத்தின் சிதறல்களால் உருக்குலைந்து அழிந்தன; ஓட்டுக் கூரைகள், நீண்ட கோபுரங்கள், மனிதர்கள் அனைத்தும் அனைத்தும், ஒவ்வொன்றும் திசைகளின் நடுவே அந்தரத்திற் பறந்து எங்கோ வீழ்ந்து தொலைந்தன; அல்லது உயிருடனிருந்த மனிதர்களின் எஞ்சிய துடிப்பையும் எண்ணற்ற விதத்தில் நசுக்கிச் சிதைத்தன. பீதியின் கூக்குரல்களாலும் புகை மூட்டத்தினாலும் நகரம் காணாமற் போனது.

விஷம் தெளிக்கப்பட்ட காற்றும், பாம்புகளும் ஒவ்வொரு மனிதர்களையும் துரத்தித் துரத்திச் சாகடித்தன. மனிதர்கள் அதனுள் மூழ்கி மூச்சிழந்து செத்தார்கள். எஞ்சிய எல்லோரும் தமது பூர்வீக நகரத்தையும் அண்டிய கிராமங்களையும் விட்டு சாக்குப் பைகளோடு காணாமற் போனார்கள், நகரின் இடிபாடுகளுக்கு மேலாக காகங்கள் பறந்து பிரிந்தன. கூரிய அலகுகளால் இறந்த ஒவ்வொன்றையும் கொத்திக் கொத்தி விஷத்தில் ஊறிச்செத்து கருகிய மரங்களின் மீதும் தெருக்களின் மேலும் புழுக்களாய் ஊர்ந்து நகர்ந்தன. பாம்புகள் பெருத்த ஓசையோடு அரைந்து நகர்ந்த அடையாளங்கள், கட்டிடச் சிதைவுகளிலும் பிணக்குவியல்களிலும் சவுக்கடியாய் பதிந்துகிடந்தது.

எஜமானர்களைத் தேடித்தேடி வெறிபிடித்து அலைந்த நாய்கள் நீண்ட நாட்களின் பின் நகரக் குவியல்களின் மீது தமது அடையாளத்தையே தொலைத்து விட்டிருந்தன.

வார்த்தைகளில் அடங்காத வர்ண ஜாலங்களோடு கூடியிருந்த மண்ணும் வானமும் தொலை தூரத்திலிருந்து வந்து சேர்ந்த பாம்புகளின்; கொடிய விஷத்தின் கருமைக்குள் ஒழிந்து போனது.



சொற்ப நாளைக்குள் சுடுகாடாகிப் போன தமது பூர்வீக நிலத்தை விட்டு அவர்கள் வந்து சேர்ந்த காட்டோரக் கிராமங்கள் மனிதர்களால் நிறைந்து வழிந்தன. பழைய குடியிருப்புகளினூடே புதிய குடியிருப்புகள், தெருக்கள், கோயில்கள், மனிதர்கள்.

பசியும் பிணியும் ஒவ்வொரு தெருவையும் மூலை முடுக்கு ஒவ்வொன்றையும் உறிஞ்சிக் குடித்தது அல்லது பிடரியைப் பிடித்து எதற்கோ தூண்டித் தள்ளியது. வானம் இருண்டு பூமி அதனுள் அமிழ்ந்து விடுமாற்போல இடியும் மின்னலும் எங்கும் தெறித்துச் சிதறின, வானத்துண்டுகள், மாரிகாலம் வெகுவேகமாக முடிவுற வேண்டுமென்று அவன் அடிக்கடி யாரையோ வேண்டுவதுபோலக் கேட்டுக்கொண்டான். அநேகமாக இது முட்டாள் தனம். ஒவ்வொரு நாளும் நீண்ட இரவல் வீதியில் பால்கலந்த தேநீர் அல்லது கோப்பியின் நிறத்தில் சகதிச்சேறு கூரைகள் சடசடத்து அதிர்கின்றன. சரியாக வேயப்படாத கூரை, முகட்டு வழியாக ஒழுக்கு, நிலத்திற் தூக்கிக்கொண்டிருந்த ஒவ்வொன்றும் குளிரில் விறைத்து நாக்கை வெளியே நீட்டியபடி நித்தியமோனத்துள் ஆழ்ந்துபோயின. முகட்டில் தொங்கிய சாக்குப்பையை மெதுவாக அவிழ்த்து இறக்கினான். அது கைகொட்டிச் சிரித்தது. அதன்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மேல் இளையவனுடைய முகத்தையும் தன்னுடையதையும் மற்ற ஒவ்வரு டையதையும் கற்பனை செய்தான். ஆத்திரமும் பயமும் கலந்ததான ஒரு வல்லுணர்வு அவனுள் படர எதையோ முணுமுணுத்தான் அல்லது காறி உமிழ்ந்தான்.

அவனோடு சேர்த்து ஒன்பது பேர், இளையவனுக்கு வயது மூன்று மாதங்கள், நகரத்திலிருந்தபோது அம்மாவினுள் அவன் இருந்தான். அது அப்பாவின் கடைசிக்காலம், நகரத்தை ஆக்கிரமித்திருந்த பாம்புகளின்; கொடிய விஷக்காற்றின் இருட்சிப்பின் அடையாளம், அப்பாவின் மரணம் பற்றிய அம்மாவின் தீராத வேதனை போன்றவற்றின் கலவை அன்னும் அவன் முகத்தில் அழியாமலிருந்தது.

சாக்குப்பையினுள்ளிருந்த உணவு வேகமாகத் தீர்ந்துவந்தவை எவையும் இப்போது அவர்களிடம், எஞ்சியிருக்கவில்லை. அவனுக்கு இளையவர்களில் அநேகர் தெருக்களில் உட்கார்ந்து மாங்காய்களையோ தேங்காய் போன்ற இன்னலற்ற பொருட்களையோ விற்றார்கள். அல்லது மூக்கிலிருந்து சளி ஒழுக ஒழுக கைகளில் சிரங்குடன் நிர்வாணமாய் தெருவழி அலைந்தார்கள்.

பசியிலும் பிணியிலும் செத்துப்போன மனிதர்களால் காட்டோரக் கிராமங்களின் சுடுகாடுகள் எரிந்தன. மருத்துவ மனைகளின் நீண்ட வரிசைகளினூடே மரணம் நிகழ்ந்தது. சண்டைகளும் சச்சரவுகளும் கூ.

பாம்புகளின், விஷக்காற்றின் சூழ்தலால் சபிக்கப்பட்ட பூமியாகிவிட்ட அவ்வாறு எண்ணப்படுகின்ற தமது பூர்வீக கிராமங்களையும், நகரத்தையும் மனிதர்கள் மரணப்படுக்கையில் கனவு கண்டார்கள். அநேக இரவுகளின் கனவுகளில் பூமித் தேவதை சிரித்துச் சிரித்து அவர்களைக் கையசைத்து அழைத்தாள். கனிமரங்களினூடேயும் கைவிடப்பட்ட தோட்டங்கள் வயல்களுனூடேயும் தேவதையின் சிரிப்பும் கையசைப்பும் அவர்களை அழைத்துச்சென்றது.

தங்களின்; தலைமுறைகளின் புதைபொருட்களாலும் தோட்டங்களிலிருந்தும் வயல்களிலிருந்தும் பெறப்பட்ட தானியங்களாலும் அவர்களுடைய சாக்குப் பைகள் நிறைந்திருந்தன. தூக்க முடியாத சுமையோடு தமது காட்டோரக் கிராமங்களுக்கு அவர்கள் மீண்டும் வந்து சேர்ந்தார்கள். பசியால் அழுத குழந்தைகளுக்கு முன்னே சாக்குப் பையை அவிழ்த்து உள்ளிருந்து, சேகரித்த ஒவ்வொன்றையும் வெளியில் எடுத்தார்கள். எடுக்க, எடுக்க அவை மனிதக்குடல்களாகவும் எலும்



புக் கூடுகளாகவும் உதிரி எலும்புகளாகவும் இதயக்கூடுகளாகவும் மாறிக்கொண்டேபோயின. குழந்தைகள் வீரிட்டு அலறினர். வண்ண வண்ணக் கனவுகளின் ஆட்கொள்ளுதலோடு அவர்கள் வாழ்வு முடிந்து போயிற்று.

மரண யுத்தத்தில் பசியையும் பிணியையும் எதிர்க்க வலுவற்ற மனிதர்கள் விட்டுவந்த சொத்து சுகங்களைத்தேடி மீண்டும் இரகசியமாகப் புறப்பட்டுப் போனார்கள்.

பழைய நகரின் இடிபாடுகமால் கட்டியெழுப்பப்பட்ட புதிய நகரின் தெருக்களில் அலைந்து திரியும் மரண பீதியையும் வதந்திகளையும் பரப்பித் திரியும் தலைகளற்ற உடல்கள் பற்றியும் பாம்புகளின் கழுத்தை முன்னரிலும் பார்க்க அதிவேகமாகவும் கொடூரத் தன்மையோடும் நெரிப்பதாகவும் காட்டோரக் கிராமங்களிலுள்ள மனிதர்கள் கேள்வியுற்றனர்.

எல்லாவற்றின் பின்பும் தனது கிராமத்தையும் குடியிருப்பையும் பார்ப்பதற்காகவும் அல்லது யாருமற்ற சூனியப் பிரதேசத்தில் விட்டு வந்த தமது சொத்துக்களையோ வேறு பொருட்களையோ எடுப்பதற்காகவும், தான் புறப்படப் போவதாக சகோதரர்களுக்கும் தாய்க்கும் பொதுவில் அவன் அறிவித்தபோது அவனை அவர்கள் அன்போடும் இயலாமையோடும் நோக்கினர். யாராலும் உணரமுடியாத உணர்ச்சிகளை மகன் என்ற ரீதியிலும் சகோதரன் என்பதனாலும் அவர்களின் முகத்தில் அவனால் படிக்க முடிந்தது, அக்கணத்தில்.

அவன் தனது நகரத்தின் பூர்வீக கிராமத்தினுள் இதயம் பிளக்கும் பேரச்சத்தோடு நடந்து போனான். புதர்களின் மறைவிலிருந்து நரிகள் திடுக்கிட்டு ஓடி, தூரத்தில் நின்று திரும்பிப்பார்த்தன. நாக்கைத் தொங்கப் போட்டபடி கண்களில் குரோதம் பொங்க, மனசு நடுங்கியது.

மாரிகாலம், விஷத்தின் நிலத்தில் ராட்சஷ மரங்கள் முளைத்திருந்தன. கருமை படர்ந்த விஷக்காற்றின் நீல ஒளி எங்கும் பரவியிருந்தது. இடிபாடுகளுக்கு மேலாக பிரமாண்ட



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மான தோற்றத்தோடு பாம்புகளின் வாழிடங்கள்.

அவனுடைய அம்மா, அப்பா, சகோதரர்கள், தான் எல்லோரும் நடந்தும் தவழ்ந்தும் ஆயுள் முழுவதும் வாழ நினைத்திருந்த நிலம் விஷப்பாம்புகளின் புற்றுகளுக்கடியில் முனகும் சப்தம் அவனுக்குக் கேட்டது.

பிரமாண்டமான பாம்புகளின் வாழிடங்களைத் தவிர்த்தும் இறுகிய சிலந்தி வலைகளாய் பின்னிக்கிடக்கும் இருளை ஊடுருவியும் நீண்ட தூரத்திற்குப் பார்வையைச் செலுத்தினான்.

அவர்களால் விட்டுச் செல்லப்பட்ட ஒவ்வொன்றும் கண் முன்னே தோன்றித்தோன்றி நெகிழ்ச்சியுற்றன. கண்கள் பனித்தன. சருகுகளையும் முட்களையும் மிதித்துக்கொண்டு நீண்ட நேரம் அதன் வெறுமை மனசை அழுத்தியது. மனித சலனமேயில்லாத தெருக்களையும் சந்துகளையும் தாண்டி நடந்தபோது முள்ளந்தண்டு சிலிர்த்தது. வழி நீளத்திற்கும் குருதியும் தசையும் உறிஞ்சி எடுக்கப்பட்ட மனிதர்களினதும் மிருகங்களினதும் எடும்புக்கூடுகள்.

நேற்று முதல்நாள் தனது காட்டோரக் கிராமத்தைவிட்டு வெளியேறிய, இன்றுவரை வீட்டுக்கு வந்து சேராத அவனுடைய அயற்குடிசைக்காரனையும் இரண்டு வண்டிமாடுகளையும் வண்டியையும் தனக்கான எல்லா மனிதர்களையும் என்ன காரணத்தாலோ திடீரென நினைவு கூர்ந்தான்.

தனது அயல்குடிசைக்காரனுக்கு நிகழ்ந்திருக்கக் கூடிய சிலவேளை தனக்கும் நிகழக்கூடிய பேரபாயம் பற்றிய எண்ணத்தால் அவனுடைய உடல் ஒரு கணம் நடுங்கியது.

சாக்குப் பையை நிறைக்கக்கூடிய வாறு அல்லது பசியைப் போக்கக் கூடியவாறு அவனது பூர்வீக கிராமத்தில் எதுவும் மீந்திருக்கவில்லை. சாக்குப் பையை ஓங்கித் தரையிலடித்தான். இதுவரை அதனுள் மறைந்திருந்த ஒவ்வொருவருடைய முகங்களும் தீராத வேதனையோடு அலறின.

அலறல் சத்தமும் பாம்புகளும் அவற்றின் விஷக் காற்றும் அவனைத் தொடர்ந்து துரத்தின. எலும்புக் கூடுகள் பாதங்களுக்குக் கீழே நெரிபட்டன. நகரமும் நகர்சார்ந்த கிராமங்களும் மிகப்பெரும் சுடுகாடாகிக் கிடக்கிறதென்றும் பாம்புகள் வெறியோடு மனித இறைச்சிக்காகக் காத்திருப்பதாகவும் அவன் யாரிடமோ சொல்ல நினைத்தான். அவனுடைய உடல் முழுவதும் கீறிக்கிழிக்கப்பட்டு இரத்தக் காடாக மாறியிருந்தது.

காட்டோரக் கிராமத்தை நெருங்க நெருங்க அழுகையும் ஒப்பாரியும் அவனது செவிகளில் அறைந்து மோதின.

அன்றைய பொழுதில் சாக்குப் பைகளோடு பூர்வீக கிராமங்களுக்குப் போன எவரும் அவனைவிட மீண்டு வரவில்லை என்று யாரோ சொன்னது குகையின் கண்காணா ஆழத்திலிருந்து கேட்டது போலக் கேட்டது. அவன் எதையோ சொல்ல நினைத்தான். நா எழவில்லை. இரண்டாவது தடவையாகக் கண்விழித்த போது மருத்துவ மனையின் நீண்ட கட்டிலில் கிடத்தப்பட்டிருந்தான்.

அம்மாதான் முதலில் பேசினாள். இன்று காலையில் அவனுடைய சிநேகிதர்கள் சிலர் அவனைத் தேடி வந்ததாகவும் அவன் இல்லையென்று சொன்னபோது தன்னோடும் இளையவர்களோடும் பேசிக்கொண்டிருந்து விட்டு தம்பி ஒருவனை அழைத்துக் கொண்டு போய்விட்டார்களென்றும் காலையில் காய்ச்சிய கஞ்சியைக் குடித்துவிட்டு மற்றொருவனும் எங்கோ போய்விட்டனென்றும் இருவரும் சாக்குப்பையையோ பூர்விக கிராமத்திலிருந்து பொருட்களை எடுத்துவரக் கூடிய வேறு எவற்றையுமோ கொண்டு செல்லவில்லையென்றும் இன்னும் – இரவு நீண்டநேரமாகியும் வீடு திரும்பவில்லையென்றும் – இன்னும் எவற்றையெல்லாமுமோ தொடர்ந்து சொல்லிக்கொண்டே போனாள். மருத்துவமனையின் மங்கிய விளக்கொளியில் அவள் அழுதுகொண்டிருப்பது தெரிந்தது. அவளை அழ வேண்டாமென்றும் தானும் தன்னோடு இன்னும் பலரும் – நண்பர்களையும் இளையவர்களையும் போல பல இரவுகளின் பின்னால் மறைந்துபோன ஒளி நிரம்பிய காலங்களை நோக்கிப் போக நினைத்திருப்பதாகவும் அவளிடம் சொல்ல நினைத்தான்.

இன்னும் அவள் அழுது கொண்டு தான் இருந்தாள். அவளுடைய மிக மெலிந்த கைகளுக்குள் கடைக்குட்டி சுருண்டு தூங்கிக் கொண்டிருந்தான்.

வெறுமனே துடித்துக் கொண்டிருந்த இருதயத்திலிருந்து நீண்டதொரு பெருமூச்சு எழுந்து ஒடுங்கியது.

கண்களுக்குள், இடிந்தழிந்துபோன அவர்களின் பூர்வீகக் கிராமத்தின் இல்லாமலாகி விட்ட அவனது வீட்டின் பின்பகுதியின் வைரவர் மேடையைநோக்கி அவனுடைய தம்பியும் இன்னும் பலரும் வேகமாக ஊர்ந்து செல்வதாகவும் எல்லாக்கால நீட்சிக்கும் அப்பாற்பட்டு இரும்பாகவும் மண்ணாகவும் மரமாகவும் அழிவற்றிருக்கும் திரிசூலத்தை எல்லோரும் ஒன்றாகித் தூக்குவதாகவும் அது பல்லுருக்கொண்டு ஒவ்வொருவர் கைகளின் ஜொலிப்பில் மீண்டும் மீண்டும் ஒளி பொருந்துவதாகவும் காட்சிகள் ஓடிக் கொண்டே இருந்தன. அவனது மூடிய கண்களுக்குள்.

– சந்திரபோஸ் சுதாகர்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# இன்னொரு அமெரிக்க பயங்கரவாதச் செயல்

வரலாறு



போர் வீரர்களை கொல்வதென்பது சாதாரணமான ஒரு போர் நடவடிக்கைதான். கடந்த பல தசாப்தங்களிலே உருவாக்கப்பட்ட சர்வதேச உடன்பாடுகளின்படி கைதிகளாக்கப்பட்ட போர் வீரர்கள் கொலை செய்யப்படக்கூடாது.

இந்த புனிதமான உடன்பாடுகள், இரண்டாம் உலகப் போரைத் தொடர்ந்து வந்த காலத்திலே நேச நாட்டுப் படையினரால் அப்பட்டமாக மீறப்பட்டன. பத்துலட்சத்துக்கும் அதிகமான ஜெர்மனிய போர்க் கைதிகள், கடுமையான பனிக்காலத்தின்போது, நீரும் உணவும் இன்றி வெட்டவெளியில் பட்டினிச் சாவுக்கு உள்ளாக விடப்பட்டனர்.

றைன்நதி நெடுக முட்கம்பி வேலிகள் அடைக்கப்பட்டு அந்த நிலப் பகுதிகள் முழுவதும் போர்க்கைதிகளின் தடுப்பு முகாம்களாக ஆக்கப்பட்டன. அவர்களுக்கு பாதுகாப்பான வாழ்விடங்கள் எதுவும் இருக்கவில்லை. அவர்களின் கால்களுக்குக் கீழே வளரும் புல்லைத்தவிர சாப்பிட எதுவும் இருக்கவில்லை. அவர்களுடைய சிறு நீரைத் தவிர குடிப்பதற்கு எதுவும் இருக்கவில்லை.

ஜேம்ஸ் பாஸ்க் என்பவர் எழுதிய 'அதர் லொஸ்சஸ்' Other Losses (ஏனைய இழப்புக்கள்) என்ற நூலிலே 1945–ம் ஆண்டிலே அமெரிக்க முகாம்களில் கிட்டத்தட்ட 793,239 ஜெர்மனிப் போர்வீரர்களும் பிரெஞ்சு முகாம்களில் குறைந்தது 167,000 ஜெர்மன் போர் வீரர்களும் இறந்துபோயினர் என்று கூறியிருக்கிறார். அவர்களைக் கைது செய்துவைத்திருந்தவர்களில் கொடூரமானதும் திட்டமிட்டதுமான கவனிக்காமல்விடும் போக்கினாலேயே அவர்கள் சாவுக்குட்பட்டனர் என்று பாஸ்க் வலியுறுத்தியிருக்கிறார்.

இந்த மரணங்கள் தவிர்க்கப்பட்டிருக்கலாம் என்று கூறும் பாஸ்க் இதற்கான பொறுப்பு ஒரே ஒரு தனிநபர் மேலேயே சுமத்தப்பட வேண்டும் என்று கூறுகிறார். அந்த நபர் வேறுயாருமல்ல, எல்லோருக்கும் மேலான நேசநாட்டுக் கொமாண்டரான ஜெனரல் டுவைக்ஐசன் ஹோவர்தான் உணவு வழங்கப்படுவதைத் தடைசெய்தவர்.

**“போரில் நேசநாடுகளாய் இருந்த அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து ஆகியவை தாம் நாசிப்படைகளின் காட்டுமிராண்டித் தனத்துக்கு எதிராகவே போராடியதாக கூறினார்கள். அவர்கள் பத்துலட்சம் மனித உயிர்களை அந்த திறந்த வெளியினில் மரணத்தைத் தழுவிக்கொள்ளவிடும் போது நாசிக்களின் கொடூரங்களை மீறிய கொடூரங்கள் இவை என ஒருகணம் சிந்திக்கவில்லை.**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இந்த வீரர்களுக்கு பங்கீட்டு ணவை வழங்க ஐசன் ஹோவர் விரும்பியிருந்தால் அதற்குத் தேவை யான உணவு ஐரோப்பிய போர ரங்கில் இருந்ததாகக் கூறும் ஓய்வு பெற்ற அமெரிக்க கேணலும் அமெ ரிக்க இராணுவ வரலாற்றாளருமான ஏணெஸ்ற் எப்பிஷர் யூனியர், இந்த துன்பியல் நிகழ்வை போருக்குப் பிந்திய எமது வரலாற்றில் கறை படிந்து போய்விட்ட காலப்பகுதி அது என்று வர்ணித்திருக்கிறார்.

1945 மார்ச் மாதத்திலே ஐசன் ஹோவரின் தூண்டுதலின் பேரில் கூட்டு அதிகாரிகள் குழுத் தலை வர்கள் ஜெர்மானிய போர்க் கைதி களை 'ஆயுதம் களையப்பட்ட எதிரிப்படைகள்' என்று பெயர்மாற் றம் செய்துவிட்டு ஜெனிவா உடன் படிக்கைகளின் கீழ் அவர்களுக்கு கிடைக்கவேண்டிய கவனிப்புகளை அவர்களுக்குக் கிடைக்கவிடாமல் செய்துவிட்டனர். சர்வதேச செஞ்சி லுவைச் சங்கத்தினரால் இந்தக் கைதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட 13.5 மில்லியன் உணவுப்பொதிகள் அமெரிக்கக் களஞ்சியங்களிலேயே உளுத்துப்போய்க்கொண்டிருந்த அதேவேளை றைன்நதிக் கரையோ ரத்திலே 10 லட்சம் மனித உயிர்கள் பட்டினிச் சாவை நோக்கிச் சென்று கொண்டிருந்தன.

**உலகத்தின் கண்களுக்கு மறைக்கப்பட்ட இன்னொரு அமெரிக்க பயங்கரவாதச் செயல் இது. இந்தப் படுகொலைகளுக்கு காரணமானவர்கள் யுத்தக்குற்றவாளிகளாக நூரன்பேர்க்கில் விசாரிக்கப்படவில்லை.**

அது ஒரு பயங்கரமான காட்சி யாக இருந்திருக்க வேண்டும். இறந்து போனவர்களும் உயிரோடிருந்தவர்க ளும் ஒன்றாகவே அந்த திறந்த வெளியானதும் சேறும் சகதியுமான இடங்களில் இருக்கவிடப்பட்டார் கள். இறந்தவர்களுக்கு புதைகுழி வெட்டுவதற்கு உயிரோடிருந்தவர்க ளிடம் வலு இருக்கவில்லை. குழுக் குழுவாக அவர்கள் இறந்து போயி னர். இறுதியில் அவர்கள் எல்லோ ரையும் மரணம் பலிகொண்டது. 10 லட்சத்துக்கு மேலானோர் அங்கே அநியாயப்பலி கொடுக்கப்பட்டனர்.

'அதர் லொஸ்சஸ்' நூலில் சொல் லப்பட்டவற்றை அமெரிக்க இராணு வம் ஏற்றுக்கொள்ளவுமில்லை மறுக் கவுமில்லை. ஐசனே சுயசரிதையை எழுதியவரான நியுசெர்வியன் பல் கலைக்கழக வரலாற்றுப் பேராசி ரியர் ஸ்ரீபன் எம் புத்தாஸ் அந் நூலில் உள்ளடங்கிய பல விடயங் களை மறைத்தாலும் அது ஒரு முக்கியமான வரலாற்றுக் கண்டு பிடிப்பு என்று ஏற்றுக்கொண்டிருக் கிறார். "போரில் நேசநாடுகளாய் இருந்த அமெரிக்கா, பிரான்ஸ், இங்கி லாந்து ஆகியவை தாம் நாசிப் படைகளின் காட்டுமிராண்டித்தனத் துக்கு எதிராகவே போராடியதாக கூறினார்கள். அவர்கள் பத்துலட்சம் மனித உயிர்களை அந்த திறந்த வெளியினில் மரணத்தைத் தழுவிக் கொள்ளவிடும் போது நாசிக்களின் கொடூரங்களை மீறிய கொடூரங்கள் இவை என ஒருகணம் சிந்திக்க வில்லை. இவ்வாறாகக் காட்டு மிராண்டித்தனமான முறையில் இறக்கவிடப்பட்ட அந்த மனிதஜென் மங்களுக்கு அது ஒரு மிகுந்தவேதனை தரும் அனுபவமாகவும் சித்திரவதை யாகவும் இருந்திருக்க வேண்டும் என்று அவர் மேலும் கூறியிருக் கிறார்.

உலகத்தின் கண்களுக்கு மறைக் கப்பட்ட இன்னொரு அமெரிக்க பயங்கரவாதச் செயல் இது. இந்தப் படுகொலைகளுக்கு காரணமானவர் கள் யுத்தக்குற்றவாளிகளாக நூரன் பேர்க்கில் விசாரிக்கப்படவில்லை.

மூலம்: World Famous Genocides
By Nemisharan Mital

**தமிழில் வி. அருளாளன்**

## வழக்கத்தை மீறினார் சந்திரிகா

**சந்திரிகா அம்மையார் அண்மையில் செய்த காரியம் ஒன்று அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டதால் இதுவரையான தனது நடவடிக்கையின் போக்கிலிருந்து மாறி வழமையைத் தகர்த்து அவர் அன்று நடந்து கொண்டதே இதற்குக் காரணம்.**

ஐ. நாவுக்கான அமெரிக்க தூதர் பில் றிச்சட்சனும் குழுவினரும் சிறீலங்காவுக்கு வந்தி ருந்தனரல்லவா! அவர்களிற்கான வரவேற்பு நிகழ்வொன்று நடந்தது. அதற்கு சந்திரிகா அம்மையார் தமது வழக்கத்தை மீறிச் சரியான நேரத்துக்கு வந்துவிட்டார்! இதைக் கண்டே அனைவரும் ஆச்சரியத்தில் ஆழ்ந்துவிட்டனராம். சுதந்திர பொன்விழாக் கொண்டாட்டங்களிற்கு கூட சந்திரிகா 12 நிமிடங்கள் தாமதமாகவே சென்றிருந்தார் என்பது தெரிந்ததே. காரணம் அமெரிக்காவின் மீதான எதிர்பார்ப்பும் விசுவாசமும்தான் வேறென்ன?



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ஊழி



சென்ற இதழின் தொடர்ச்சி

"அது நம்புவதற்கு கடினமானது ராபீல்" கேணலுடைய வார்த்தைகள் மிக குளிர்மையானதாக இருந்தது.

"அது தான் உண்மை"

கேணலுடைய முகம் கவலை தோய்ந்ததாக தோன்றியது. தலையைக்குலுக்கிக் கொண்டான்.

"உன்னுடைய மருமகன் 'ஜீனஸ்' உன் மகளைக் கொன்றவர்களுடன் சேர்ந்துள்ளான். அது அவனுடைய அரசியல் இலட்சியம் என்று தெரிகிறது. வேறு என்ன நினைக்கமுடியும். ஆனால் நீ அவர்களுக்காக இரக்கப்படுகிறாய், நானானால்........"

"நான் எவ்வளவு மடையனாக இங்கே தங்கிவிட்டேன் நீ என்னை காணும் படியாக இன்னும் மடையனாகவா?" .... கிழவர் கேட்டார்.

"அநேகமாக உன் வயது உன்னை காப்பாற்றும். என்று நினைத்தாய்"

"நான் ஒரு தேசத் துரோகியல்ல" பெருமையோடு சொன்னார் பப்பா.

கேணல் மௌனமாக சில கணங்களுக்கு அவரை ஏறிட்டுப் பார்த்தான். பின் என்னை நோக்கித் திரும்பினான்.

"எங்கே வசிக்கிறாய்?"

"அந்த மலைப் பகுதியில்"

"ஏன் இந்த பள்ளத்தாக்கிற்கு வந்தாய்"

நான் பப்பாவைப் பார்த்தேன். அவருடைய கண்கள் என்னைக் கவனித்தன.

"வேலைக்கு ஐயா"

"உனக்கு வீட்டில் வேலை இல்லையா?"

"நான் பையனைக் கேட்டேன்" கேணல் கூர்மையாக எச்சரித்தான்.

"அங்கே உண்பதற்கு ஏதுமில்லை" நான் குறைந்தபட்சம் உண்மையைக் கூறினேன்.

கேணல் சிந்தனையில் ஆழ்ந்தான். பப்பாவை உற்றுப் பார்த்தான். பின் "இந்த மனிதனைத் தெரியுமா?" என்று என்னைக் கேட்டான்!

"ஆம் ஐயா!..... அவர் 'டொன் ராபீல், நில அதிகாரி'

"இவன் டொன் ராபீல்,.... ஒரு தேசத் துரோகி" கேணல் உறுமினான். நான் பதிலளிக்கவில்லை.

சட்டென்று அவனுடைய கை எண் மணிக்கட்டைப் பிடித்து பின்னோக்கி இழுத்தது. பின் அவன் என்னை மேல் நோக்கித் தூக்கினான். நான் வேதனையில் அலறினேன். என்னுள் தீ பரவுவதை உணர்ந்தேன்.

"இவன் உன்னுடைய பாட்டன்" காதுக்குள் கரகரத்தான். "உனக்குத் தெரியவில்லையா?" நான் மீண்டும் வீரிட்டேன், என் கையை அவன் மோசமாக நெரித்ததால், உயரத் தூக்கி என்னை தரையில் வீசினான். தலையின் ஒரு பக்கம் மோசமாக தரையில் மோதியது. நான் நிலத்தில் விழுந்து பலவீனமாக நகரமுடியாமல் குப்பையுள் ஊறிப்போய் கிடந்தேன்.

என் பப்பாவின் குரல் வித்தியாசமாக ஒலித்தது; உணர்ச்சியற்று குளிர்ந்துபோய்,

"அதை நீ தனியாகவே வாதிட்டு ஏற்றுக் கொள் கேணல், அழவைத்துக் கேட்பதால் யாரும் என் இரத்தத்தால் உன்னை திருப்தி செய்ய மாட்டார்கள். அது எங்கள் மரபு"

வாய்க்குள் சாபமிடும் சத்தம் கேட்டது. கூடவே எதுவோ மோதும் சத்தம்.

தலையைத் தூக்கிப்பார்த்த போது கேணல், பப்பாவின் அருகில் நின்று திரும்பினான். கைத்துப்பாக்கி இன்னும் அவன் கையில் இருந்தது. அந்த வயோதிபரின் முகத்திலிருந்து இரத்தம் வடிந்துகொண்டிருந்தது. அவருடைய தாடி ஏற்கனவே ரத்தச் சிவப்பாகியிருந்தது, ஆனால் உதடுகள் இறுக்கமாக மூடியிருந்தன.

அவன் கால்களை வீசி நடந்து அகன்றபோது மைக்கின் கைகள் என் கால்களை அசைப்பதை உணர்ந்தேன், கேணல் தன்படை வீரருக்கு உத்தரவிட்டான்.

"அவனுடைய உடலை ஈரமான தோல் பட்டியால் கட்டுங்கள். இப்போது அவன் வாயிலிருந்து சூரியன் உண்மையை வரவழைப்பானோ பார்ப்போம்"

என் தோள் வலியுடன் நான் கையை அசைத்தேன், என் மூச்சைப் பிடித்தபடி எழுந்து நின்றேன். பப்பா என்னை மௌனமாகப் பார்த்தார். பின் கண்களை ஒருகணம் மூடிக் கொண்டார். அவருக்குள் ஊடுருவும் வேதனையை என்னால் உணர முடிந்தது. என் கைகள் இயல்பாக எழுந்து...... ஆனால் மைக் என் கையைப் பிடித்து, கட்டாயமாக அப்புறம் திரும்பினான். அந்த உயர்ந்த



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

நடைபாதையில் நின்று கேணல் எங்களைக் கவனித்துக் கொண்டிருந் தான்.

படைவீரன் ஒரு வாளியில் நீர் கொண்டுவந்தான். பப்பாவின் முன் வாளியை வைத்தான், கையால் நீரை அள்ளி அவர் முகத்தில் அடித்தான். அந்த வயோதிபர் திடுக்கிட்டு துப்பினார், தலையைக் குலுக்கிவிட நீர் கண்கள் வழியாக அவரைச் சுற்றிக்கட்டியிருந்த தோல்பட்டியை நனைத்து அவரை ஒரு அங்குலமளவு நகர அனுமதித்தது. அவர் மீது வெயில் தாக்கத் தொடங்கியது. ஏற்கனவே வெள்ளையான தோல், அவர் நிறம் சிவப்பாக மாறி, கதிர்களால் வாடத் தொடங்கியது. தோல் பட்டி அவருடைய நெற்றியை அணுவணுவாக இறுக்குவதை என் னால் பார்க்கமுடிந்தது. தோல் பட்டி காய்ந்து சுருங்கி வந்தது, அவருடைய வாய் திறந்து கொண்டு காற்றுக்காக மூசியது.

என் பின்னே காலடியோசை கேட்டது. நான் திரும்பினேன். கேணல் எம்மை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தான். அவனு டைய கையில் நீண்ட கண்ணா டித்துண்டு. அவன் நடந்து வரும் போது என்னுள் குளிர்பாய்வதை உணர்ந்தேன். அது ஒரு பனிக்கட்டி யின் துண்டு. அவன் பப்பாவின் முன் நின்றான். அந்த பனிக் கட் டியை அவர் உதட்டுக்குநேரே உயர்த்தி உதட்டில் ஒரு துளியை விட்டான்.

"நல்லது டொன் ராபீல் என்னு டன் சேர்ந்து குளிரான மதுவருந்த லாமா"?

பப்பா பேசவில்லை. அந்த கண் ணாடியிலிருந்து பார்வையை விலக் கச் சக்தியற்றிருந்தார். அவருடைய உலர்ந்த உதடுகளை நாவால் தடவிக் கொண்டார்.

"ஒரு வார்த்தை" கேணல் கேட் டான் "ஆக ஒரேயொரு வார்த்தை, அது எல்லாவற்றையும் எடுத்து விடும்."

மிக முயன்று கண்ணாடியிலி ருந்து கண்களை அகற்றினார் பப்பா. நேராக கேணலின் கண்களைப் பார்த்தார். இகழ்ச்சியான குரலில், எங்கோ தொலைவிலிருந்து நான் எப்போதும் கேட்டிராத குரலில், "நீ அப்படி நினைப்பதற்கு நான் உன்னை ஆதரிக்கவேண்டும்......"

"நீங்கள் வேட்டைக்காரர்களை விட கேவலமானவர்கள். அவர்கள் அறியாமையுடையவர்கள். எனவே மன்னிக்கலாம். ஆனால் கடவுளின் முன் நீங்கள் என்ன செய்யப்போகின் றீர்கள்"

கண்ணாடி சக்கரத்தில் மோதிச் சிதறியது. உடைந்த கண்ணாடித் துண்டின் ஓரமொன்றை அந்த வயோதிபரின் வயிற்றுக்கு நேராகப் பிடித்தான் கேணல்,

"நீ பேசுவாய் கிழவா, நீ பேசு வாய்,"

பப்பா நீண்டதொரு பெருமூச்சு விட்டார். கேணலை நேராகப் பார்த்து, ஒரு அநாதரவான கூச்சல் அவர் தொண்டையிலிருந்து பீறிட்டு மடிந்தது. அவர் ஏன் கூச்சலிட்டார்? கண்ணாடித்துண்டு அவர் தலை யைக் கிழித்திருந்தது. நான் கூச்சலிட வாய் திறந்தேன். ஆனால் மைக் விரைவாக என் முகத்தை தன் வயிற் றுடன் இறுக அணைத்தான். நான் தணிந்துபோனேன்.

"அந்தப் பையனைப் பார்க்கவிடு"

மைக் மெதுவாக என்னை விடு வித்தான். ஆனால் அவனுடைய கைகள் என் தோளை அழுத்தி எச்சரித்தது. நான் கேணலைப் பார்த் தேன். அவனுடைய கண்கள் குளிர் மையாக இருந்தது. திரும்பிப் பப் பாவைப் பார்த்தேன். கட்டிலிருந்து தொய்ந்து போயிருந்தார். கண்ணாடி யிலிருந்து இரத்தம் சொட்டுச்சொட் டாக வடிந்து கொண்டிருந்தது. அது நிலத்தில் 'டப் டப்' பென விழுந்து கொண்டிருந்தது.

என் கண்களிலிருந்து கண்ணீர் வரத்துடித்தது. கேணல் அதைக் கவனிக்கவில்லை. பப்பா அதை விரும்பமாட்டார் என்பது எனக்குத் தெரியும். அவருடைய பார்வை மென்மை படர்ந்தது. அவருக்கு அது விளங்கியது என்பது தெரிந்தது. மீண்டும் அவர் கண்களை மூடிக் கொண்டார். உடல் தொய்ந்து தொங்கியது.

"அவன் இறந்து விட்டான்" படையினன் அறிவித்தான்.

கேணல் அவசரமாக கிட்டப் போய் குரூரமாக பெருவிரலால் அந்த வயோதிபரின் இமையை நீக்கிப் பார்த்தான்.

'இன்னும் இல்லை' என்ற அவனு டைய குரலில் திருப்தி தெரிந்தது. "அவன் அவ்வளவு சுகமாக சாகக் கூடாது.... இப்படி ஒரு கிழவான அவன் இன்னும் வாழவே விரும்பு வான்.....ம்..... மீண்டும் அவன் உயிர்க்கும் போது என்னைக் கூப்பிடு....."

கேணல் தன் மதிய உணவுக்காக மேலே போனான், அவன் நடை பாதையில் நடந்து வீட்டினுள் மறை யும் வரை பார்த்துக் கொண்டி ருந்தேன்.

"எங்களுக்குப் பசிக்கிறது" மைக் அங்கிருந்து இராணுவத்திடம் சொன் னான்.

"நீங்கள் அவனுடன் இல்லை என்பதற்காக சந்தோஷப்படுங்கள்." என்றான் ஒரு படைவீரன், பப் பாவை நோக்கி சைகை காட்டியபடி, மைக் என்னைப் பார்த்தான். பின் படைவீரனைப் பார்த்தான்.

"இவன் ஒரு குழந்தை. குறைந்தது அவனை நிழலுக்கு எடுத்துச் செல்ல லாவது கருணை காட்டுங்கள்."

அந்த இரண்டு படையினரும் ஒருவரையொருவர் பார்த்தனர். பின் ஒருவன் "சரி ஆனால் விளையாட முடல வேண்டாம்" என்று கூறி னான்.

மைக் என்னை வீட்டை நோக் கிக்கொண்டு சென்றான். தானும் தாழ்வார நிழலில் ஒதுங்கிக் கொண் டான். சாய்ந்து உட்கார்ந்தான். முதுகை படையினர் பக்கம் திருப்பி வீட்டைப் பார்த்தபடி கருண்டு கொண்டோம்.

"உன் தோள்கள் வலிக்கிறதா?" மைக் கிசுகிசுத்தான்.

"இல்லை" என்றேன். ஆனால் கொஞ்சம் வலித்தது. மைக் பக்க வாட்டாக வானத்தைப் பார்த்தான். இன்னும் சிலமணி நேரத்தில் சூரி யன் மறைந்து விடும். எங்கள் தோழர்கள் எம்மை விட்டுவிட்டு முகாமுக்கு திரும்பி விடுவார்கள்.

"கேணல் எங்களை என்ன செய்வான்"

மைக் அலட்சியமாக சொன் னான் "ஒன்றில் கொல்வார்கள் அல்லது விட்டுவிடுவார்கள்" அவன்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

குரலில் உண்மையான விடயம் அடங்கியிருந்தது.

"எல்லோருடைய பாதுகாப்பும் அந்த கிழவரில்தான் தங்கியுள்ளது. அவர் பேசினால் நாம் சாவோம், இல்லாவிட்டால் இல்லை."

"ம்..... நல்லது எங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் உண்டு,"

சட்டென்று எனக்கு ஒரு ஞாபகம் வந்தது.

"வரிசையில் வந்தபோது கேணல் கேட்டானே? அவர்கள் என்னைக் கொன்றிருக்க மாட்டார்களா?" என்று நான் கேட்டேன்.

"கொன்றிருக்கலாம்"

"ம்........"

"ஆனால் அப்போது அவர்கள் உன்னைக் கொன்றிருக்கலாம், ம்....." அவன் சிந்தித்தான் "எனக்கு கோபமில்லை ஆனால், ஏன் என்று விளங்கவில்லை". மைக் சொன்னான், "உன்னைக் காத்தது எதுவென்றால் அவர்களுக்கு நீ முக்கியமானவனாகையால்".

நான் பதிலளிக்கவில்லை.

"அவர்கள் உன் தந்தையைக் கேட்டு உன்னைத் துன்புறுத்தலாம். அவர் எங்கே ஒளித்திருக்கிறார் என்பது பற்றி உன்னால் அவர்களை நிறுத்த முடியாது. முடிவில் எப்படியாவது உன்னைக் கொல்வார்கள்."

இப்போது எனக்கு விளங்கியது. அதை செய்யும் வழி இதுதான், எமது வாழ்க்கையின் மையம் இதுதான். என் தோள்களுக்கு மேலாக திரும்பிப் பார்த்தேன். அந்த முதியவர் அமைதியாக தொங்கிக்கொண்டிருந்தார். சூரியன் அவர் உடலை எரித்துக் கொண்டிருந்தது, நான் மைக்கிடம் சொன்னேன்.

"நான் அவரைக் கொன்றுவிட விரும்புகிறேன்,"

மைக் என்னைப் பார்த்த பார்வையில் அன்பான ஒப்புதல் இருந்தது. "அவர் விரைவில் இறந்து விடுவார்" என்றான். "அமைதியாக, அவர் மௌனமாக இறக்க வேண்டும் என்று பிரார்த்திப்போம்"

"எழுந்து நில்லுங்கள்" பின் புறமாக சத்தம் கேட்டது.

"அந்த கிழவன் எழுந்து விட்டான். நான் கேணலைக் கூப்பிடப் போகிறேன்,".

கேணல் முகத்தைத்துடைத்தபடி வந்தான்.

"டொன் ராபீல்! என்னைத் தெரிகிறதா?"

பப்பாவின் கண்கள் அகலவிரிந்தன. குழப்பமாகப் பார்த்தவர் பின் "என் குதிரையை கொண்டு வாருங்கள்!" என்று திடீரென கத்தினார். "அந்தத் துரோகியைக் கொல்ல மலைக்குப் போகிறேன்".

"கேணல் திரும்பினான், அவனை கீழே, இழுத்துப் போட்டுக், கொல்லுங்கள், அவன் இனி எமக்கு உதவ மாட்டான்"

என்று கூறிவிட்டு திரும்பி நடந்தான். நடக்க முயன்றவனின் பார்வை என்மீது விழுந்தது.

"நீ இந்தக் கிழவன், உன்னுடைய பேரனா என்பதை இன்னும் சொல்லவில்லை"

நான் பதில் பேசவில்லை, அவன் உறையிலிருந்து கைத்துப்பாக்கியை எடுத்தான். அதன் ரவையறையிலிருந்து ஐந்து குண்டுகளைத் தன் உள்ளங்கையில் எடுத்தான். கையை பொத்திப் பிடித்து என்னிடம் காட்டினான்.

"இன்னும் ஒரு ரவை மீதமுள்ளது. நீ அவனைக் கொல்லப் போகிறாய்"

நான் மைக்கைப் பார்த்தேன். அவன் முகம் உணர்ச்சியற்றிருந்தது, நான் தாமதித்தேன்.

"நீ அவனைக் கொல்வாய்" கேணல் கத்தினான். கைத்துப்பாக்கியை என்னிடம் தந்தான்.

நான் கையிலிருந்த துப்பாக்கியைக் குனிந்து பார்த்தேன். அவன் கண்கள் எரிப்பதுபோல் மின்னின. இதில் ஒரேயொரு ரவைமட்டும்..... ம்..... அல்லது அவர்கள் என்னையும் மைக்கையும் கூட கொன்றுவிடலாம். நான் அப்பால் திரும்பினேன்.

நான் பப்பாவை நோக்கி முன்னேறினேன், பப்பா அமைதியாக இருந்தார். அவரது கடைவாயிலிருந்து இரத்தம் சொட்டுச் சொட்டாக வடிந்து கொண்டிருந்தது. ஆனால் அவருடைய கண்கள் சட்டென்று தெளிவாயின. "என்ன இது பையா?" நான் பேசவில்லை.

"உனக்கு என்ன வேண்டும் பையா?" "மீண்டும் கேட்டார். நான் துப்பாக்கியை உயர்த்திய போது என் வயிற்றில் ஒரு முடிச்சு இறுகுவதை உணர்ந்தேன். பப்பா அதைப் பார்த்தார். அசையவில்லை. ஒரு உறுதியான, சத்தியமான, வேதனையான புன்னகை, நான் விசையை இழுத்த அந்தக் கணத்தில் அவருடைய முகத்தில் தெரிந்தது.

விசை மீளவும், துப்பாக்கி என் கையிலிருந்து நழுவி என் காலடியில் விழுந்தது. அந்த முதியவரைப் பார்த்தேன். அவர் சக்கரத்தில் சாய்ந்திருந்தார். அவருடைய கண்கள் பார்வையற்று எங்களை வெறித்தன.

கேணல் திரும்பி நடந்தான். என் கண்கள் கலங்கின. பப்பாவைப் பார்த்தேன். கண்களிலிருந்து வெளிவரப் பார்க்கும் கண்ணீரை அடக்கிக் கொண்டேன். வாழ்வா? சாவா? அவர்களுக்கு இரண்டுமே தேவையில்லை. மைக் தன் கைகளால் என்னை அணைத்துக் கொண்டான். வீதியை நோக்கி நடந்தோம். இராணுவத்தினர் நாம் போவதை உணர்ச்சியற்றுப் பார்த்துக்கொண்டிருந்தனர் அவர்களது ஓசையைத் தாண்டி வேகமாக நடந்தோம். எமது எல்லையை அடைந்தபோது என் கண்ணீரும் எல்லையைக்கடந்தது. நான் கூச்சலிட்டேன்.

"நான் கொன்றுவிட்டேன். நான் அதை விரும்பவில்லை. ஆனால் பப்பாவைக் கொன்றுவிட்டேன்....."

மைக் தன்னுடைய காலடிகளை நிதானமாக வைத்து நடந்தான்.

"இதில் ஒன்றுமேயில்லை" என்னைப் பார்க்காமலே கூறினான்.

"அந்த முதியவர் இறந்ததே நல்லது. நாங்கள் உயிருடன் இருப்பதற்கு அதுதான் காரணம்"

★★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## இந்தியாவின் அணுகுண்டு சோதனைகள்;


# புதிய அணு ஆயுத அரசு உதயம்!



**"சக்தி 98" என்னும் குறியீட்டுப் பெயருடன் இந்தியா மேற்கொண்ட ஐந்து அணுகுண்டு வெடிப்புகள் மூலம் அது ஒரு அணு ஆயுத நாடாக மாற்றம் பெற்றுள்ளதுடன், அணு ஆயுத விடயத்தில் தன்னிறைவு பெற்ற ஒரு நாடாகவும் உள்ளதாக அறிவிக்கப் பட்டிருக்கிறது.**

மே மாதம் 11–ஆம் திகதி மாலை 3.45 மணிககு ராஜஸ்தான் பாலைவனத்திலுள்ள பொக்கிரான் என்னும் இடத்தில் மேற்கொள்ளப்பட்ட மூன்று வெடிப்புக்கள் மூலமும், பின்னர் 13–ம் திகதி நண்பகல் 12.31 மணியளவில் அதே இடத்தில் மேற்கொண்ட இரண்டு வெடிப்புக்கள் மூலமும் இந்தியாவின் அணுகுண்டு வெடிப்புப் பரிசோதனைகள் நிறைவு பெற்றுவிட்டதாக அது அறிவித்துள்ளது.

பொக்ரானில் முதல்நாள் நடைபெற்ற பரிசோதனையில் வெடித்த



அணுகுண்டு ஹிரோசிமாவில் வெடித்த குண்டைவிட இரண்டு மடங்கு சக்தி வாய்ந்ததெனவும், 43 கிலோ தொன் வெடிப் பொருள்களின் சக்தி வெளியிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பின்னர் 13–ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட வெடிப்புகளின் மூலம் அணுகுண்டு வெடிப்பின் அளவை கணிப்பீடு செய்யக்கூடிய பல தகவலகள் கணணிகள் மூலம் பெறப்பட்டதாகவும் இதில் தொடர்புடைய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஐந்து அணுவெடிப்புகள் மூலம் இந்தியா வெவ்வேறு தேவைகளுக்கும் வெவ்வேறு பிரயோகங்களுக்கும் உகந்த அணுகுண்டுகளை தயாரிக்கத் தேவையான சகல தரவுகளையும் பெற்றுவிட்டதாக இந்திய பாதுகாப்பு அமைச்சின் அறிவியல் ஆலோசகரும் இந்தப் பரிசோதனைகளில் முக்கிய பங்கேற்றவருமாகிய டாக்டர் அப்துல்கலாம் தெரிவித்திருக்கிறார்.

"இந்தியா இப்போது அணு ஆயுத வசதிபடைத்த நாடாகுமென வும், அதற்குத் தேவையான கட்டுப்பாட்டு முறையும், கட்டளை அமைப்பு வசதியும் அதனதன் இடத்தில் உள்ளன" என இந்தியப் பிரதமர் வாஜ்பாய் கூறியிருக்கிறார்.

இந்தியா தனது முதலாவது அணுகுண்டு வெடிப்புச் சோதனையை இதே இடத்தில் நடத்தி 24 ஆண்டுகள் பூர்த்தியாவதற்கு ஒரு வாரமே எஞ்சியிருந்த வேளை இந்த அணுகுண்டு வெடிப்புகள் நடத்தப்பட்டுள்ள போதிலும் உலக நாடுகள் எவையும் எதிர்பாராத தினத்தில் இவ் அணுகுண்டு வெடிப்புகள் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். குறிப்பாக உலகவல்லரசான அமெரிக்காவினதும் அதன் உளவு அமைப்புகளினதும் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு இரகசியமான முறையில் இவ் அணுகுண்டு வெடிப்புகள் நடத்தப்பட்டுள்ளன. அன்று மாலை இந்தியப் பிரதமர் வாஜ்பாய் இப் பரிசோதனையின் வெற்றி குறித்து செய்தியாளர்கள் மத்தியில் அறிவிக்கும்வரை உலக நாடுகள் எதுவுமே அணுகுண்டு வெடிப்பு பரிசோதனை குறித்து அறிந்திருக்கவில்லை.

இந்தியாவின் இந்த அணுகுண்டுச் சோதனை பற்றிய தீர்மானம் இந்த ஆண்டு ஜனவரியிலேயே வாஜ்பாயினால் எடுக்கப்பட்டுவிட்டதாகவும் இந்தியாவின் 12–வது பாராளு



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மன்ற தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமாக நடந்து கொண்டிருந்த வேளையில் பாரதீய ஜனதா கட்சியில் முக்கியஸ்தர்களான அடல் பிஹாரி வாஜ்பாய், எல்.கே. அத்வானி, ஜஸ்வந்சிங் ஆகியோர் அணு ஆயுதப்பரிசோதனை பற்றி ஆராய்ந்ததாகவும் பின்னர் பாரதீய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்ததும் அணு ஆயுதப் பரிசோதனைத்திட்டம் முடிவு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து மார்ச் மாதத்தில் இருந்து திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பமாகின. 1974–ஆம் ஆண்டு மே மாதம் 18–ஆம் திகதி இந்தியா தனது முதலாவது அணுகுண்டு வெடிப்புச் சோதனையை நடத்திய போது அதில் முக்கிய பங்காற்றி– ஓய்வு பெற்றிருந்த– டாக்டர் ராமண்ணா என்னும் விஞ்ஞானி அழைக்கப்பட்டு மார்ச் 20 –ஆம் திகதி இத்திட்டத்தின் கீழ் நியமனம் செய்யப்பட்டார்.

ஆனால் இவரது நியமனத்திற்கு முன்னரே அணுசக்தி ஆணையத்தின் தலைவர் ஆர் சிதம்பரம் (வயது– 62), பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் தலைவரும் பாதுகாப்பு அமைச்சின் அறிவியல் ஆலோசகருமான ஏ.பி.ஜே. அப்துல் கலாம் (வயது 62) ஆகியோருக்கு இந்த திட்டத்தை செயற்படுத்துமாறு அறிவுறுத்தல்கள் அனுப்பப்பட்டுவிட்டன.

இதனை அடுத்து பாபா அணு சக்தி ஆராய்ச்சி மையத்தின் விஞ்ஞானிகளின் ஓர் அணியும், ஜோத்பூர் பாதுகாப்பு சோதனைச்சாலையில் மற்றோர் அணியும் இதற்கான செயற்பாடுகளில் தீவிரமாக இறங்கின.

அணுகுண்டு வெடிப்புச் சோதனையை நடத்த இருக்கும் இடத்தைத் தயார் செய்யும் பணி அப்துல்கலாம் தலைமையிலான பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த அமைப்பின் கீழ்ப் பணியாற்றும் இராணுவப் பொறியியலாளர் அணியின் மெற்றாஸ், சிறப்புப் படையணி இடத்தைத் தயார் செய்தது.

அணுகுண்டு வெடிப்புச் சோதனையின் போது ஏற்படும் மாற்றங்களைப் பதிவு செய்ய தொலை உணர்வு கருவிகளும் சாதனங்களும் அப்பகுதியில் பொருத்தப்பட்டன.

அணுகுண்டு வெடிப்பினால் சுற்றாடலில் ஏற்படக் கூடிய கதிரியக்கத்தை அறியும் கருவிகள் பொருத்தப்பட்ட இந்திய விமானப்படை உலங்கு வானூர்திகள் தயார்செய்யப்பட்டன. இந்திய விமானப்படை விமானங்கள் அணுகுண்டு வெடிப்புக்குத் தேவையான கருவிகளையும் பொருட்களையும் பரிசோதனை நடத்தப்பட்ட பொக்ரான் பகுதிக்கு எடுத்துச் செல்ல உதவின.

அனைத்தும் தயார் நிலையிலிருந்தும் அணுகுண்டு வெடிப்புச் சோதனைகள் முப்படைத் தளபதியான ஜனாதிபதி கே. ஆர் நாராயன் தனது சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு இந்தியா திரும்புமட்டும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. மே மாதம் பத்தாம் திகதி அவர் நாடு திரும்பியதும் அன்றே அவரை பிரதமர் வாஜ்பாய் சந்தித்து இது குறித்து அறிவித்தார்.

இறுதியாக மே மாதம் 11–ஆம் நாள் காலை 8.00 மணிக்கு மூன்று அணுகுண்டுகளை வெடிக்கச் செய்யத் திட்டமிட்டபோதிலும் சோதனை நடத்தப்பட்ட பொக்ரானில் திசை மாறி வீசிய காற்றினால் மாலை வரை ஒத்திவைக்கப்பட்டு 3.45 மணிக்கு மூன்று குண்டுகளும் ஒரே சமயத்தில் வெடிக்க வைக்கப்பட்டன.

இந்த அணுகுண்டு வெடிப்புகளினால் உலக நாடுகளில் ஏற்பட்ட உணர்வலைகள் சற்றும் தனியமுன்னர் அதே இடத்தில் மேலும் இரண்டு குண்டுகள் ஒருநாள் இடைவெளி விட்டு வெடிக்க வைக்கப்பட்டதுடன் அணுகுண்டு வெடிப்புத் திட்டம் பூர்த்தி செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இவ்வாறான அணுகுண்டு வெடிப்புக்களை நடத்த 1995 டிசம்பரில் நரசிம்மராவ் ஆட்சிக் காலத்தில் தயாரிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன என்றும், ஆனால் விடயம் வெளியே பரவிவிட்டதையடுத்து அந்த முயற்சி கைவிடப்பட்டதென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இம்முறை இத்திட்டத்தின் செயற்பாடுகள் முழுவதும் இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தன. அரசியல் தலைவர்களைப் பொறுத்தவரை இந்தியப் பிதமர் வாஜ்பாய் உட்பட நான்கு பேருக்கு மட்டுமே இத் திட்டத்தின் செயற்பாடுகள் தெரியும் என தெரிவிக்கப்படுகிறது. இதனால் அமெரிக்காவின் அதிவல்லமை பொருந்திய சி.ஐ.ஏ.உளவு அமைப்புக்கு இவ் அணுகுண்டு வெடிப்புத் திட்டம் குறித்து அறிய முடியாமல் போய்விட்டது.

இதேவேளை, உலகை வானிலிருந்து ஊடுருவி கண்காணிக்கும் அமெரிக்காவினதும் ஏனைய வல்லரசு நாடுகளினதும் உளவு செய்மதிகளின் "கண்களில் மண் தூவும்" நடவடிக்கைகளும் இந்தியாவினால் மேற்கொள்ளப்பட்டன.

இந்தியாவின் ராஜஸ்தான் பாலைவனங்களில் மே மாதத்தில் வீசும் "மணற்புயல்" இந்த உளவுச் செய்மதிகளின் "கண்களை மறைத்து" விட்டதாக அமெரிக்கா கூறிக்கொள்கிறது. ஆனால், சண்டிப்பூரிலுள்ள திரிசூல் ஏவுகணைத் தளத்தில் ஏவுகணைப் பரிசோதனை நடைபெறுவது போன்று தோற்றத்தை ஏற்படுத்த பாரிய தளபாடங்களை நகர்த்தியதன் மூலம் உளவுச் செய்மதிகளின் கவனத்தை இந்தியா திசை திருப்பிவிட்டதாக வேறொரு தகவல் தெரிவிக்கிறது.

எவ்வாறாயினும், உளவு அமைப்புகளுக்கும் சாதனங்களுக்கும் "காப்புக்கட்டி" அவற்றை "இவ்விடயத்திலிருந்து விலக்கிவிட்டு" இந்தியா இந்தச் சோதனையை நடத்தி முடித்துவிட்டதை அமெரிக்கா ஒப்புக்கொண்டுள்ளது. இதுகுறித்த உயர்மட்ட விசாரணைக்கு உத்தரவிட்டும் உள்ளது. ஆனால் இதன் பின்னரும் இரண்டு தினங்களில் இந்தியா நடத்திய அணுகுண்டு வெடிப்பை முன் கூட்டியே அறியமுடியாது போனமை அமெரிக்க உளவு அமைப்புகளிற்கு பெரும் தோல்வியே.

இந்த நிலையில் "சர்வதேச அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தின் 9–வது பிரிவின் கீழ் இந்தியா இன்று அணு ஆயுத நாடு என்றும்" இந்தியா அதில் தன்னிறைவு பெற்றுள்ளது என்றும்" இந்திய விஞ்ஞானி அப்துல் கலாம் கூறியிருப்பது அர்த்தம் பொதிந்த கூற்றுக்களாகும்.

★★★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தமிழர் பிரச்சினை டெல்லியின் கதவுகளைத் தட்டுகிறது

**இன்னும் ஓரிரண்டு வருடங்களில் இந்தியா இன்னுமொரு தேர்தலை எதிர்நோக்க வேண்டியிருக்கலாம் என்ற எதிர்வு கூறல்களுக்கு மாறாக பி.ஜே.பி நிலையான அரசு ஒன்றை அமைந்துள்ளது.**

பதவி விலகிய கூட்டணி அரசு காங்கிரசில் தங்கியிருந்தது போல் காங்கிரஸ் மீதே கூட்டணி தங்கியிருக்க வேண்டியதேவை பி.ஜே.பி–க்கு இல்லை. சிறிய கட்சிகளை அணைத்துக் கொண்டாலே போதுமானதாகும்.

பி.ஜே.பி–யின் பிரதான தேர்தல் கூட்டணியான அ.தி.மு.க–வின் நட்புக் கட்சிகளான தென்னகத்தின் 39 ஸ்தாபனங்களில் 7–ஐக் கைப்பற்றிய வை.கோபாலசாமியின் மறுமலர்ச்சித்திராவிட முன்னேற்றக் கழகமும் டாக்கடர் ராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சியும் இருக்கின்றன.



சிறீலங்காவில், தமிழர் பிரச்சினைக்கு தமிழீழம் என்ற தனிநாட்டை உருவாக்குவதே ஓரே தீர்வாகும் என்ற உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை பா.ம.க–வும், ம.தி.மு.க–வும் கொண்டுள்ளன.

ஈழத்தமிழர்களின் கண்ணீரைத் திரு. கருணாநிதி துடைக்கத்தவறியதே தி.மு.க–வின் தோல்விக்குக் காரணம் எனத் தேர்தல் முடிவுகள் வெளியாகியபின் கருத்துத் தெரிவித்த திரு. வை. கோபாலசாமி கூறியிருக்கிறார். இதே போன்ற ஒரு கருத்தையே பாரிசில் இருந்து வெளிவரும் 'ஈழமுரசுக்கு' அளித்த பேட்டியில் டாக்டர் ராமதாஸ் எதிரொலித்திருக்கிறார். சோனியாவின் பிரச்சாரம் தமிழர்களிடையே எடுபடவில்லை என்றும் கூறியிருக்கிறார்.

**சிறீலங்காவில், தமிழர் பிரச்சினைக்கு தமிழீழம் என்ற தனிநாட்டை உருவாக்குவதே ஓரே தீர்வாகும் என்ற உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை பா.ம.க—வும், ம.தி.மு.க—வும் கொண்டுள்ளன.**

வி. அருளாளன்



இதே இதழில் பி.ஜே.பி–யின் உயர்மட்டத் தலைவர்களில் ஒருவரான திரு. கோவிந்தாச்சார்யார் கருத்துத் தெரிவிக்கும் போது தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சிறீலங்கா அரசு இராணுவ அணுகுமுறையை கைக் கொள்வதை பி.ஜே.பி அரசு ஆதரிக்காதென்றும் தமிழர் பிரச்சினையை தமது அரசு அனுதாபத்தோடேயே அணுகும் என்றும் கூறியிருக்கிறார்.

பி.ஜே.பி–யின் 251 ஆசனங்களில் கட்சிக்கு வெளியிலிருந்து கிடைத்திருக்கும் முக்கிய பெரிய கூறானது தென்னகத்திலிருந்து கிடைத்திருக்கிறது.

பதவி விலகிய கூட்டணி அரசிலும் இதுவே கதையாக இருந்தது. அப்போது திரு. மு. கருணாநிதியும் திரு. மூப்பனாரும் முக்கிய பாத்திரங்களை வகித்தார்கள். தேவகவுடா



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இராஜினாமாச் செய்ய நேர்ந்ததன் பின் தமிழ் நாட்டுக்காரர் ஒருவர், அதாவது, மூப்பனார் பிரதமராகும் வாய்ப்பும் ஏற்பட்டிருந்தது.

இன்றைக்கு தமிழ் நாட்டுப் பிரதிநிதிகள் இல்லாமல் இந்தியப் பாராளுமன்றம் எதுவும் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சர்வதேச மட்டத்தில் இந்தியாவைத் தமிழர்கள் பிரதிநிதித்துவப்படுத்தி வருகிறார்கள். எனவே மத்தியின் எமது (தமிழரது) அரசை அமைக்க எனக்கே வாக்களியுங்கள் என்று முன்னாள் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் பிரச்சாரம் செய்தார்.

இதேபோலவே பி.ஜே.பி அரசிலும் தமிழ் நாட்டு காரணி வலுவானதாக இருக்கும்.

கூட்டணி அரசு வகுத்த கொள்கைகளையே தி.மு.க வும் கைக்கொண்டதால் அது தமிழ் ஈழம் என்ற இலக்குக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பு எதையும் வழங்கவில்லை.

சிறிய கட்சிகளின் ஆதரவுடன் பி.ஜே.பி நிலையான அரசு அமைத்ததால் நிலைமை இதுவாக இருக்காது. உதாரணமாக தமிழீழத்துக்கு ஆதரவான கருத்துக்களை இந்தியப் பாராளுமன்றத்தில் வைத்து திரு. வை. கோபாலசாமி பயமின்றி வெளியிடமுடியும்.

இங்கே இரண்டு முக்கிய விடயங்களை நாம் கவனிக்க வேண்டும்.

காங்கிரஸ் கட்சி தமிழ் நாட்டில் அடியோடு தோற்கடிக்கப்பட்டுள்ளது. சோனியாவின் பிரச்சாரம் தமிழ் மக்கள் மீது எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. அவரது கணவரைக் கொன்றதாக குற்றம் சாட்டப்பட்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரிக்கும் பா.ம.க, ம.தி.மு.க ஆகிய கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்திருந்தபோது அ.தி.மு.க–வானது ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட சிறிபெரம்புத்தூரிலேயே பெரும் வெற்றி ஈட்டியிருக்கிறது.



தமிழ் நாட்டில் ஆழமான அடித்தளத்தை ஒரு காலத்தில் கொண்டிருந்த காங்கிரஸ் கட்சியின் எதிர்காலத்தை மீண்டும் கட்டியெழுப்புவது என்பது முடியாத காரியமாகப் போய்விட்டது. தமிழ் நாட்டு காங்கிரசில், மக்கள் மீது ஓரளவு கவர்ச்சியைக் கொண்டிருந்த ராமமூர்த்தியும் தமக்கென ஒரு பிராந்தியக் கட்சியை அமைத்துக் கொண்டு பிரிந்து போய்விட்டார். அவரும் அரசியல் ரீதியாகத் தப்பிப் பிழைத்திருப்பதற்கு அ.தி.மு.க வின் ஆதரவிலேயே தங்கியிருக்கிறார்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை காங்கிரசின் சவப்பெட்டியின் கடைசி ஆணியை இறுக்கும் தந்திரோபாய ரீதியான நோக்கத்துக்காக பி.ஜே.பியும் தமிழ் நாட்டின் ம.தி.மு.க, மற்றும் கா.ம.ம போன்ற கட்சிகளும் கைகோர்த்துக் கொண்டுள்ளன.

**ஈழக் கோரிக்கையை எவ்வாறாயினும் நசுக்க தனிப்பட்ட ரீதியாக முயற்சிகளை எடுத்துவரும் திரு.கதிர்காமர் வாஜ்பாயை சந்தித்து இலங்கை தொடர்பான இந்தியக் கொள்கைகளில் பா.ஜ.க மாற்றாங்களைச் செய்யாது என்ற உறுதிமொழியைப் பெறமுயன்றார்.**

தமிழ் நாட்டில் இப்போது காணப்படும் ஒரு ஒட்டுமொத்தப் போக்கால் இரண்டு தேசிய மட்டக் கட்சிகளான பா.ஜ.க வும் காங்கிரசும் உள்ளூரின் சிறிய/ பெரிய கட்சிகளின் மீது முழுமையாக தங்கியிருக்கவேண்டி ஏற்பட்டுள்ளது.

சிறீலங்காவின் ஆட்சி அமைப்பொழுங்கைப் பொறுத்தவரை புவியியல்சார் அரசியல் ரீதியான முக்கியமான விடயமாக இதனைக் கருத வேண்டியிருக்கிறது.

பா.ஜ.க ஆனது விடுதலைப்புலிகளுக்கு சாதகமான சிறீலங்காக் கொள்கையை கைக்கொள்ளக் கூடுமென பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு அஞ்சுகிறது.

ஈழக் கோரிக்கையை எவ்வாறாயினும் நசுக்க தனிப்பட்ட ரீதியாக முயற்சிகளை எடுத்துவரும் திரு. கதிர்காமர் வாஜ்பாயை சந்தித்து இலங்கை தொடர்பான இந்தியக் கொள்கைகளில் பா.ஜ.க மாற்றாங்களைச் செய்யாது என்ற உறுதிமொழியைப் பெறமுயன்றார்.

மகாராஷ்டிராவில் பா.ஜ.க மறுபக்கமாக விளங்கும் சிவசேனாவின் தலைவர்களுடன் விடுதலைப்புலிகள் சந்திப்பை மேற்கொண்டார்கள் என்று வெளியாகிய செய்திகளைத் தொடர்ந்தே கதிர்காமர் இந்த முயற்சியை மேற்கொண்டிருக்கக்கூடும்.

கதிர்காமர் விடயங்களைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை.

கொழும்பிலிருந்து செயல்படும் ஒரு மென்மையான சட்டத்தரணியான கதிர்காமருக்கு பாக்குநீரிணையின் இருபக்கமும் உலககெங்கணும் சிதறிப்போயும் இருக்கும் தமிழ் அரசியல் மனங்களின் நீண்டகால அடிப்படையிலான இலக்குகள் பற்றி புரிந்துகொள்ள முடியாது.

★★★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# எனது வாழ்வு

அந்தகாரத்துள்ளும்
கீற்றாய் ஒரு மின்னல் தெரிகிறது
திசைகள் தெரியாது தவிக்கையில்
எங்கிருந்தோ ஒரு விடிவெள்ளி முளைக்கிறது.
கழங்களுக்கிடையில் அமிழ்ந்து போகையில்
கரைசேர எனக்கொரு சிறுமரம் கிடைக்கிறது.
எப்படி இன்னமும் சாகாமல் பிழைக்கிறேன்.

மூச்சு நின்று போகும் கடைசித் தறுவாயிலும்
என்னை உயிர்ப்பித்தது எது ?
கருக்கப்பட்ட உயிருக்குள்ளேயும்
எது வந்து துளிர் விட்டது ?
நினைவுகள் வட்டமிட்டு வட்டமிட்டு
கொத்திக் கிழித்து ஈற்றில் - நான்
சரிகின்றபோது எனை எழுப்பிவைத்த
கனவு ஏது ?

மடியும் வரை வாழவேண்டும் என்ற
உயிர்த்துடிப்பு
இரவு விழுங்குகையில்
புலர்வைத் தேடி விழித்திருக்கும் என்
காத்திருப்பு.
சரித்துச் சரித்து எனை விழுத்தி
நான் விழுந்தழுத போதெல்லாம்
எழவேண்டும் என்றெனக்குள் எழுந்த சிலிர்ப்பு
கனவுகள் எரிந்து உருகியபோது
பீறிட்டுத் தெறித்த கொதிப்பு
இவைதான்;
இவைதான் இன்றுவரை
என்னைப் பிழைக்க வைத்தனர்
பென்னம்பெரிய அலைகளுக்கெல்லாம்
வளைந்துகொடுத்து
நீச்சலிட்ட எனக்கு சின்ன உலுப்பல்களாய்
சூறாவளிகள் இப்போ
வாழத் தெரிந்து விட்டேன்.
என்னைப் புறந்தள்ளிய
காலத்திற்குள் இருந்துகொண்டே
எனக்கென்றொரு கூடுகட்டத்
தொடங்கிவிட்டேன்.
இதுவரை என்று யாரும் நிறுத்திவிடா
நீட்சியில்
கணிப்பிட்டுக் கூறமுடியாத காலம்வரை
நான் வாழுவேன்;
எவற்றுக்கு நடுவிலும்
எந்தவரையறைக்கு அப்பாலும்
உயிரில் சுடர்விடும் நம்பிக்கையோடு.

-அம்புலி-

# என் மௌன ஓலம் உன் செவிகளுக்கு கேட்கிறதா?

ஆறாவது தடவையாக
என் விரல்களில்
உயிர் நகங்கள் பிடுங்கப்பட்டன.
ஐயோ அம்மா...
சமாதானம் சொன்ன
தேசத்தின் வாசலில் வைத்து
என்னை இழந்தேன்.
தெரியாது தெரியாது
ஆ .... ஐயோ...
பெற்றோல் நிரம்பிய பைகளின்
சுவாசத்தில்
என் முகம் அவிந்து போனது
சுடாதிங்க சுடாதிங்க...
சிகரட்டின் நெருப்புத் தலைகள்
நிர்வாண உடலை முத்தமிட்டன
ஆணுடம்புவரை பொசுக்கப்பட்டது
ஐயோ.... அம்மா
குதிக்கால்களும் வெட்டப்பட்டன
ஏன் கைது செய்யப்பட்டேன்
இன்னும் தெரியவில்லை
மின்சார வயல்கள்
ஒரு இரவு சூழ்ந்துகொண்டன
.... ஆ ....
இதயம் வேகமாய் அடிக்கிறது
சப்பாத்துக் கால்கள் வாய்க்குழிக்குள்
புகுந்து கிழித்தன
அம்மா...
மலவாசல்வரை
போத்தல்கள் செருகப்பட்டன
அம்மா... அம்மா...
இனி நான் வருவதுக்காய்
வாசல்களில் காத்திருக்காதே
அம்மா... அம்மா...

'இதயங்களை ஈரமாக்க' என்ற தலைப்பில் யாழ் ஆயர் இல்லம் வெளியிட்ட துண்டுப்பிரசுரத்திலிருந்து இந்தக் கவிதைக் குரல் ஒலிக்கிறது. இது யாழ்ப்பாணத்தில் இன்றைய நிலைமையைச் சித்தரிக்கும் ஒரு சாட்சிப் பதிவு.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



அச்சுப்பதிப்பு - வாசன் அச்சகம். லண்டன். 0181 646 2885

www.tamileelamarchive.com